26வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீடு (for your Home & Auto)

தூர்ந்த பணமாற்றும் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 பாலம் 13 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JULY 01, 2016

# ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுகிறது!

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேற வேண்டுமா என மக்களின் கருத்தை அறிய பிரிட்டனில் 2016 யூன் 23 இல் வாக்கெடுப்பு நடைபெற்றது. பிரிட்டனை தற்போது ஆளும் பழமைவாதக் கட்சியின் பிரதமர் David Cameron இவ்வாறு ஒரு வாக்கெடுப்பு நடத்துவேன் என்று தனது தேர்தல் வாக்குறுதியாக 2015 இல் கூறியிருந்தார்.

பிரிட்டனில் 46.5 மில்லியன் மக்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களாக இருந்தனர். இவர்களில் 72.2% ஆன (33 மில்லியன்) மக்கள் இந்த பொது வாக்கெடுப்பில் கலந்து கொண்டு தமது வாக்கைப் பதிவு செய்தனர். 2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் 66.1% ஆன மக்களே வாக்களித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நடைபெற்ற வாக்கெடுப்பின் முடிவு பல கருத்துக்கணிப்புகளை மீறியிருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேற வேண்டுமென 17,410,742 பேர் (51.9%) வாக்களித்திருந்தனர். ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து பிரிட்டன் இருக்க வேண்டுமென 16,141,241 பேர் (48.1%) வாக்களித்திருந்தனர்.

இந்த வாக்கெடுப்பு பலவிதமான பிரிவுகளை பிரிட்டனில் உருவாக்கிவிட்டது. பிரிட்டன் என்பது நான்கு சிறிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு பெரிய நாடு ஆகும். அந்த நான்கு நாடுகளும் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, வடஅயர்லாந்து, வேல்ஸ் ஆகியன. இவை நான்கும் இவ்வாக்கெடுப்பில் பின்வருமாறு வாக்களித்துள்ளன.



இங்கிலாந்து 53.2%உம, வேல்ஸ் 51.7% உம், வடஅயர்லாந்து 44.3%உம் மற்றும் ஸ்கொட்லாந்து 38.0%உம் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என வாக்களித்துள்ளன.

வடஅயர்லாந்தும், ஸ்கொட்லாந்தும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பிரட்டன் சேர்ந்து இருக்க வேண்டும் என வாக்களித் திருந்தாலும் அவர்களது சனத்தொகை இங்கிலாந்துடன் ஒப்பிடும்போது மிகக் குறைவு. இங்கிலாந்தின் சனத்தொகை 53 மில்லியன். மற்றைய மூன்று நாடுகளும் சேர்ந்து 10 மில்லியன் சனத்தொகையைக் கொண்டிருக்கிறன.

இதைவிட இப்போதுமக்களின் வாக்கெடுப்பை வயதிற்கு ஏற்ப பிரித்து ஆராய்ந்தால் பிரிட்டனில் இளையோர் தமது நாடு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிவதை விரும்பவில்லை எனத் தெளிவாகத் தெரிகிறது. வயது முதிர்ந்தோரே ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் பிரிந்து செல்லவேண்டும் என விரும்புகின்றனர் எனத் தெட்டத்தெளிவாகத் தெரிகிறது.

18 வயதில் இருந்து 24 வயது வரை உள்ளோரில் 25%உம்
25 வயதில் இருந்து 49 வயது வரை உள்ளோரில் 44%உம்
50 வயதில் இருந்து 64 வயது வரை உள்ளோரில் 56%உம்
64 வயதிற்கு மேற்பட்டோரில் 61%உம்
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேற வேண்டும் என வாக்களித்துள்ளனர்.

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

வீடு,வியாபார நிலையம் வாங்க விற்க..
Kannan Nadarajah
416-889-1083

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
SUBRA Financial Solutions Inc.
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1
MORTGAGE ALLIANCE

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
416-712-2006
5-Years Fixed at 2.49%
Lock your mortgage while interest rates are low!

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-85
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca


Homes, Condos, Business, Land, Farms, Rural Homes...!
Scarborough/Kingston Rd
$599000.00
4 yrs 2100 sft, 4 bm 3 wsrm semi detach
Warden n St clair
3 bm/ 3 wsrm minutes to subway
Sheppard Ave E & Hwy404
412,888/-
Newer Monarch Condo rented 1800/- investment, South/West Corner Suite With Unobstructed City View. Excellent Layout 876 Sq. Ft.+ 55 Sq. Balcony, Hardwood; Fairview Mall & Subway; Minutes To Hwy 404&401. Concierge, Large Exercise Room, Indoor Swimming Pool, Guest Room, Steam Room, Bbq Deck Fr Entertaining, Designer Decorated Special Occasion/ Party Room With Server Y, Bar Area, Seating Lounge , Flat Scream Tv , Billiard Table
Markham /castlemore
3 bm 4 wsrm 2900 sqft $1149k
Kawartha Lakes ontario
611.84 Acre
611+ Acres In 3 Separate Par-
Eglinton/mccowan
3 bm/ 3 wsrm minutes to subway
Near Simcoe lake
3260 Sqf Ft Apb On A 50 Foot Lot.
4 bm 4 wm new home
0.5% Listing commission
Pat Pushpakanthan
Real Estate Broker
Hall of Famer
Our MLS listing include:
Free Professional Photography
Free Professional virtual tour
Free custom website of your home
Free Home Staging
Free Feature Sheets
Free UTube Video
Free Online Marketing
, Open house and more..
416-894-1187
PAT WILL BEAT ANY DEAL*!!
To buy Home, New Condos, commercial, Farms, Lands..
Call Me For Free service!
Century 21
BROKERAGE AFFILIATE REALTY INC
OFF: 416-290 1200
poomi2025@gmail.com
Profit From 15 years of Real estate Success
*From , valid only upto june 15/16, *Not intended to solicit existing buyers and sellers, under contract
Eglinton/ Midland
$519k
Newer Roof Shingles ***
Hardwood Floor 3 bm/ 2wsrm
County Road 47 Rd Ramara on
$155 k 99 acres
On Paved Road Near Brechin And Lake Simcoe ,Vacant Land
Kingston Rd/ West Of Midland
Store With Apt/ Restaurant
Great Opportunity For Investment Property Or Own To Operate Your Restaurant


TORONTO
Celebrate
CANADA DAY
SCARBOROUGH
FREE Event for the Whole Family
Citizenship Ceremony
Live Entertainment
YMCA Kids Zone
Public Market & Food Fair
Bouncy Inflatables
Bollywood (July 2nd @ 7:45pm)
Scarborough Hospital Foundation Brave T.O. Challenge
Scarborough Rosewood Food Drive
12 - 10PM | July 1 & 2, 2016
Scarborough Civic Centre
150 Borough Drive (McCowan & Hwy 401)
www.CanadaDayScarborough.ca
COMPUTEX
LANKASRI
For event info or vendor opportunity, please contact 647-293-4422 (Srini)


Friends
MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email ஊடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257

# ஐரோப்பிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பழமைவாதக் கட்சி அரசு இததேர்தலை நடத்தினாலும் அதன் தலைவரான பிரதமர் David Cameron தனது கட்சியினரை சுதந்திரமாக பிரச்சாரம் செய்ய விட்டார். David Cameron உட்பட ஒரு பகுதியினர் மிகவும் தீவிரமாக ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் தொடர்ந்து இருக்கவேண்டுமென பிரசாரம் செய்தனர். பழமைவாதக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும் லண்டன் முன்னாள் நகர முதல்வருமான Boris Johnson ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் பிரிந்து செல்ல வேண்டுமென பிரச்சாரம் செய்தார். இவர் ஒரு ஊடகவியலாளராக இருந்தவர். ஆரம்பத்தில் இரண்டுபக்கக் கருத்துக்களை யும் பத்திரிகையில் எழுதியவர். பின்னர் பிரிட்டன் பிரியவேண்டும் என்ற நிலைப் பாட்டை எடுத்துத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தார்.

ஏனைய கட்சிகளான தொழிற்கட்சியும் (Labour), Liberal Democrat கட்சியும் பிரிட்டன் பிரியக்கூடாது என்றும் UKIP எனப்படும் சுதந்திரக்கட்சி பிரிட்டன் பிரிய வேண்டும் எனவும் பிரச்சாரம் செய்து வந்தன. இதை வைத்துக்கொண்டு இந்த வாக்கெடுப்பில் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் எவ்வாறு வாக்களித்துள்ளனர் எனப் பார்த்தால், பழமைவாக்கட்சியினர் 57% உம் தொழிற்கட்சியினர் 31% உம் Liberal Democrat கட்சியினர் 27% உம், UKIP கட்சியினர் 93% உம் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேற வேண்டுமென வாக்களித்துள்ளனர்.

இதைவிட கல்வி அறிவின்படி மக்கள் எவ்வாறு வாக்களித்திருந்தனர் எனப்பார்த் தால் உயர்தரவகுப்பும் (A level) அதற்கு மேல் பல்கலைக்கழகப் படிப்பும் படித்தவர் கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் பிரிவதை விரும்பவில்லை. உயர் தரவகுப்புவரை படித்தவர்கள் (GCSE) ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் பிரிய வேண்டுமென வாக்களித்துள்ளனர். GCSE வரை படித்தவர்களில் 66% உம் உயர்தர வகுப்பு (A level) படித்தவர்களில் 46%உம், பட்டப்படிப்பு வரை படித்தவர்களில் 48% உம் பட்ட மேற்படிப்பு படித்தவர்களில் 29% உம் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேற வேண்டுமென வாக்களித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் குடிவரவு குடிய கல்வு கொள்கையே பிரிட்டனை சேர்ந்த வயது வந்தவர்கள் உட்பட பிரிந்து செல்ல ஆதரவாக வாக்களித்தவர்களது முதலா வது காரணமாக இருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தை சேர்ந்த 28 நாட்டுமக்களும் எங்கு வேண்டுமானாலும் தங்கு தடை யின்றி போக்குவரத்து செய்தல், குடியேறு தல், வேலை செய்தல் போன்றவற்றிக்கு அனுமதிக்கப்பட்டனர். இதனால் பெருமளவு தெற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பிய மக்கள் பிரிட்டனுக்கு இடம்பெயரத் தொடங்கி விட்டனர். 2015 இல் மட்டும் பிரிட்டன் 333,000 பேரை உள்வாங்கியிருந்தது. இதுவே UKIP எனப்படும் சுதந்திரக்கட்சி யின் தலைவர் Nigel Farage தனது தேர்தல் பிரசாரத்தில் முன்வைத்த குடிவரவுக்கு எதிரான பிரசாரத்திற்கு



முக்கிய காரணமாக இருந்தது.
இவர் தெற்கு மற்றும் கிழக்கு ஐரோப்பிய மக்கள் பிரிட்டனுக்குள் வந்து மிகவும் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்வ தால் பிரிட்டன் மக்களுக்கு சம்பளமும் குறைந்து வேலைகளும் குறைந்து விட்டது என்று பிரச்சாரம் செய்திருந்தார். பிரிட்டன் குடிவரவாளர்களுக்கு கனடா மற்றும் அவுஸ்திரேலியா மாதிரி புள்ளிகள் வழங்கி அதனடிப்படையிலேயே அவர்களை பிரிட்டனில் குடியேற அனுமதிக்க வேண் டும். இவ்வாறு இத்தேர்தலில் பிரிட்டன் பிரிந்து செல்ல வேண்டும் என வாதிட்டவர் கள் கருத்தினை முன்வைத்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் பிரிய வேண்டும் என இப்போது 52% மக்கள் வாக்களித்துள்ளனர். அப்படியாயின் என்ன நடைபெறும்? இதற்கு இலகுவான பதில் இல்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டதிட்டங்களின்படி அதாவது 'Article 50' இன்படி ஒரு உறுப்பு நாடு வாக்கெடுப்பு மூலம் பிரிய வேண்டுமானால் இந்த Article 50இன் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் தமது பக்கம் தோல்வியடைந்தவுடன் பிரிட்டனின் பிரதமர் David Cameron பதவி விலகி விட்டார். அவர் புதிய பிரதமர் தெரிவு செய்யப்படும் வரை 2016 ஒக்ரோபர் மட்டும் பதவி வகிப்பார். புதிய பிரதமரே நாடு பிரியவேண்டுமென Article 50இன் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்தில் விண்ணப்பிக்க வேண்டும். அதன்பின்னர் உறுப்பினர் நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் தங்கள் நாடாளுமன்றத்தில் விவாதித்து தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும். இதற்கு ஆகக்குறைந்தது 2 வருடங்கள் எடுக்கும்.

பிரிட்டன் பிரிவதற்குரிய நிபந்தனைகளை விதிக்கும் உரிமை இந்த 27 நாடுகளுக் கும் உண்டு. இது ஓரளவுக்கு இலகுவான தென்றாலும் பிரிட்டனுக்கான புதிய வியாபார வரி மற்றும் வியாபார விதிமுறை களைத் தீர்மானிக்க குறைந்தது ஐந்து வருடங்கள் ஆதல் செல்லுமென 'Telegraph' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.





Toronto District School Board

# Trustee Parthi Kandavel

Dear families,

It has been a privilege to serve as a trustee on the Toronto District School Board. This year we celebrate the first annual Tamil Heritage Month at the TDSB. As part of the month's celebrations we held poetry, art, and essay competitions, with great participation from kindergarten to Grade 12. The month also provided our children the opportunity to celebrate Tamil culture within their schools.

Now this month we celebrate the birth of Canada, our country, which has given us so many gifts, the most important of which is access to a quality public education. For education is the strongest way to give each child a chance to reach their full potential.

It's worth remembering not only how we've benefited from Canada, but also the sacrifices and love that parents make on behalf of their children. We see the results of their dedication in our 2016 Graduates, whom I'd like to congratulate and wish a fun and safe summer!

Best wishes,

அன்புடையீர்,

ரொறன்ரோ மாவட்டக் கல்விச்சபையின் அறங்காவலராக மக்களுக்குப் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பை நான் பெரும் பேறாகக் கருதுகின்றேன். குறிப்பாகக் கல்விச்சபையில், தமிழர் மரபுரிமை மாதம் என்ற கொண்டாட்டத்துக்கான அங்கீகாரத்தைத்தைப் பெற்று, முதற்றடவையாக தமிழர் மரபுரிமை மாத நிகழ்வுகள் கடந்த ஜனவரி மாதம் சிறப்பாக நடைபெறவும் நான் பங்காற்றியிருந்தேன்.

தமிழ் மரபுரிமை மாதக் கொண்டாங்களை முன்னிட்டு, பாலர் வகுப்பு முதல் 12ம் வகுப்புவரையான  மாணவர்களிடையே கவிதை, கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளும் நடத்தப்பட்டு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்பட்டன. அதேவேளை தமிழ் மாணவர் தாம் பயிலும் பாடசாலைகளிலும் பிற மாணவரோடு இணைந்து தமிழர் பண்பாட்டு நிகழ்வுகளைக் கொண்டாடினர்.

இது நாம் எமது நாடான கனடாவின் பிறந்தநாளை கொண்டுகின்ற மாதம். உயர்நத வாழ்வுக்கான வளங்களைத் தந்திருக்கும் கனடா, உயர்தரம் மிக்க கல்விக்கான வாய்ப்புகளையும் எமக்கு வழங்கியிருக்கின்றது என்பது முக்கியமானதாகும்.

இந்தக் கல்வியானது ஒவ்வொரு மாணவரும் தமது முழுத் திறன்களையும் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கும் வலிமையான வழியாகத் திகழ்கின்றது.

இந்த நல்ல நாளில் நாம் வளம் தரும் கனடாவை நினைவு கூறுவதோடு, அர்ப்பணிப்போடும் பேரன்போடும் தமது பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்தும் பெற்றோரையும் நான் நினைவு கொள்கின்றேன். 2016ம் ஆண்டுக்கான கல்விப் பெறுபேறுகளில் இதன் விளைவுகளை நாம் காண முடியும்.

தேர்வுகளில் வெற்றி பெறும் மாணவர்களை வாழ்த்துவதோடு, அனைவருக்கும் இக்கோடைகால விடுமுறை மகிழ்வானதாகவும் பாதுகாப்பானதாகவும் அமைய நான் வாழ்த்துகின்றேன்.

நன்றி!

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC BROKERAGE
#1 Brokerage in Toronto*
Brokerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல்
பிரச்சினையா ?

- நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?
- ரீபைனான்ஸ் செய்ய வேணும்?
- 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க வேணும்?



- பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?
- வீடு வாங்க, விற்க, வாடகைக்கு விட அல்லது எடுக்க வேணும்?



மற்றும் உங்கள் அனைத்து விதமான
மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்...

BEST RATE GUARANTEED

MORTGAGE IN ANY SITUATION

"மோட்கேஜ் கிளினிக்" ✓
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

வோக் இன்
சனி 9.00 - 5.00 மணிவரை



எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

# வடக்கிற்கான பொருளாதார மையம் வேறு இடம் நகரப் போகின்றதா?

நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு வேலைத் திட்டமும் அந்தந்த பிரதேசங்களில் வாழுகின்ற மக்களை பாதிக்காதவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்காக முதலில் அப்பிரதேச மக்களிடமும், அப்பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்து கின்ற அரசியல் தலைமைகள் மற்றும், அதிகாரிகளின் அபிப்பிராயங்களையும் பெறுதல் அவசியமானது. அந்த வகையில் செயற்படாததால், வட மாகாணத்தில் அமைக்கப்படவிருந்த பொருத்து வீட்டுத் திட்டம் பொருத்தமற்றது என்று பலத்த எதிர்ப்பு கிளம்பியது.

21 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட விருந்த இந்த வீடுகள் பொருத்தமற்றது என்பதுடன் இந்தச் செலவில், வடக்கின் கலாசாரம் மற்றும், காலநிலைக்குத் தகுந்த வாறு மூன்று வீடுகளை அமைக்கலாம் என்றும் வட மாகாண சபையினர் சுட்டிக் காட்டியிருந்தனர். இதனை அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலரும் ஏற்றுக்கொண்டனர். இது சர்ச்சைக்குள்ளானமைக்கு காரணம் இவ்வீட்டுத் திட்டம் குறித்து வடக்கின் நிர்வாகத்தை நடத்தும் வட மாகாணசபை யினரிடம் முதலிலேயே கலந்தாலோசிக் காமையே ஆகும்.

**- விகிர்தன் -**

தற்போது, மேலும் ஒரு முக்கிய திட்டம் ஒன்று சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. 200 கோடி ரூபா செலவில் வடக்கில் அமைக்கப் படவிருக்கும் பொருளாதார மையத்திற்கு எந்தப் பகுதியில் இடத்தை ஒதுக்குவது என்பதே இன்று ஏற்பட்டுள்ள சிக்கலாகும்.

வவுனியாவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ள இந்தப் பொருளாதார மையத்திற்கு தாண்டிக் குளம் உள்ளிட்ட சில பகுதிகளில் காணிகள் தெரிவு செய்யப்பட்டன. ஆனால், அவை பொருத்தமற்ற பகுதிகளாக அவதானிக்கப் பட்டு, ஓமந்தையில் அதனை அமைக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. அதற்கான காணி களும் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் காட்டப்பட்டது. ஆனால், வவுனியா நகரை அண்டியே அதற்கான காணி வேண்டும் என அரசாங்கத் தரப்பில் அடம்பிடிப்பதாக கூறப்படுகின்றது. அவ்வாறு காணி காட்டப்படா விட்டால் அந்த பொருளா தார மையம் மதவாச்சியில் அமைக்கப்படும் என்றும் இப்போது கூறப்படுகின்றது.

இத்திட்டத்தை எவ்வாறாயினும் இழுத்தடித்து வேறு பிரதேசத்திற்கு கொண்டு செல்லும் நோக்கத்தில் சதி வேலை நடைபெறுவதாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிக்கின் றார். கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இந்த சதித் திட்டத்தை தான் அவதானித்த தாகவும் முதலமைச்சர் குறிப்பிடுகின்றார்.



பொருளாதார மையம் வவுனியாவில் நிறுவுவது சம்பந்தமாக தமக்கு அறிவிக்கப் பட்டதும் ஐந்து இடங்களை அடையாளம் கண்டு அவற்றில் எது சிறந்தது என்று நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்துக் கேட்ட தாகவும், அவர்கள் தாண்டிக் குளத்திலும் மற்றைய மூன்று இடங்களிலும் அமைப்பது பொருத்தமற்றதெனவும், ஓமந்தையில் அமைப்பதே சிறந்தது என்றும் கருத்து வெளியிட்டதாகவும் அவர் கூறுகின்றார்.

தாண்டிக்குளத்தில் அமைத்தால் அங்குள்ள விவசாயக் கல்லூரியும் விவசாயப் பண்ணை யும் பாதிக்கப்படும் என்று கூறினார்கள். வேறு பல காரணங்களையும் முன்வைத்தார்கள். எனவேதான் ஓமந்தையில் நிறுவுமாறு கிராமி ய பொருளாதார அமைச்சரிடம் தான் கேட்டிருந்ததாகவும் ஆனால் தாண்டிக் குளத்தில் தான் அமைக்க வேண்டும் என அமைச்சர் ரிசாட் பதியுதீனும் கூறுவதாகவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு வரவேண்டிய, வரக்கூடிய பல திட்ட அமைவுகளையும் சூறையாட நடவடிக்கைகள் திரை மறைவுகளில் நடக் கின்றன என்றும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றம் சாட்டுகின்றார். மற்று மொரு புறம், தாண்டிக்குளம் பண்ணை அமைந்துள்ள பிரதேசத்தில் பொருளாதார மையம் அமைவதே உசிதமானது என வன்னி மாவட்டத்தின் ஏனைய இரு நாடாளு மன்ற உறுப்பினர்களும் மாகாணத்தின் பிறிதொரு அமைச்சரும் தெரிவிப்பதோடு, வவுனியா மாவட்டத்தின் 16 பொது அமைப்புக்களும் வலியுறுத்தி வருகின்றன.

உண்மையில், இந்த பொருளாதார மைய மானது வடக்கில் அமைக்கப்படுவதானது வட மாகாண மக்களுக்கு ஒரு வரப் பிரசாதமானதாகும். வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் இதனால் பயனடைவர். வவுனியா மாவட்டத்தில் வவுனியாவிற்கு வடக்கில் அமைந்துள்ள ஓமந்தையில் அமைப்பதுதான் பொருத்தமான-தெனில் அதற்கு எவரும் தடையாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

உண்மையில் பார்க்கப்போனால், கிளிநொச்சி கூட இதற்கு பொருத்தமான பிரதேசமே யாகும், முன்னர் இயல்பாகவே ஒரு பொருளாதார மையமாக கிளிநொச்சி இயங்கியதை இங்கு குறிப்பிடலாம்.

வடக்கில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களிலிருந்தும், கிளிநொச்சி யின் தெற்கே வட மாகாணத்திற்குட்பட்ட பகுதிகளிலிருந்தும் விவசாய உற்பத்திப் பொருட்கள் கிளிநொச்சிக்கு வரும். தென்னிலங்கையிலிருந்தும் வரும். இதனூ டாக, வடக்கின் பொருட்கள் தென்னிலங் கைக்கும், தெற்கின் பொருட்கள் வடக்கிற் கும் பரிமாற்றம் செய்யப்படும். இதற்கான மையமாக அக்காலங்களில் கிளிநொச்சியே திகழ்ந்தது.

வாரத்தில் இரு நாட்களில் அதாவது, சனிக் கிழமையும் புதன்கிழமையும் இந்த நடவடிக்கைகள் இடம்பெறும். 83ம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தையடுத்து இந்த நடவடிக்கை இல்லாமல் போனது. போர் இல்லாமலிருந்திருந்தால் தம்புள்ளயில் தற்போது இயங்கும் பொருளாதார மையம் கிளிநொச்சியிலேயே அமைக்கப்பட்டிருக்க லாம்.

தற்போது போர் முடிவிற்கு வந்துள்ள நிலைமையில் வடக்கில் பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொள்ள திட்டங்கள் உள்ளன. சர்வதேச நாடுகளும் அதற்கான உதவிகளை வழங்க முன்வந்துள்ளன. முன்னைய மஹிந்த அரசாங்கம் அதற்கு பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்தது. கடந்த வருடம் ஜனவரியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் அதற்கானதொரு சுமுக நிலை தோன்றியுள்ளது.

தமிழ் மக்களின் ஆதரவோடு அமைக்கப் பட்டுள்ள தற்போதைய அரசாங்கம் தமிழர் வாழும் பிரதேசங்களில் பல்வேறு அபிவிருத் தித் திட்டங்களை மேற்கொள்ள கடமைப் பட்டுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கில் பல வாழ்வாதார, அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வது அத்தியாவசிய மானதாகவும் உள்ளது. அத்துடன் இனவாத மற்ற, நல்லிணக்க நடவடிக்கைகள் மூலம் சர்வதேச சமூகத்தினருக்கு அரசாங்கம் அதன் உண்மைத் தன்மையை நிரூபித்து காட்ட வேண்டிய தேவையும் உள்ளது.

ஆனால், சரியான நெறிமுறைகளை கவனத்திற் கொள்ளாமல் மேற்கொள்ளப் படுகின்ற திட்டங்களால் பல்வேறு முரண்பாடு கள் ஏற்படுகின்றன. இதனால் அவை நடைமுறைப்படுத்தப்படாமல் போகும் நிலையும் ஏற்படுகின்றது. வடக்கின் வவனியா மாவட்டத்தில் அமைக்க தீர்மானிக்கப் பட்டுள்ள இந்த பொருளாதார மையம் எங்கே அமைவது பொருத்தமானது என்பது தொடர்பில் வட மாகாணசபை அமைச்சர்கள் மத்தியிலேயே முரணான கருத்துக்கள் காணப்படுவதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் குறிப்பிடுகையில், இந்த பொருளாதார மையத்தை வவுனியாவில்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரைக் கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜுலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து ஜனவரி 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப் பார்த்து வருகிறோம்.

2016 நொவம்பர் 8இல் நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருக்கும் இரு பிரதான கட்சிகளான ஜனநாயகக் கட்சிக்கும் குடியரசுக்கட்சிக்குமான ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு அமெரிக்காவின் 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களிலும் நடந்து முடிவடைந்துள்ளது.

## ஜனநாயகக்கட்சி

ஜனநாயகக்கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவதற்கு நாடு முழுவதும் தெரிவு செய்யப்படும் 4,765 பிரதிநிதிகளில் குறைந்தது 2,383



பேரின் ஆதரவை வேட்பாளர் பெற வேண்டும்.

நாடு முழுவதும் நடந்து முடிந்த தேர்தலில் ஜனநாயகக்கட்சியின் வேட்பாளர்களான Hillary Clinton 2,220 பேரின் Bernie Sanderes 1,1831 பேரின் ஆதரவையும் பெற்றுள்ளார்கள். இதில் எவருமே ஜனாதிபதி வேட்பாளரை உறுதிசெய்ய தேவையான மிகக்குறைந்த 2,383 பேரின் ஆதரவை பெறவில்லை.

எனவே தாம் விரும்பும் ஜனாதிபதி வேட்பாளரை ஜனநாயகக்கட்சியின் தேசிய மாநாட்டில் ஆதரிக்கும் உரிமை உள்ள ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் உட்பட மீதமுள்ள 714 பிரதிநிதிகள் முடிவில் தான் யார் ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என்பது தங்கியுள்ளது.

ஜனநாயகக்கட்சியின் தேசிய மாநாடு 2016 யூலை 25 இல் Philadelphia, Pennsylvania இல் நடைபெற உள்ளது. இம்மாநாட்டிற்கு முன்னரே இந்த 714 பிரதிநிதிகளில் தற்போதைய ஜனாதிபதி Barack Obama உட்பட 591 பேர் Hilary Clinton ஐ ஆதரிப்போம் எனவும், 48பேர் Bernie Sanders ஐ ஆதரிப்போம் எனவும் கூறியுள்ளனர். ஆக 75 பேரே இன்னமும் தாங்கள் யாரை ஆதரிப்போம் என்று வெளிப்படையாக கூறவில்லை.

Hilary Clinton இற்கு ஜனாதிபதி வேட்பாளராக தெரிவுசெய்யப்பட இன்னமும் 163 பிரதிநிதிகளின் ஆதரவே தேவை என்பதாலும் ஏற்கனவே 591 பேர் Hilary Clintonஇற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாலும் Hilary Clinton ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வருவது நிச்சயம் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இது யூலை 25இல் நடைபெற உள்ள ஜனநாயகக்கட்சியின் தேசிய மாநாட்டிலேயே உறுதி செய்யப்படும்.


## குடியரசுக்கட்சி

குடியரசுக்கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவதற்கு நாடு முழுவதும் தெரிவு செய்யப்படும் 2,472 பிரதிநிதிகளில் குறைந்தது 1,237 பேரின் ஆதரவைப் பெறவேண்டும்.

நாடு முழுவதும் நடந்து முடிந்த தேர்தலில் குடியரசுக்கட்சியின் வேட்பாளரான Donald Trump 1,542 பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றுள்ளார். இதுவரை யாருக்கும் தமது



ஆதரவை தெரிவிக்காத கட்சி உறுப்பினர்களாக 31 பிரதிநிதிகள் மட்டுமே உள்ளனர். இதனால் ஊடகங்கள் எல்லாம் தற்போதே Donald



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

தொடர்ச்சி 10ஆம் பக்கம்...

எங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு அமைப்புக்கான நிதி, இந்த வருடம் 1 பில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையால் அதிகரிக்கும்.

ஒன்ராறியோ மக்கள் அனைவரும் அவர்களுக்குத் தேவையான பராமரிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக, புதிய மற்றும் சிறப்பான வழிகளில் முதலீடு செய்தல் என்பதன் கருத்து இதுதான்:

- 700 புதிய மருத்துவர்கள் மற்றும் சிறப்பு வல்லுநர்கள்
- 35 மருத்துவமனைகள் தற்போது, புதுப்பிக்கப்படுகின்றன, நவீனமயமாக்கப்படுகின்றன அல்லது விரிவாக்கப்படுகின்றன
- வீட்டில் பராமரிப்பதற்காக அல்லது சமூகத்தில் பராமரிப்பதற்காக, 250 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்படுகின்றது
- காத்திருக்கும் நேரத்தைக் குறைப்பதற்காகவும், பராமரிப்பு அணுகலை மேம்படுத்துவதற்காகவும், 345 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்படுகின்றது

இக்காலத்துக்கும் எதிர்காலத்துக்குமான வலுவான சுகாதார அமைப்பொன்றை இந்த முதலீடுகள் உறுதி செய்கின்றன.

ontario.ca/bettercare

ஒன்ராறியோ அரசாங்கத்தினால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario




- ஆதித்தன் -

# கூட்டமைப்பில் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களுக்கான குழு நியமனம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்துடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை நடத்துவதற்காகவென குழு ஒன்றை நியமித்துள்ளது. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த 25ம் திகதி நடைபெற்றபோது, இக்குழு நியமிக்கப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளையும் சேர்ந்த மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், கோவிந்தன் கருணாகரம், ஹென்றி மகேந்திரன், என். ஸ்ரீகாந்தா, சிவநேசன் (பவன்), ஆர்.ராகவன் ஆகியோர் மேற்படி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகளின் சார்பில் தலா இருவர் வீதம் எட்டுப் பேர் இதன்போது அமைக்கப்பட்டுள்ள குழுவில் இடம்பெறுகின்றனர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா ஆகியோரும், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன், ரெலோவின் மூத்த உறுப்பினர் என். ஸ்ரீகாந்தா ஆகியோரும், ஈ.பி.ஆர்.எல்.எப். சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும், புளொட் சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஆர்.ராகவன் ஆகிய எட்டுப் பேருமே இந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர். இவர்களில் ஐவர் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள். சம்பந்தன் எதிர்கட்சித் தலைவராகவும் இருக்கின்றார்.

இனி வருங்காலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளை இக்குழுவினரே மேற்கொள்வர் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் நீண்டகால பிரச்சினையான அரசியல் தீர்வு குறித்தும் மற்றும், காணாமல் போனவர்கள் பிரச்சினை, அரசியல் கைதிகள் விடுதலை, காணிகள் விடுவிப்பு உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் கையாள்வதற்கும், அவை தொடர்பில் அரசாங்கத்துடன் உத்தியோகபூர்வமாக கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கும் இக்குழுவே செயற்படும்.




இவ்வாறானதொரு குழுவினை ஆரம்பத்திலேயே அமைத்திருந்தால் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் இன்று நிலவும் முரண்பாடுகளை தவிர்த்திருக்கலாம். இப்போது காலம் தாழ்த்தியே இது அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஜனவரி மாதம் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர், புதிய அரசாங்கத்திடம் தமிழ் மக்கள் எதிர்பார்த்த பிரதான விடயங்கள் எவையும் நடைபெறவில்லை என்பதால், அவர்கள் மத்தியில் புதிய அரசாங்கத்தின் மீதும் நம்பிக்கை இழக்கும் நிலை ஏற்பட்டு வருகின்றது. குறிப்பாக, வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பலவும் நிறைவேற்றப்படவில்லை. புதிய அரசாங்கத்துடன் நெருங்கி செயற்பட்டு வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் இதனால் அதிகம் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

இவர்கள் இருவருமே அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நம்பி தமிழ் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியவர்கள். அரசாங்கம் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத காரணத்தினால் தமிழ் மக்களிடம் முகம் கொடுக்க முடியாத நிலை இவர்களுக்கு உருவாகியிருப்பதோடு, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் கடுமையான விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் அவர்கள் மீது சுமத்தப்பட்டு வருகின்றன.

தமிழரசுக் கட்சியை சார்ந்த சம்பந்தனும், சுமந்திரனும் தன்னிச்சையாக செயற்படுகின்றனர் எனவும், அரசாங்கத்தின் பொய்யான வாக்குறுதிகளை நம்பி தமிழ் மக்களை ஏமாற்றி வருகின்றனர் என்றும் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. குறிப்பாக ஈ.பி.ஆர்.எல். எவ் கட்சியைச் சேர்ந்த, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஸ் பிரேமச்சந்திரன் கடுமையான விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்து வருகின்றார் என்பதை அனைவரும் அறிவர்.

கொழும்பில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், தேர்தல் முறைமை மாற்றம், புதிய அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை, மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பாக ஐ.நாவுக்குப் பொறுப்புக் கூறுவதில் அரசு காட்டும் துரிதமற்ற செயற்பாடுகள், வட மாகாண சபையில் முதலமைச்சர் மற்றும், அமைச்சர்கள்-உறுப்பினர்களுக்கிடையில் காணப்படும் முரண்பாடுகள், ஊழல், மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை வெளியிட்டனர்.

2016ஆம் ஆண்டிற்குள் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படுவதாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் உறுதியளிக்கப்பட்ட நிலையில் அதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படவில்லை என்பது குறித்தும், தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு உட்பட தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு அரசியல் சாசன ரீதியாக தீர்வொன்றை எட்டுவதாக இருந்தால் அது தொடர்பாக அரசுடன் உத்தியோகபூர்வமான பேச்சுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் வலியுறுத்திக் கூறின.

இந்நிலையிலேயே இவ்வாறான ஒரு குழுவை நியமிக்க கூட்டமைப்பின் தலைமை இணங்கியுள்ளதாக தெரிகின்றது. நல்ல முடிவுகளை - தீர்வுகளை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் ஒரு சிலர் மட்டும் நடவடிக்கைகளில் இறங்கி மக்களிடம் நற்பெயர் வாங்கலாம் என்ற நிலை மாறி, ஏமாற்றம் ஏற்படுகின்ற போது அதன் பழியை தாங்கள் தனித்து பெற்றுக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்ள வேண்டும் என்கின்ற நிலைப்பாட்டிற்கு சிலர் வந்துவிட்டதாகவே இப்போது எண்ணத் தோன்றுகின்றது.

மக்கள் சார்ந்த பொது விடயங்களில், அந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகளின் கூட்டு செயற்பாடு என்பது இன்றியமையாதது. இதுவே பலம் வாய்ந்ததாக இருக்கும் என்பதோடு, உள்ளுக்குள் ஏற்படும் முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்வதாகவும் அமையும். இந்த கூட்டுச் செயற்பாடு தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் சரியாக முன்னெடுக்கப்படவில்லை. அதுவும், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர் கூட்டமைப்பிற்குள் முரண்பாடுகளும் விரிசல்களும் அதிகரிக்கத் தொடங்கின.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கிடையில் என்ன முரண்பாடு என்பதை சரியாக விளக்கினால், அது, பிரதான கட்சியான தமிழரசுக் கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் இடையே உள்ள முரண்பாடுகள்தான். தமிழரசுக் கட்சி ஏனைய கட்சிகளை புறமொதுக்கி விட்டு செயற்படுவதான குற்றச்சாட்டே ஏனைய கட்சிகளால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட பிரதானமான விடயங்களை கையாள்வதில் தமிழரசுக் கட்சி தனித்து நிகழ்ச்சி நிரல்களை வகுத்து செயற்படுவதாகவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இன்றைய நிலையில், தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடு நிலவுவது மட்டுமல்லாமல், வட மாகாண சபைக்கும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலும் முரண்பாடுகள் உள்ளன. அது மட்டுமன்றி, வடமாகாண சபைக்குள்ளேயே முதலமைச்சருக்கும் ஏனைய சில அமைச்சர்கள் - உறுப்பினர்களுக்கிடையில் முரண்பாடு.

வட மாகாணசபையில் ஆரம்பத்தில் ஆளும் தரப்பிற்கும் எதிர் தரப்பிற்குமிடையில் வாத விவாதங்கள் ஏற்படுவதுண்டு. இன்று ஆளும் தரப்பினருக்குள்ளேயே விவாதங்களும் கூச்சலுமாக இருப்பதை காணமுடிகின்றது. எதிர் தரப்பினர் இதனைப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கின்றனர்.

தங்கள் வாக்குகளால் நாடாளுமன்றத்திற்கும், மாகாண சபைக்கும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தங்களுக்குள் முரண்படுகின்றமையானது தமிழ் மக்களுக்கும் கடுமையான விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை கூட்டமைப்பின் தலைமை தற்போது உணரத் தொடங்கியிருப்பது போலவே தெரிகின்றது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

விளம்பரம்™
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன், தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.
பதிப்புரிமை: 2004 விளம்பரம் ப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.




3+2 Bedrooms, 2 W Room
Fenced Lot With 2 Car Parking
Plus Detached Garage




2+1 Bedrooms, 1 W Room
Bungalow In Beautiful Mussleman's
Lake Area Of Stouffville




3 Bedrooms, 2 W Room
Walk-Out Basement,
Upgraded Main Floor, White Kitchen




4 Bedrooms, 4 W Room
Second Floor Laundry,
Open Living Room/Dining Room




3 Bedrooms, 2 W Room
Main Bathroom Update
W/Granite Counter




4 Bedrooms, 4 W Room
Finished Basement By The Builder
New Fenced Lot




4 Bedrooms, 3 W Room
Modern Kitchen With
Granite Counter Top




3+1 Bedrooms, 3 W Room
Alarm System,
Interior Garage Door Entrance




3+1 Bedrooms, 4 W Room
Large Eat-In Breakfast Area
Modern Open Concept Kitchen




4 Bedrooms, 3 W Room
Oak Staircase. Gorgeous Open Kitchen
With New Granite Countertop




3+1 Bedrooms, 3 W Room
Walk Out To Deck And Landscaped
Fenced Backyard




4 Bedrooms, 3 W Room
Upgraded Viking Professional
Kitchen W/Quartz Counter Top




3 Bedrooms, 3 W Room
Large Master Bedroom With
Sumptuous Ensuite Bath





5 Bedrooms, 4 W Room
California Shutters +
Pot Lights Throughout




5 Bedrooms, 8 W Room
Oak & Wrought Iron Railings,
Theater Room Projector & Movie Chairs

KZG 647-200-5833



Sell your home
**faster**
and more **money**

RE/MAX Platinum Club Award

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**
Sales Representative
**Direct 416 - 276-1225**
Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# அமெரிக்க...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

Trumpயைத் தான் குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் எனக் கூறுகின்றன. குடியரசுக்கட்சியின் தேசிய மாநாடு 2016 யூலை 18இல் Cleveland, Ohio இல் நடைபெற உள்ளது. இந்த தேசிய மாநாட்டிலேயே குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் உறுதி செய்யப்படுவர்.

எக்காரணத்திற்காக தன்னை குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என தேசிய மாநாட்டில் உறுதி செய்யப்படா விட்டால் தான் சுயேட்சை வேட்பாளராக இந்த அமெரிக்க ஜனாதிபதிக்கான பொதுத்தேர்தலில் போட்டியிடுவேன் என Donald Trump ஏற்கனவே ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

## பொதுத்தேர்தல்

மேற்குறிப்பிட்ட ஜனநாயக்கட்சி மற்றும் குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கள் உட்பட இதுவரை 1,756 பேர் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வேட்பு மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர்.

இவர்களில் தேர்தல் செலவுகளுக்காக தமது சொந்தப் பணத்தை செலவிட்டு பிரசாரங்கள் செய்து வருபவர்கள் 404 வேட்பாளர்கள் மட்டுமே. அதிலும் இதுவரை $200,000 இற்கு மேல் தமது பணத்தை செலவழித்து பிரசாரம் செய்துவரும் 27 வேட்பாளர்களை மட்டுமே ஊடகங்கள் முதன்மை வேட்பாளர்களாக கருதுகின்றன. இந்த 27 பேரும் இதுவரை $864 மில்லியன் டொலரை ஜனாதிபதி தேர்தலுக்காக செலவு செய்துள்ளதாக கணக்கு காட்டியுள்ளனர்.
இந்த 27 பேரில் ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களான 6 பேரும் குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் களான 18 பேரும் உள்ளனர். இந்த 24 பேரில் இருவர் 2016 யூலையில் நடைபெறும் இவ்விருகட்சிகளினது தேசிய மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டு விடுவர்.

எனவே ஊடகங்களால் கருதப்படும் $200,000 மேல் தமது சொந்தப்பணத்தை செலவழித்து பிரசாரங்கள் செய்து வரும் முதன்மை வேட்பாளர்களாக இருக்கும் மீதி மூவரையும் பற்றிப் பார்ப்போம்.

### *Libertarian Party*


இந்தக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை தேர்வு செய்யும் மாநாடு 2016 மே 26 தொடக்கம் 30வரை Orlando, Florida இல் நடைபெற்றது. இக்கட்சியின் சார்பில் வேட்புமனு தாக்கல் செய்திருந்த ஆறுக்கு மேற்பட்ட வேட்பாளர்களில் Gary Johnson என்பவர் Libertarian partyயின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டார். இவர் New Mexico இன்



Governor ஆக இருந்தவர். இவர் 2012 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிட்டவர். இவர் இதுவரை $669,000 இற்குமேல் தனது தேர்தல் பிரச்சாரங்களுக்கு செலவிட்டிருகிறார்.

### *Green Party*

இந்தக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக Jill Stein தெரிவு செய்யப்



பட்டுள்ளார். இவர் 2012 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலும் போட்டி யிட்டவர். இவர் 2012 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அதிகூடிய மக்களின் வாக்குகளை பெற்ற பெண் ஜனாதிபதி வேட்பாளர் ஆவர். இவர் ஒரு வைத்தியராக தொழில் புரிகிறார். இவர் இதுவரை $652,000 இற்குமேல் தனது தேர்தல் பிரச்சாரங்களுக்கு செலவிட்டிரு கிறார்.

### *Independent*

சுயேட்சையாக போட்டியிடும் Jr. James Henry Webb எனப்படும் Virgiaia ஐ சேர்ந்த முன்னாள் Senator தான் மூன்றாவது முதன்மை ஜனாதிபதி வேட்பாளராகும். இவர் முதலில் ஜனநாயக் கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை போட்டியிட திட்டமிட்டிருந்தார். பின்னர் சுயேட்சை வேட்பாளராக வேட்புமனுவை தாக்கல் செய்தார். இவர் $776,000 இற்கு மேல் தனது தேர்தல் பிரசாரங் களுக்கு செலவிட்டிருந்தாலும் இறுதி நேரத்தில் போட்டியில் இருந்து விலகி விடுவார் என ஊடகங்கள் எதிர்வு கூறுகின்றன.

June 27, 2016 இல் நடைபெற்ற கருத்துக்கணிப்புகளின்படி Clinton இற்கு 47.8% ஆதரவும் Trump இற்கு 42.1% ஆதரவும் இருக்கிறது. Colorado மற்றும் Pennsylvania போன்ற மாநிலங்களில் Clinton 1% ஆல் முன்னணியில் நிற்கிறார். இதனால் தேர்தலுக்கு இன்னமும் 4



மாதங்கள் இருப்பதால் தேர்தல் நேரத்தில் முடிவு எவ்வாறு இருக்கும் என இப்போது உறுதியாகக் கூற முடியாது.

ஜனாதிபதியை உத்தியோகபூர்வமாக ஜனவரி 20, 2017 இல் தெரிவு செய்யும் 'தெரிவாளர்கள்' 538 பேரே நொவெம்பர் 08, 2016 இல் தெரிவு செய்யப்படுகிறார்கள் என 2016 மார்ச் 15 விளம்பரம் இதழில் பார்த்திருந்தோம். மேலே கூறப்பட்ட கருத்துக்கணிப்பு வீதத்தைத் தெரிவாளர் எண்ணிக்கையில் பார்த்தால் Clinton ஐ ஆதரிக்கும் தெரிவாளர்கள் 281 இல் இருந்து 358 வரையில் தெரிவு செய்யப்படலாம். அதேபோல் Trump ஐ ஆதரிக்கும் தெரிவாளர்கள் 180 இல் இருந்து 257 வரையில் தெரிவு செய்யப்படலாம். எப்படிப் பார்த்தாலும் தற்போதைய நிலவரங்களின்படி Clinton ஐ ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டிய ஆகக் குறைந்த 270 தெரிவாளர்களை விட அதிகம் தெரிவாளர்கள் Clinton இற்கு ஆதரவாக நொவெம்பர் 08, 2016 இல் தெரிவு செய்யப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.


MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC
mhc

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS • SKIN PROBLEM • RESPIRATORY PROBLEMS • DIGESTIVE PROBLEMS • VARICOSE VEINS • BACK PROBLEM /NECK PROBLEM • TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP • ALLERGIES • SEXUAL PROBLEMS • SEXUAL PROBLEMS • CHOLESTEROL • TUMOR • FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# ரொறொன்ரோ ஆதனச் சந்தை

**நாமும் நமது இல்லமும்**

**ராஜா மகேந்திரன்**

**தொடர் 466**

| ஆண்டு | சராசரி ஆதன விலை |
|---|---|
| 2005 | $335,907 |
| 2006 | $351,947 |
| 2007 | $351,941 |
| 2008 | $379,347 |
| 2009 | $395,460 |
| 2010 | $431,276 |
| 2011 | $465,014 |
| 2012 | $497,130 |
| 2013 | $522,958 |
| 2014 | $566,624 |
| 2015 | $622,121 |

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் ஒவ்வொரு ஆண்டுகளுக்கான ஆதனத்தின் (வீடு/மனை) சராசரிவிலை உள்ளது.

இந்த விலை ரொறொன்ரோவிற்கானது. இவ் அட்டவணையில் விலையின் அதிகரிப்பைக் காணக்கூடியதாக உள்ளது. மேலும் ஆண்டு 2010 இலிருந்து இவ் விலை மாற்றம் அதிகமாக இருப்பதனைக் காணலாம். இவ்விலை அதிகரிப்பு கடந்த 11 ஆண்டுகளில் மட்டுமல்ல, 1997 இலிருந்தே ஏற்படத்தொடங்கியது. இது வரையான விலை அதிகரிப்பில் இதுவே நீண்டகால அதிகரிப்பாக காணப்படுகின்றது. 2008/2009 இல் சிறிய இறக்கம் ஏற்பட்ட போதிலும் மொத்தமாக பார்க்கும் போது நீண்டகால அதிகரிப்பாகவே கொள்ளலாம்.

கனடிய மத்திய வங்கியின் ஆளுனரின் அறிக்கை யூன் 09, 2016 அன்று வெளிவந்தது. இந்த அறிக்கையில் ரொறொன்ரோ மற்றும் வன்கூவரின் ஆதன விலை அதிகரிப்பு பற்றிய விடயம் முக்கிய பங்கை எடுத்துக் கொண்டது. ஒருவகையில் இது வரையிலான விலை அதிகரிப்பு பலவிதமாக நியாயப்படுத்தப்பட்டிருந்தாலும் இந் நிலைமை தொடரும் என்பதில் ஐயம் எழுப்பியுள்ளது. இன்றைய பல கொள்வனவாளர்கள் / ஆதனம் வாங்குபவர்கள் எதிர்கால விலை அதிகரிப்பை மட்டுமே



நோக்கமாக கொண்டு வாங்குவதாகவும் குற்றம் சூறியுள்ளது. நீண்டகால குறைந்தளவான அடமானக்கடன் வட்டிவீதமும் மக்களின் கொள்வனவிற்கு உறுதுணையாக இருப்பதனையும் அது குறிப்பிடத் தவறவில்லை. அதேநேரத்தில் அதிகமான அடமானக்கடன் (Mortgage Loan Amount) மக்களின் கடன்பழுவை அதிகளவில் அதிகரிப்பது நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்காது என்பதனையும் கூறியுள்ளது.

அத்துடன் ஒவ்வொரு வருடத்திலும் இரு தடவை கொண்டு வரப்படும் இவ் Financial Stability Report (FSR) அறிக்கை கடந்த டிசம்பர் 2015 இல் இருந்த நிலைமையை விட யூன் 2016 இன் அறிக்கை ஆதன விலையின் அதிகரிப்பு மிகவும் கரிசனைக்குரியது என்பதும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் ஆதன விலையில் 15% அல்லது 25% விழுக்காடு ஏற்பட்டால் என்ன விதமான நிலைமை ஏற்படும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. ரொறொன் ரோ பெரும்பாகத்தில் 30 வருடகால மாக ஆதன விற்பனை வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் மதிப்பிற்குரிய Daryl King இன் அறிக்கையிலும் இன்றைய விலை அதிகரிப்பு சிறந்ததல்ல எனவும், அரசு உரிய நிலைப்பாடு எடுக்கப்படல் வேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

இந்த அறிக்கையில் மத்தியவங்கியின் ஆளுனர் ஸ்டீபன் பொலோஸ் (Stephen Poloz), மத்திய நிதி அமைச்சர் பில் மோனோ (Bill Morneau) மற்றும் முக்கிய நிதி நிறுவனங்களின் பொறுப்பானவர்களும் விலை அதிகரிப்பை கட்டுப்பாட்டிற்கும் கொண்டு வரப்படல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளனர். நீண்ட காலம் புலி வரும் என்று பயப்படுத்தி கொண்டு இருக்கமுடியாது.




# கூட்டமைப்பில்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

அடுத்து வரப்போகின்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் மக்களின் இந்த உணர்வுகள் வெளிப்படுத்தப்படவும் கூடும். அவர்கள் மாற்றுக் கட்சி ஒன்றிற்கு வாக்களிக்காமல் விட்டாலும் முன்னரைப் போல, வாக்களிப்பில் ஆர்வம் காட்டாமல் விடக் கூடிய நிலைமை ஏற்படலாம். இதனை முக்கியமாக கூட்டமைப்பு கட்சிகளின் தலைமைகள் தற்போது புரிந்து கொண்டுள்ளதாலும் ஒரு பொறிமுறை பற்றி சிந்திக்கும் நிலை ஏற்பட்டிருக்கலாம்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள அதாவது, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் சமமான பிரதிநிதிகளைக் கொண்ட இந்தக் குழுவானது அரசாங்கத் துடன் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தை களில் ஈடுபடுவதோடு, சர்வதேச பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபடவும், வட மாகாண சபையின் பிரச்சினைகளை கையாளவும் அதிகாரமளிக்கப்பட்ட குழுவாகத் திகழ வேண்டும்.

இந்தக் குழுவினால் தீர்வுகள் எந்தளவு விரைவு படுத்தப்படும் என்பதை விடவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் எழும் சந்தேகங்களையும், அதனால் ஏற்படும் விரிசல்கள் - முரண்பாடுகளையும் கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்க்கலாம்.

# வடக்கிற்கான...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

அமைப்பதா அல்லது ஓமந்தையில் அமைப்பதா என்பதல்ல இப்போதைய பிரச்சினை அது தெற்கின் வேறு மாவட்டத்திற்கு செல்லாமல் தடுக்க வேண்டியதே இப்போது முக்கியமானது என்கின்றார்.

இந்த பொருளாதார மையத்தை வவுனியா நகரிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்குள்ளேயே அமைக்க வேண்டும் என்பது மத்திய அரசின் கோரிக்கையாக உள்ளது என்றும், அது நியாயமான கோரிக்கை எனவும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிவமோகன் தெரிவிக்கின்றார். இதற்கு வட மாகாண முதலமைச்சர் உடன்பட வேண்டும் என்றும், வீணான முரண்பாடுகளை வளர்த்து வவுனியா மாவட்டத்திற்கு கிடைக்க வேண்டிய பயனை இல்லாமல் செய்யும் நடவடிக்கைக்கு துணை போகக் கூடாது என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு வட மாகாணசபைக்குள்ளும், வடக்கின் தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையிலும் வடக்கு முதலமைச்சரின் கருத்துக்களுடன் முரண்படும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இவையே ஒட்டுமொத்தமானதொரு தீர்மானத்தை மேற்கொள்ள முடியாத நிலையினையும் ஏற்படுத்தியுள்ளது. உள்ளேயே ஏற்படும் இவ்வாறான கருத்து முரண்பாடுகள் தான் வெளியாருக்கு வாய்ப்பான நிலையையும் ஏற்படுத்துகின்றது. இதில் வடக்கின் தமிழ் தலைமைகள் கவனம் செலுத்த வேண்டும்.

எது எவ்வாறாயினும், வட மாகாணத்திற்கு கிடைக்கவுள்ள இந்த பொருளாதார மையத்தை வேறு மாவட்டத்திற்கு கொண்டு செல்ல முடியாதபடியான நடவடிக்கைகளை வடக்கின் தமிழ் தலைமைகள் மேற்கொள்ள வேண்டும். அதற்காக அவர்கள் ஒன்றிணைந்து, ஒருமித்த முடிவினை விரைவில் மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்த வேண்டும்.

# சமூகத்தில்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

உயிர்ப்பு இருந்து வந்ததை உணர்ந்தேன். ஒப்பீட்டளவில் கல்வித் துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் தான் பிற்காலத்தில் அவற்றை



- வீரகேசரி மூர்த்தி -

அழித்தன. ஆனால் அவற்றை அழிந்துபோக விடாது ஆராய்ச்சி செய்து அக்கலையின் சிறப்பினை உலகளாவிய ரீதியில் பரப்பி வரும் கலாநிதி மு. இளங்கோவனின் சேவை பாராட்டுக்குரியது. அவருடன் இணைந்து நாமும் நாட்டார் பாடல் இலக்கியத்தைப் பேணிப் பாதுகாக்க ஒத்துழைத்து வருவோம்" எனக் கூறினார்.

யாழ். பல்கலைக்கழகப் பட்டதாரியும் தற்போது கனடா வருமான வரி திணைக்களத்தில் பணியாற்றி வருபவருமான திரு. இலங்கேஸ்வரன் பிராம்டன் நகரசபை மேயரினால் வழங்கப்பட்ட பாராட்டுப் பத்திரத்தினை கலாநிதி மு. இளங்கோவனிடம் கையளித்தார்.

# ஆறாம் திணை

யாருக்கு நான் சொல்லி அழ
எவரிடம் கூறி ஆறுதலடைய..

அன்பாய் அறிவு பெருக்கிய பேராசிரியர்
திடீரென
அறுபது வயதில் மரணிக்கிறார்
மருத்துவ அறிக்கை மாரடைப்பாம்...

கற்றுக்கொடுப்பவர் கவிதையில்
சிகரம் தொட்டவர்
முனைவராய் முன்னிற்பவரின்
சிறுநீரகம் அறிவிப்புக் கொடுக்காமல்
செயற்பட மறுக்கிறது.

நான் யாரிடம் இதை முறையிட...

வாழ்க்கையில் சவாரிவிடுகின்றது
வணிகக்காற்று
மலிந்துவிட்டன மரணச்செய்திகள்.

இயந்திர வாழ்க்கையில்
ஒருநாள் பார்வைக்கு வைப்பர்
மறுநாள் மரணச் சடங்கின்பின்
எரிப்பர் / புதைப்பர்
இதுதான் இறுதிப்பயண வழமைகள்
முப்பது வருடங்களாக...

குதிரை வேகத்தில் சீற்றமாய்..
வாழ்வியல் இப்போது பாய்வதால்
மதியம் பார்வைக்கு வைப்பர்
மாலையில் மின் மயானத்தில் எரிப்பர்
மரணத்தை மிதித்தோடும் மரதனோட்டம்.

நான் யாரிடம் சொல்லி அழ...



பக்கத்துத் தெருவில் வாழ்ந்தவன்
ஐம்பதைக் கடந்த இருபிள்ளை
உடையவன்
காலையில் வேலைக்குச் சென்றவனை
மாலையில்
பெட்டிக்குள் வைத்துக் கொண்டு வந்தனர்.
பாரவண்டிக்குக்கீழே வீதி விபத்தில்
நசிந்துவிட்டதாம் அவனது மகிழூர்தி.

உலகமய வேகவாழ்வுப் போட்டியில்
துயர்தரும் பலவித துன்பச்செய்திகள்...

நான் எந்தக் கடவுளிடம் முறையிட...?

- பாரவண்டி : Truck.
- மகிழூர்தி : Car.



முத்துராஜா


## இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா

## அறிவித்தல்

**16 ஆவது ஆண்டாக இடம்பெறும் தமிழ்மொழித் திறமை காண் மற்றும் பண்ணிசைப் போட்டிகள் 2016**

கனடா வாழ் இணுவில் பிள்ளைகள் மத்தியில் தமிழ் அறிவையும் சமய அறிவையும் வளர்க்கும் முகமாக மேற்படி போட்டிகள் இடம்பெறவுள்ளன.

காலம் - யூலை 9, 2016 சனிக்கிழமை நேரம் - காலை 9:00 மணி

இடம் - Young Nak Korean Presbyterian church
650 Mc Nicoll Ave At Victoria Park Ave. Scarborough

தொடர்புகளுக்கு **416-496-9071/ 416-430-0422/ 647-885-7407**

மேற்படி போட்டிகளில் பங்குபற்றிய பிள்ளைகளுக்குப் பரிசுக்கோப்பைகளும் சான்றிதழ்களும் 21-08-2016 ஞாயிற்றுக்கிழமையன்று ஸ்காபுரோ- மில்லிக்கன் பூங்காவில் இடம் பெறவுள்ள இணுவில் மக்களின் ஒன்று கூடல் நிகழ்விலே வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது.



## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# "மண்ணை நம்பி ஏலேலங்கடி மரமிருக்கு"

## - பேராசிரியர் மு. இளங்கோவன்

"இளம் வயதில் இருந்தே எனக்கு நாட்டார் இலக்கியத்தில் மிகுந்த ஆர்வமும், ஆவலும் இருந்தது. நான் சிறுவனாக இருந்த போது எனது அப்பா என்னை வயல் வேலையில் ஈடுபடுத்தினார். ஏர் பிடித்து உழுதேன். அப்போது உழவு வேலையில் ஈடுபட்டிருந்தோர் பாடிய நாட்டார் இலக்கியப் பாடல்கள் என்னை வெகுவாகக் கவர்ந்தன. அந்நாட்களில் பரபரப்பான செய்திகளைப் பாட்டாகப் பாடி, ஒருமுகப் பறை அடித்து அறிவிப்பார்கள். நான் பின்னர் அப்பாடல்களை திரட்டி தொகுத்து வெளியிட்டேன். பறை அடித்துப் பாட்டுப் பாடுபவர்கள் சிந்துப்பாடல் புத்தகங்களையும் விற்பனை செய்வார்கள். கும்பகோணம் குருசாமிதாஸ் உள்ளிட்ட கலைஞர்களின் பாடல் புத்தகத் தொகுப்புகள் என்னிடம் இன்றும் உள்ளன. நாட்டுப்புறப் பாடல்களின் சிறப்பினை உணர்ந்து, அவற்றை இன்று புஷ்பவனம் குப்புசாமி அவர்கள் தனது பாடல்களில் இணைத்துப் பாடி வருகின்றார். அவர் மாத்திரமன்றி ஏனைய திரைப்படப் பாடகர்களும் அவற்றைப் பயன்படுத்தி பாடி வரும் பாடல்கள் ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்று வருவதை நீங்கள் அறிவீர்கள். அத்தகைய தனிச் சிறப்பு நாட்டுப் புறப்பாடல்களுக்கு உண்டு".

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பில் ஸ்காபுறோ சிவிக் சென்ரர் நிலையத்தில் நடைபெற்ற நாட்டார் பாடல் இலக்கியக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய கலாநிதி மு. இளங்கோவன் அவர்கள் இவ்வாறு கூறினார்.

வயலில் வேலை செய்து கொண்டிருந்த




என்னை கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்குமாறு ஒரு தமிழ் ஆசிரியர் ஊக்குவித்தார். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியில் ஐந்தாண்டுகள் தமிழ் பயின்றேன். கல்வியில் உயர் நிலைக்கு என்னை ஏற்றிவிட்ட அந்தக் கல்லூரி ஆசிரியர்களுக்கு நான் என்றென்றும் நன்றி உடையவனாக இருப்பேன் எனக் கூறிய அவர் தனது உரையின்போது இடையிடையே பின்வரும் நாட்டார் பாடல்களை இனிய குரலில் பாடிப்பாடி விளக்கம் கொடுத்தது பார்வையாளர்களின் செவிகளில் இன்பத்தேன் வந்து பாய்ந்த உணர்வினை ஏற்படுத்தியது.

"ராசாத்தி உன்ன எண்ணி ராப் பகலா விழிச்சிருந்தேன்".

"தித்திக்க தித்திக்க பழம் தின்னேன் தேனை ஊத்திக் கொப்பளித் தேன்".

"சுருக்குப் பையில் பணம் என் பெண்டாட்டி இடுப்பைச் சுத்தி பையை பாருங்கோ".

"மண்ணை நம்பி ஏலேலங்கடி மரமிருக்கு<br>
மரத்தை நம்பி ஏலேலங்கடி கிளையிருக்கு<br>
கிளையை நம்பி ஏலேலங்கடி<br>
இலையிருக்கு".

"சிம்பி சிம்பி எடுத்துலக்கை சிற்றெலும்பே நோகுதய்யா".

"பொண்ணு பொறக்குமா ஆணு பிறக்குமா?<br>
பத்து மாசமா போராட்டம்.<br>
இதுவும் பொண்ணா பொறந்தா<br>
கொண்ணுடுவேன்னு<br>
புருசன் பண்ணுறான் ஆர்ப்பாட்டம்"

என்பன அந்தப் பாடல்களாகும்.

விழா நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் செல்விகள் வைரவி, வைஸ்ணவி ஞானமனோகரன் சகோதரிகள் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினார்கள்.

எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் செயலாளர் திரு. சின்னையா சிவநேசன் நன்றியுரை வழங்கிய போது: இதுவரையில் பேராசிரியர் இளங்கோவன் அவர்கள் இசை மாரி பொழிந்தார். நாட்டுப்புறப் பாடல்களின் ஊடாக நமது முன்னோர்களின் பாரம்பரியத்தை அப்படியே பாடிக் காண்பித்தார். இத்தகைய எமது சிறப்புறு பாரம்பரிய கலைகளை அழிந்துபோக விடாது பாதுகாக்கும் வகையில் அவற்றை நாம் இணையத்தளங்களிலும் (Digitalization), தொலைக் காட்சிகளிலும் பதிவுசெய்து பாதுகாக்க வேண்டும் என்றார்.

எழுத்தாளர் இணையத் தலைவர் கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி உரையாற்றியபோது "நான் 1973ம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சிக்காக இந்தியாவிலுள்ள காந்திக்கிராமத்துக்குச் சென்றிருந்தேன். அக்கால கட்டத்தில் தமிழகத்தில் நாட்டுப் பாடல்களுக்கு

**தொடர்ச்சி 12ஆம் பக்கம்...**



# அன்றாட வாழ்வில் ஆரோக்கியம்

## சில எளிய குறிப்புகள்

சூப், ஜூஸ் போன்ற திரவ உணவுகளை எடுத்துக் கொண்டாலும், அரிசி போன்ற திட உணவுகளை உண்டால்தான் பலருக்கும் சாப்பிட்ட உணர்வு வருகிறது. அதிலும் குறிப்பாக இளைஞர்கள், ஜங்க்ஃபுட் எனச் சொல்லப்படும் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும் உணவு வகைகளுக்கு அடிமையாகி வருகின்றனர். ஆரோக்கியமான திட உணவுகள் என்னென்ன என்பதை நினைவூட்டுகிறது இந்தப் பதிவு

தானியங்கள்: உலகமெங்கும் பெரும்பாலும், தானியங்கள்தான் முக்கிய உணவு வகைகளாக உள்ளன. மற்ற உணவு வகைகளெல்லாம் அவற்றுக்குத் துணை உணவுகளாகவே உள்ளன. தானியங்களில் புரதம், கொழுப்பு, மாவுச் சத்து, வைட்டமின்கள், தாதுச்சத்து போன்ற உடலுக்குத் தேவையான அத்தனை சரிவிகித ஊட்டச்சத்துக் களும் அடங்கியுள்ளன.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

ஆரோக்கியமாக இருக்கவும், நோய்கள், பிறவிக் குறைபாடுகளைத் தடுக்கவும், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் முன்னோர்கள் சாப்பிட்டு வந்த கேழ்வரகு, கம்பு, சிவப்பரிசி, கோதுமை போன்ற முழு தானியங்களை உண்ணுங்கள். பாலிஷ் செய்யப்பட்ட அரிசிக்கு பதிலாக கைக்குத்தல் அரிசியைப் பயன்படுத்தலாம். கைக்குத்தல் அரிசியில் மாவுச் சத்தும், வைட்டமின் 'பி' சத்தும் அடங்கியுள்ளன.



முழு தானியங்களிலிருந்து தயாரிக்கப்பட்ட அல்லது முழு தானியங்கள் கலந்து தயாரிக் கப்பட்ட கஞ்சியை ஒரு நாளைக்கு ஒரு முறை அருந்துவது உடலுக்கு ஆரோக்கியம் அளிக்கும். இரசாயனங்கள் சேர்ந்துள்ள வெள்ளை சர்க்கரையை கஞ்சியில் சேர்ப்ப தற்கு பதிலாக, கருப்பட்டியோ அல்லது தேனோ சேர்த்துக் கொள்ளலாம்.

இயற்கையான துணை உணவுகள்:


தானியங்களுக்கு அடுத்தபடியாக, மிகவும் ஆரோக்கியமான சரிவிகித உணவாக பயறு வகைகள் திகழ்கின்றன. ஏனென்றால் இவற்றில் புரதம் மற்றும் கொழுப்புச் சத்துக் கள் பொதுவாக அதிகளவில் இருக்கின்றன. மேலும் கால்சியம் மற்றும் மற்ற தாதுச் சத்துக்களும் அதிகளவில் உள்ளன.

கடலை, பயறு வகைகள் போன்றவற்றை முளைவிடச் செய்து சாப்பிடலாம். முளை விட்ட தானியங்களை முடிந்தவரை பச்சையாக உண்பதே சிறந்தது அல்லது சமைத்தும் சாப்பிடலாம். முளை விடும்போது அது 1 செ.மீ.அளவிற்கு இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு வேளை உணவுக்கு முன்பும், கைப்பிடி அளவு ஊறவைத்த (6-8 மணி நேரம் ஊறியிருக்க வேண்டும்) நிலக்கடலைகளை சாப்பிடுவது நல்லது. அதில் 'பைட்டோ நியூட்ரியன்ஸ்' எனப்படும் 30 வகையான ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன.

காய்கறிகள்: தினசரி தேவையான அளவுக்குக் காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்வது உடல் ஆரோக்கியத்துக்கு அவசியமானது. எப்போதும் புத்துயிருடன் உள்ள காய்கறிகளையே உணவில் சேருங்கள். உங்கள் உணவு முறையில் பச்சைக் காய்கறி சாலட்டையும் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ளுங்கள். கேரட், பீட்ரூட் போன்ற பச்சைக் காய்கறி-களை உண்பது புத்துணர்ச்சி அளிக்கும். அவை மண்ணில் இருந்து பெற்ற ஊட்டச்சத்துக்களை உங்களுக்கு வழங்கும்.

பச்சைக் காய்கறிகளும், கீரைகளும் நார்ச்சத்து மிக்கவை. அவற்றில் பல்வேறு வகையான ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன. இவற்றை சேர்த்துக் கொள்வதால் இரத்தம் சுத்தமாவதுடன், அதிகமான நோய் எதிர்ப்பு சக்தியும் கிடைக்கிறது.



**சத்குரு வாசுதேவ்**

ஒவ்வொரு நாளும் கீரையை சாலட் உடன் சேர்த்தோ, பொரியலாகவோ அல்லது சட்னியாகவோ செய்து உண்ணலாம்.

எளிதில் கிடைக்கக் கூடிய ஆரோக்கியமான காய்கறிகளான பூசணிக்காய், முருங்கைக் காய், கேரட், வெள்ளரிக்காய், புடலங்காய், வாழைத்தண்டு, வெண்டைக்காய், பச்சைப் பட்டாணி, பாகற்காய் இவற்றை போதுமான அளவு உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

பழங்கள்: பழங்கள் மிக எளிதாக ஜீரண மாகக் கூடியவை. அந்தந்த பருவத்துக் கேற்ப கிடைக்கும் பழங்களை தவறாமல் உண்ணுங்கள். உங்கள் உள்ளூர் பகுதிகளில், அவ்வப்போது கிடைக்கும் பழங்களை உண்ணுவதே சிறந்தது. சமைத்த பழங்களை உண்ணாதீர்கள்.

ஊட்டச்சத்துக்கள் நிரம்பிய பழ வகைகளான பப்பாளி, வாழைப்பழம், தர்பூசணி, மாம்பழம், மாதுளம் பழம், சப்போட்டா மற்றும் கொய்யாப் பழம் போன்றவை சிறந்தது. உலர் பழங்களும் மிக அதிக ஊட்டச்சத்து உடையவை.

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

'கடல் இத்தனை உயிர்களைப் பலி வாங்குவதை வேடிக்கை பார்ததுக் கொண்டிருப்பவரா கடவுள்?'

'தெய்வம், ஆன்மீகம் என்று தேவைக்கு அதிகமாகப் பேசிப்பேசி இங்கே அடிப்படையான மனிதம் மறக்கப்பட்டு விட்டது. தெய்வீகம் என்பது ஒரு மலர்ச்செடி. அது பூத்துக் குலுங்க வேண்டுமானாலும், அதற்குத் தக்க உரம் போட வேண்டும். உண்மையான மனிதம்தான் சிறந்த உரம்.

மனிதம் மரித்துப்போன இடங்களில், எத்தனை கோயில்கள் கட்டினாலும் தெய்வீகமும் மரித்துப் போகும்.

இயற்கையின் சீற்றம் கூட உங்கள் மனிதம் உயிரோடு இருக்கிறதா என்று பரிசோதிக்க வைக்கப்பட்ட பரீட்சை என்றே நினையுங்கள். அத்தனையையும் இழந்துவிட்டு நிற்பவர்களை, உங்களுடன் தொடர்பில்லாத யாரோ என்று ஒதுக்கித் தள்ளாமல், உங்கள் குடும்பத்தினர் என்று உளமார அதே பரிவுடன் நேசியுங்கள்.

மனிதத் தன்மையிலிருந்து கடவுள் தன்மைக்கு உயர, உங்களுக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பமாக இதை ஏற்றுக்கொள்ளுங்கள்!'








# சர்க்கரை வியாதியை குணமாக்கலாம்

## பாகம் - 06

மூலிகை மணி என்ற மூலிகை மருத்துவம் மற்றும் சித்த மருத்துவம் சம்பந்தமான இதழ்கள் 1971 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தொடர்ந்து வந்து கொண்டிருந் தன. அந்த மூலிகை மணி இதழில் 1971ஆம் ஆண்டு ஜுன் மாத இதழில் வெளியான கார்ட்டூனை இங்கே உங்கள் பார்வைக்குத் தருகிறோம். நன்றி - மூலிகை மணி

முதன் முதலில் செயற்கை இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்டது எதற்காக என்று தெரியுமா? சர்க்கரை நோயாளிகளுக்கு சர்க்கரையை கட்டுப்பாட்டில் வைப்பதற்காக அல்ல! ஆங்கில வைத்தியத்தில் ஓர் அரை நூற்றாண்டுக்கு முன்பு மனித உடலில் ஒரு சத்திர சிகிச்சை (Operation) செய்ய வேண்டும் என்றால் அதற்கு நிறைய முன்னேற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதில் முக்கியமான ஒன்று உடம்பில் கத்தியால் கீறி காயம் உண்டாகி இரத்தம் வெளிப்பட்ட அடுத்த வினாடி உடலின் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு வினாடிக்கு வினாடி ஏறி அளவு கடந்து மிக அதீதமான நிலையை எட்டிவிடும். எடுத்துக்காட்டாக 600 மிகி முதல் 900 மிகி வரை எட்டும். இது ஏன் நிகழ்கிறது?

உடல் கிழிக்கப்பட்டு திறந்த நிலையில், கிருமிகள் உடலின் உள்ளே நுழையாமல் இருக்கவும், காயம் ஆறப் போராடவும் உடல் தயாராகும் நிலைதான் இந்த சர்க்கரை அளவு அதிகரித்தல். இதுபோன்ற சத்திர சிகிச்சை செய்ய இயற்கையாக உயரும் சர்க்கரையை கட்டுப்பாட்டில் வைக்கத்தான் முதன் முதலில் இன்சுலின் பயன்பட்டது.




ஒரு நாய் உங்களை விரட்டுகிறது. அந்தப் பயத்தில் உடனே உங்களால் தாவிக் குதிக்க முடியாத உயரத்தை நீங்கள் சாதாரணமாகத் தாவுவீர்கள். ஓட்டமோ ஒரு குதிரை ஓடும் வேகத்தை விட அதிக வேகமாக ஓடுவீர்கள். இந்த மாயாஜாலக் காரியங்களையும் செய்வது நம் உடலில் சிறுநீரகத்தின் உச்சியில் உள்ள தொப்பிச் சுரப்பி என்ற அட்ரீனலீன் சுரப்பி தான் அது. நாய் விரட்ட ஆரம்பித்தவுடன் அட்ரீனல் சுரப்பி அட்ரீனலீனை சுரப்பதால், உடலில் இதுவரை சேர்த்து வைக்கப்பட்ட செறிவூட் டப்பட்ட சர்க்கரை அனைத்தையும் அவிழ்த்து இரத்தத்தில் கொட்ட ஆரம்பிக் கிறது. எடுத்துக்காட்டாக 600 மிகி முதல் 900 மிகி வரை எட்டும். இதயம் அட்ரீனலீன் உதவியினால் இந்தச் சர்க்கரையை உபயோகித்து தன் வேகத்தை அதிகரித்து, (இதயம் தான் இயங்க இரத்தத்தில் இருக்கும் சர்க்கரையில் இருந்தே தனக்கு சக்தியை பெறுகிறது) இரத்த ஓட்ட வேகத்தை அதிகரிக்கிறது. உடலில் உள்ள தசைகள் அனைத்தும், இந்த அதிகரிக் கப்பட்ட சர்க்கரையினால் மிக வேகமாக செயல்பட்டு ஆபத்திலிருந்து தப்பிக்கிறது. இந்த உடலின் அதீத செயல்பாட்டை உபயோகித்துத்தான் ஓட்டப் பந்தய விளையாட்டுக்களில், ஊக்க மருந்தால், தடகள வீரர்கள் வெல்ல முயற்சிப்பதும்.

இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப் படுத்தி வைத்துள்ளவர்களுக்கு ஆபத்து சமயத்தில் எதுவும் நிகழாது. உதாரணமாக இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தி வைத்துள்ளவர் கடுமையான விபத்தில் சிக்கி அதிக இரத்தப் போக்கில் இருப்பவருக்கு அவரது உடலில் சர்க்கரை அளவு அதிகரிக்காத காரணத்தால், இரத்தப்போக்கு தடுக்கப்படாது, அதனால் அதிக இரத்தப் போக்கினாலேயே அவர் உயிரிழக்கலாம்.

எனவே மேற்கண்ட இரு உதாரணங்களில் இருந்து இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்தி வைத்தல் என்பதே கேலிக் கூத்து, இதனால் அந்த நபர் உயிரிழக் கும் சாத்தியக் கூறுகள்தான் அதிகம் ஆகின்றது. இத்தனையிலும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தி வைத் துள்ள அவர் பிழைத்திருந்தாலும், உடலின் இயக்க வேகத்தை அதிகரிக்க, அதி- கரிக்கும் இதயத் துடிப்பால் இதயத்துக்கு சக்தியளிக்கும் சர்க்கரை இரத்தத்தில் உயராததால் இதயம் சக்தியிழந்து (இதயம் தான் இயங்க சக்தியை இரத்தத்தில் இருக்கும் சர்க்கரையில் இருந்தே பெறுகி றது, உடலின் வேகம் அதிகரிக்கும்போது உடலில் உள்ள மற்ற உறுப்புக்களும் சர்க்கரையை எடுத்துக் கொள்ளுவதால்), இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்தி வைத்துள்ள நபரின் இதயம் இயங்க இயலாத அளவில் இரத்தத்தில் சர்க்கரை இருக்கும் நிலையில் இதயம் தன் இயக்கத்தை நிறுத்தும் போது இதயத்தாக்கு (Heart Attack) நேரிடுகிறது.

தொடரும்...

Premi. S
Natural Medicine Practitioner ©
647.278.3100



NO MEDICAL INSURANCE


No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.



உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.
Does your current life insurance policy need a tune up please call me.

Nimal Subramaniam
Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# ஒருவர் வீட்டு மரக்கிளைகள் அடுத்தவர் காணிக்குள் படர்ந்தால்?

## கனடிய தகவல் தொடர் 252

இருவரின் வீடுகளும் பக்கத்துக்குப் பக்கமாக ரொறொன்ரோவில் பின்வரும் முகவரியில் இருக்கிறது.

***168 & 170 HUME WOOD DRIVE, TORONTO, ON***

அடுத்த காணிக்குள்ளும் கிளைகள் படர்ந்து குளிர்மையான நிழலை வழங்கிக் கொண்டு தமது வீட்டுக்குப் பின்னால் இருந்த அந்தப் பாரிய மரத்தினை நகர சபையின் அனுமதி பெற்று வெட்டி அகற்ற அவர்கள் தொடங்கியபோதே அங்கு தகராறு ஆரம்பித்தது. அது உயர் நீதிமன்றம் வரை சென்றது. இதன் தீர்ப்பு கனேடிய சகல ஆங்கில ஊடகங்களில் பிரசுரமாகியிருந்தது.

'காட்லி எதிர் கன்னிங்ஹாம்' (Hartley Vs Cunningham) என்னும் வழக்கின் தீர்ப்பு ஒன்ராரியோ உயர்நீதிமன்றத்தில் வழங்கியதனைத் தொடர்ந்து யூன் 19, 2013 இல் கனடாவின் பிரபல்யமான ஆங்கிலப் பத்திரிகையான 'த குளோப் அன்ட் மெயில்' (The Globe & Mail) படங்களுடன் நீண்டதொரு ஆய்வு கட்டுரையினை பிரசுரித்திருந்தது.

சட்டரீதியான நில அமைப்பினை மாற்றியமைத்த ஒரு மரம், இரு அயலவர்கள் (One Tree, Two Neighbours and changes legal landscape) என்னும் தலைப்பில் நடந்த சம்பவங்கள்! அவை தொடர்பான சட்டப் பிரச்சினைகள், தெளிவுரைகள், நீதிமன்றத்தின் முடிவுகள் தொடர்ந்து ஊடகவியலாளர்களின் விமர்சனங்கள் என அந்தக் கட்டுரை வரையப்பட்டிருந்தது. இது பல தகவல்களைக் கற்றுக் கொள்ளும் சிறந்த ஒரு ஆவணமாகவே எனது பார்வையில் தென்பட்டது.



இங்கு மாகாணத்தின் வன வளத்துறையின் சட்டப்பிரிவு (10) உப பிரிவு (2) இல் ஆங்கிலத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

'According to the provincial forest act spc. 10 (2) every tree with trunk growing on the boundary between adjoining lands is the common property of the owners of the adjoining lands'

இந்தச் சட்டப்பிரிவு பின்வரும் விடயங்களை அறிவுரைக்கின்றது.

• ஒருவர் வீட்டின் மரக்கிளை அடுத்தவர் காணிக்குள் படர்ந்திருந்தால் அங்கு மரத்தின் உரிமையில் பக்கத்து காணிக்காரரும் பங்குதாரர் ஆகின்றார்.

சில சென்ரி மீற்றர் நீண்டு இருந்தாலும் அது அயலவனுக்கும் சேர்ந்த சொத்து ஆகும். ஆனால் இங்கு உரிமையின் பங்கு என்பது எவ்வளவு வீதம் என்பது வலியுறுத்தப்படவில்லை. மரத்தினை வெட்டி அகற்ற வேண்டுமானால் பக்கத்து வீட்டுக்காரரின் சம்மதமும் தேவை.

• கிளையினை வெட்டி அகற்ற விரும்பினால்கூட அது படர்ந்திருந்த காணிக்காரனின் சம்மதத்துடனேயே வெட்டி அகற்ற வேண்டும். மீறிச் செய்தால் $20,000 டொலர் வரை பணத்தண்டனை யுடன் சிறையும் கிடைக்கலாம் என சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

• தனது வளவுக்குள் படர்ந்திருந்த கிளையினை அயலவர் வெட்டி அகற்றலாம். அவ்வாறு செய்யும்போது எந்த சந்தர்ப்பத்திலும் அந்தச் செய்கையால் மரம் பாதிக்கப்படக்கூடாது. அவ்வாறு பாதிக்கப்பட்டால் அவரும் மேற்குறிப்பிட்ட தண்டனைக்கு உரியவர் ஆகின்றார். அதேநேரம் அயலவரின் அனுமதியின்றி அவரது காணிக்குள் கிளையினை வெட்டுவதற்காக பிரவேசிக்கவும் முடியாது.

• பாரிய மரம் என்பது வீட்டுக்கு ஆபத்தாக இருக்குமானால் அல்லது நோய்வாய்ப்பட்டு அழியும் நிலையில் இருந்தால் நகரசபையின் அனுமதியுடன் (City Tree Removal Permit) அதனை அகற்ற வேண்டும். அதில் மரத்தின் உரிமையாளர், பக்கத்து காணிக்காரரின் கூட்டுச் சேர்ந்த சம்மதம் தேவை.

இத்தகைய நிலையில் இரு பகுதிக்குள்ளும் சச்சரவு ஏற்பட்டால் நகரசபை நியாயமான ஒரு தீர்வினை முன்வைக்கும்.

• அனுமதிப்பத்திரம் பெற்று மரம் வெட்டி அகற்றும் தொழில் செய்யும் நிறுவனங்கள் (Licensed Arborist) அனேகமாக நகர சபையின் அங்கீகாரம், மற்றும் சட்டப் பிரச்சினைகளுக்கு அமையவே தங்கள் தொழிலை பொறுப்பு ஏற்பார்கள்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999




### சுவாமி விபுலாநந்தர் கலைமன்றம் - கனடா

## போட்டி நிகழ்ச்சிகள் பற்றிய அறிவித்தல்

சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம் வருடாந்தம் நடத்தும் சிறுவர்களுக்கானப் போட்டி நிகழ்ச்சிகள் எதிர்வரும் ஜூலை 09 ஆம் திகதி காலை 8:30 மணிக்கு ஸ்காபறோ சிவிக் சென்டரில் மண்டபத்தில் இடம் பெறவிருக்கின்றது.

பாலர்பிரிவு, கீழ்ப்பிரிவு, நடுப்பிரிவு, மேற்பிரிவு என்பவற்றிற்கு பேச்சு, பொதுஅறிவு, சொல்வதெழுதல், திருக்குறள், பாட்டு, சுய ஆக்கம் என இடம்பெறும் போட்டிகளுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்படுவதோடு, தகுதியானவர்களுக்கு எதிர்வரும் ஜூலை 23 ஆம் இடம்பெறும் பரிசளிப்பு மேடையிலும் இடமளிக்கப்படும். எனவே தாமதியாது ஜூன் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

முழு விபரங்களுக்கும் : www.vipulam.ca

தொடர்புகளுக்கு செயலாளர் : நித்தி ***416 844 3304***

# வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம்

## சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

### இயற்கையின் இரகசியங்கள் யாவருக்குமான அறிவியல்

சென்ற தடவையில் வெளிச்சத்துள் வெளிச்சமாகும் ஒரு இடைச்செருகலைப் பற்றிக் குறிப்பிட்டு இருந்தேன் அல்லவா. அதனைப் பார்த்துக் கொண்டு மீதிப் பயணத்தைத் தொடருவோம்.

Amir D. Acxel என்பவர் தனது ENTANGLEMENT என்ற நூலில் ஒளியியல் பற்றி முன்னவர்கள் கொண்டிருந்த பல ஆச்சரியமான விடயங்களை எழுதியுள்ளார். (பக்கம் 7 – 8) வில்லைகளின் பாவனை கிறிஸ்துவிற்கு முன்னராகவே வந்திருந்தது என்கிறார். வில்லை (lenses)களை கதிரவ ஒளியினை குவிக்கப் பயன்படுத்தியுள்ளார்கள். பிசினீசியர்களே (Phoenicians) முதன்முதலில் வில்லைகளைப் பாவித்தவர்கள் என அவர் குறிப்பிடுகிறார். 3000 ஆண்டு பழமையான வில்லைகளை பிசினீசியர்கள் வாழ்ந்த பகுதிகளில் அகழ்வாய்வாளர்கள் கண்டெடுத்துள்ளதைக் குறிப்பிடுகிறார். மேலும், அரியம் பற்றிய தெளிவினை ரோமர்கள் பெற்றிருந்தார்கள் எனவும் கிறிஸ்துவின் காலத்திலேயே செனிக்கா (Seneca) என்ற இத்தாலியர் (ரோமர்) வெள்ளொளியின் நிறப்பிரிக்கையை அரியத்தின் மூலமாகக் காட்டியிருந்தார் எனவும் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இதன் தொடர்ச்சிதான் கலிலியோவின் தொலைகாட்டிகள் எனலாம். ரோமர்கள் பிசினீசியர்களிடம் இருந்தே வில்லைகள் பற்றிய அறிவினைப் பெற்றார்கள் பிசினீசியர்கள் கிரேக்கர் காலத்திற்கு முற்பட்டவர்கள். இவர்களிடம் இருந்தும் கிரேக்கர்கள் அறிவியல் விபரங்களைப் பெற்றார்கள் என்றும் கூறுவர். பிசினீசியர் கண்ணாடியில் ஒளியின் வேகம் குறைக்கப்படுகிறது என்பதை அறிந்து கொண்டே கண்ணாடி வில்லைகளைத் தயாரித்தார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனாலும் நிறப்பிரிக்கையின் முழுப்பெயரையும் நியூட்டனே பெற்றுள்ளார் என்பது எங்களுக்குத் தெரிந்த விடயம். இந்த இடைச்செருகலை இத்துடன் முடித்துக் கொண்டு ஒளியின் முக்கிய பகுதிக்குள் நுழைவோம். இதுதான் ஒளியின் குவாண்ரம் கருதுகோள்.

### ஒளியின் குவாண்ரம் கருதுகோள்

ஒளியினை மின்காந்த அலையென மாக்ஸ்வெல் காட்டிவிட அது தோமஸ் யங்கின் ஒளியானது அலைதான் என்பதனை வலுப்பெறச் செய்தது. இரண்டும் ஒரே காலத்தில் அடுத்தடுத்து வர, ஒளி அலையாகத்தான் செல்கிறது என்று முடிவே செய்யப்பட்டு விட்டது. துகள் கொள்கையானது இயற்பியல்வாதிகள் மனதில் இருந்து தூக்கி எறியப்பட்டுவிட்டது என்றே கூறலாம். இதனால் அலைகள் பற்றி அடிப்படை விளக்கங்களையும் தெரிந்திருப் பது தேவையாகின்றது.

சக்தியை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்லும் இயற்கையின் ஏற்பாடுதான் அலை இயக்கம். இப்படியாக எடுத்துச் செல்கையில் அதிர்வுகள் உண்டாகின்றன. அதிர்வொன்று இன்னொரு அதிர்வை உண்டாக்க, புதியதாக வந்த அதிர்வு வேறொரு அதிர்வை உண்டாக்க, இப்படியான தொடர்ச்சியான அதிர்வுகளால் அலை ஒன்று பிறந்து முன்னேறிச் செல்லும். இந்த அதிர்வுகள் ஊடகத்தின் துணிக்கைகளில் உண்டாக்கப்படலாம், அல்லது சக்தியே தன்னில் அதிர்வுகளைத் தோற்றுவிக்கலாம். இப்படியாகத் தோன்றுகின்ற அலைகளில் இரண்டு வகையினை விஞ்ஞானிகள் கண்டு கொண்டனர். ஒன்று நீள்பக்க அலை. இவ்வலை இயக்கத்தில், அலை செல்லும் திசையிலேயே துணிக்கைகள் அதிரும். இதற்கு எடுத்துக் காட்டாக ஒலியலைகளைக் காட்டுவர். மற்றையது குறுக்கலை, அலை செல்லும் திசைக்குக் குறுக்காக அதிர்வுகள் நிகழும். இதற்கு எடுத்துக் காட்டாக, நீரில் தோன்றும் அலைகளைக் கூறுவார்கள். மின்காந்த அலைகள் குறுக்கலை வடிவினைச் சேர்ந்தவை.

அடுத்து இன்னொரு இயல்பைப் பார்ப்போம். மிகவும் சுவாரசியமானது. அலைகளுக்கு வேகம் உண்டல்லவா. இந்த வேகமானது அலையின் இரண்டு சிறப்பான அமைப்புகளின் சேர்க்கையால் கணிக்கப்படுகின்றது. ஒன்றை அலைநீளம் என்கிறார்கள். நீரலைகளைப் பாருங்கள் நெளிந்து நெளிந்து அழகாகச் செல்லுகையில் மேடுகளும் பள்ளங்களும் மாறிமாறித் தெரிகின்றன அல்லவா. இந்த நெளிவுகளில் அடுத்தடுத்து இருக்கும் இரண்டு மேடுகளுக்கு அல்லது பள்ளங்களுக்கு இடையிலான தூரத்தையே அந்த அலையின் அலைநீளம் எனக் கூறுகின்றார்கள்.

அடுத்து, அதிர்வுகளினால்தான் அலைகள் உண்டாகின்றன என்பதும் எமக்குத் தெரியும். ஒரு அலை பிறப்பிக்கப்படுகையில், ஒரு செக்கனில் உண்டாகிற, அல்லது உண்டாக்கப்படுகின்ற அதிர்வுகளின் எண்ணிக்கைதான் அதிர்வெண். அதாவது அலை செல்லுகின்ற பாதையில் அதிருகின்ற துணிக்கைகள் ஒவ்வொன்றும் ஒரு செக்கனில் அதிர்வெண்ணிற்குச் சமனான எண்ணிக்கையிலான அதிர்வுகளை உண்டாக்கும்.

இனி, ஒரு அலையின் அதிர்வெண்ணையும் அலை நீளத்தையும் பெருக்குங்கள், அதுவே அந்த அலையின் வேகம். அதாவது அலையின் வேகம் = அதிர்வெண் x அலைநீளம் ஆகும். இந்த அதிசயமான சமன்பாட்டை ஒருதடவை ஆழமாக் கவனியுங்கள். இதற்கு வசதியாக ஒளியின் வேகத்தினையே எடுத்துக் கொள்ளுவோம். ஒளியின் வேகம் எவ்வளவு என்பது இப்போது எங்களுக்குத் தெரியும். அதனை ஆங்கில எழுத்தில் C எனக் குறிப்பார்கள். அதனையே இனி நானும் குறிக்கிறேன். ஒளியின் வேகம் மாறாதது என்பதால், அலைநீளத்தைக் கூட்டி, அதற்குப் பொருத்தமாக அதிர்வெண்ணைக் குறைத்து C யினை எப்பொழுதும் மாறாததாக வைத்துக் கொள்ளலாம். இந்தத் தன்மையில் அமைந்ததுதான் வெள்ளொளியின் ஏழுநிறங்களும் என்பதை விஞ்ஞானிகள் கண்டு கொண்டார்கள். அதன்படி, சிவப்பு நிறத்தின் அலைநீளம் பெரியதாகவும், அதிர்வெண் சிறியதாகவும் இருக்கின்றன. சிவப்பு நிறத்துடன் ஒப்பிடுகையில் ஊதாநிற ஒளியின் அலைநீளம் சிறியதாகவும் அதிர்வெண் பெரியதாகவும் இருக்கிறது. யங் தனது பரிசோதனையின் வாயிலாக நிறங்களுக்கான அலைநீளங்களைக் கணித்தபோது அவை சற்றும் பிசகாது இந்த ஒழுங்கிலேயே காணப்பட்டன. அவ்வலை நீளங்கள் நனோமீற்றர்களில் இருந்தன. பிறகென்ன, ஒளி அலையேதான் எனவாயிற்று.

உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

சாதாரண வெள்ளொளி ஏழு நிறங்களின் கலப்பு எனவும், அவை மின்காந்த அலைகள் எனவும் அவற்றின் கதி செக்கனுக்கு 3 இலட்சம்மீற்றர்கள் எனவும், ஒளி பற்றிய விபரங்கள் வெளிச்சத்திற்கு வந்துவிட்டன. சிவப்புநிற ஒளியின் அலைநீளம் 800 நனோமீற்றர்கள் என்பதும், ஊதாநிற ஒளியின் அலைநீளம் 400 நனோமீற்றர்கள் என்பதும் கூட அறியப்பட்டு விட்டது. நனோமீற்றர் என்பது, ஒரு மீற்றரை 1000 மில்லியன்களால் வகுக்கும்போது (பிரிக்கையில்) வருகின்ற சின்னஞ் சிறிய நீளம். கண்களுக்குத் தெரியாதே எனக் கூறுகின்றீர்களா! ஆம், தெரியாத அளவு சிறிய நீளம்தான். ஆனால் இந்தச் சிறிய நீளம் பற்றிய பெரிய சிந்தனைதான் பல விடயங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது. வெளிச்சத்தின் அலைநீளம் 800 நனோமீற்றர்களுக்கும் 400 நனோ மீற்றர்களுக்கும் இடையில் மட்டும்தான் இருக்க வேண்டுமோ? என்ற கேள்வி உங்களுக்கு எழுந்தது போன்றே, ஆய்வாளர்களிடையேயும் எழுந்தது. இக்கேள்விக்கான விடையைத் தேடிய வேளையில் வெளிச்சம் பற்றிய பல மேலதிக விபரங்கள் வெளிவந்தன.




- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



மனமகிழ் திருமணசேவை

சாதி, மத, மொழி பேதமின்றி ஏற்ற துணையை தேர்ந்தெடுப்பதற்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள். இலங்கை உட்பட ஐரோப்பிய நாடுகள் கனடா, அமெரிக்கா, அவுஸ்ரேலிய நாடுகளில் இருந்து உங்களுக்கு ஏற்ற துணையை தெரிவு செய்து உங்கள் இல்லற வாழ்க்கையை இறைவன் துணையோடு அமைத்துத்தர காத்திருக்கிறோம்.



NEILSON & FINCH க்கு அருகாமையில்

தொடர்புகளுக்கு: நரேஸ் அய்யர்:

416.666.1855 / 647.504.3336

email : thirumanam8@gmail.com



கனேடியச் செய்திகளுக்கான முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com


# இதயம் காக்க 10 வழிகள்

இதயம், நம் உயிர் காக்கும் உறுப்பு. இறுதிவரை எம்மை செயல்பட வைப்பதும் இவ் இதயம் தான். காதலர்கள் தமது அன்பை பகிர்ந்து கொள்வதற்காக பாவிக்கும் சின்னமும் இதயம் தான். 'நீ ஒரு இதயம் இல்லாத மனிதன்' என்று திட்டித் தீர்ப்பதற்கும் பாவிக்கப்படும் சொல் இவ் இதயம் தான். இதயம் சிந்திப்பதில்லை. ஆனால், நாம் இதயத்தின் மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்பது சொல்லாமலே புரியும். இதயமரணம் (Heart Death) மூலம் எமது உலக வாழ்வு முடிந்து விடுகிறது.

சராசரியாக 300 கிராம் எடையுள்ள இதயம் லப், டப், லப், டப் எனும் தாளலயத்துடன் நாளொன்றுக்கு ஒரு இலட்சம் முறைக்கு மேல் துடிக்கிறது. ஒவ்வொருவருக்கும் அவரவர் கைமுட்டி (Fist) அளவிலேயே இதயமுள்ளது. ஒரு வருடத்தில் 31 இலட்சத்து 59 ஆயிரம் லீட்டர் இரத்தத்தை உடலுக்குள் பம்ப் செய்கிறது. முதியோர்களுக்கு நிமிடமொன்றுக்கு 60-80 தடவை இதயம் துடிக்கிறது. ஆனால் சிறு குழந்தைகளுக்கு 70-190 வரை துடிக்கிறது. பொதுவாக சராசரி மனிதனுக்கு 72வரை துடிக்கிறது. நாம் விழித்திருந்தாலும் உறங்கினாலும், சுறுசுறுப்பாக வேலை செய்தாலும் இடைவிடாது துடித்துக் கொண்டிருப்பது இதயம் மட்டுமே.

இதய நோய்கள் பலவாகும். ஒவ்வொரு வயது மாற்றங்களிலும் இந்நோய்களும் வேறுபடலாம். அத்துடன் ஆண், பெண் வேறுபாடுகளுக்கு ஏற்பவும் நோய்கள் மாறுபடலாம். பொதுவாக இதய நோய்களை பிறவியிலேயே ஏற்படும் நோய்கள், பிற்காலத்தில் ஏற்படும் நோய்கள் என இரண்டாக வகுக்கலாம். முதலாவது பிறவியில் ஏற்படும் நோய் ஊறுபாடுகள் (Congenital Heart Defects)ஆகும். மேல் உள்ள இதய அறைகளுக்கு இடையில் உள்ள Septum என்னும் உறுப்பு இடைச் சுவர் பகுதியில் துளைகள் ஏற்படுவதனையே 'Holes in the heart' எனலாம்.

இவை மேல் அறைகளில் அல்லது கீழ் அறைகளில் ஏற்படலாம். குறிப்பிட்ட வயதில் சத்திரசிகிச்சை மூலம் இதனை சரி செய்யலாம். வயது வந்தவர்களுக்கு ஏற்படும் நோய்கள் பலவாகும். நாடிகள் ஒடுங்குவதின் மூலம் ஏற்படுவது 'Coronory Artery Disease' ஆகும். இதேபோல் நிலையாக நாடிகள் சுருக்கமடையும்போது Stable Angina Pectoris' எனவும், மேலதிகமாக பிராண வாயு தேவைப்படும் போது 'Arthyhmia' என்னும் நோயும், உடல் மிகவும் பலவீனமும் மூச்சு விடுவதில் பிரச்சினையும் ஏற்பட்டால் 'Congestive Heart Failure' என்னும் நோயும் ஏற்படுகிறது. இதய தசைகள் பெரிதாகும் போது 'Cardiomyopathy' என்னும் நோயும் வைரஸ் என்னும் கிருமிகளாலும் சிறுநீரக செயலிழப்பாலும் ஏற்படும் நோய் 'Pericarditis' எனவும் அழைக்க முடிகிறது.



இதயத்தில் ஒழுங்கற்ற மின் அழுத்த குறைவால் Atrial Fibrillation என்னும் நோயும், இதயத்தையும் நுரையீரலையும் பாதிக்கும் நோயினை Pulmonary embolism எனவும் கூறலாம். இதய வால்வுகளில் ஏற்படும் நோய்களால் Heart valves embolism நோயும், இதயத்தில் அழற்சி ஏற்பட்டால் endocarditis எனவும் கூறலாம். திடீரென ஏற்படும் மரணத்திற்கு Sudden Heart Death எனலாம். அதேபோன்று இதயம் செயல் இழந்து திடீரென மரணம் ஏற்படுவது Cardiac arrest எனப்படும். இப்படி எத்தனையோ விதமான நோய்கள் எல்லோரையும் வாட்டி வதைத்து விடுகிறது. நெஞ்சு வலி என்பது எல்லாவற்றிற்கும் பொது அடையாளம். மருந்து, சத்திரசிகிச்சை, புதிய கருவிகளை பொருத்துதல் என்பன இதற்கு உதவுகின்றன.

பொதுவாக இதயம் செயல் இழக்கும்போது அதனை தொடர்வது மாரடைப்பு ஆகும். பிரதான ரத்தநாடியில் கொழுப்பு அடைப்பது, இரத்தம் உறைந்து போவது, இதயத்திற்கு தேவையான பிராணவாயு கிடைப்பது தடையாகிப்போவது என்பவற்றால் மாரடைப்பு ஏற்படலாம். எல்லா நெஞ்சுவலியும் மாரடைப்பல்ல. சரியான சோதனைகளின் பின்பே இதனை அறிந்து கொள்ளலாம்.

மாரடைப்பில் மூன்று வகை உண்டு. இதயத் தசைகளுக்கு இரத்தம் கிடைப்பது குறைய தொடங்கி விட்டாலேயே இதயம் அதைக் காட்டிக் கொடுத்து விடும். உதாரணமாக மாடிப்படிகளில் ஏறும் போது, வேகமாக நடக்கும் போது இதயத்தின் வேலைப்பளு அதிகரிக்கும். அப்போது இதயத்துக்கு ரத்தமும், பிராணவாயுவும் தேவையான அளவுக்கு கிடைப்பதில்லை. எனவே, இதயம் துடிக்க சிரமப்படும். இதன் விளைவால், நடு நெஞ்சில் பாரம் வைத்து அழுத்துவது போல் வலிக்கும். நடப்பதனைவிட நிறுத்தி விட்டு ஓய்வெடுத்து விட்டால் நெஞ்சுவலி குறைந்து விடும். எனினும் இவ்வாறான பிரச்சினை Angina Pectoris எனப்படும்.

இரண்டாவது பிரச்சினை மாரடைப்பு ஆகும். சிலருக்கு திடீரென்று நெஞ்சு முழுவதும் கயிறுகட்டி அழுத்துவது போல் கடுமையாக வலிக்கும். இடதுதோள், இடது கை விரலுக்கு நோ வரவும். உடலில் கடும் வியர்வை ஏற்படும். நேரம் கூடக்கூட வலி அதிகமாகும். மயக்கம் வரும். மரணத்தின் அறிகுறிகள் எட்டிப் பார்க்கும். இது உண்மையான மாரடைப்பாகும். மருத்துவத்தில் இதனை 'Myocardial Infarction' என்பர். பாதிக்கப்பட்டவர் எவ்வளவு சீக்கிரமாக சிகிச்சைக்கு செல்கிறாரோ அவ்வளவுக்கு உதவ முடியும். ECG, Cheste X ray, ரத்தப் பரிசோதனை மூலம் இரத்த குழாய் அடைப்பு நீங்க மருந்து வழங்கப்படலாம். அல்லது நாடியில் உள்ள அடைப்பினை 'பலூன் ஸ்ரென்ற்' Baloon stent வைத்து காப்பாற்ற முடியும். இறுதியில் 'Bypass' என்னும் சத்திரசிகிச்சை செய்யப்படலாம்.

மூன்றாவது பிரிவு உடனடி மாரடைப்பாகும். இது மிகவும் மோசமான நெஞ்சுவலியுடன் மயக்க நிலையும் ஏற்படும். பேச்சு மூச்சு எதுவும் இருக்காது. இதனை 'Cardiogenic Shock' என்பர். சிகிச்சை செய்வதற்கு நேரமில்லை. நெஞ்சுவலியுடன் இறப்பும் வந்துவிடும். மருத்துவ மனையில் இருக்கும்போது இப்படி வந்தால் தப்பிக்க முடியும். இல்லாது விட்டால் மரணமே நிகழும். தற்போது உள்ள வாழ்க்கை முறையால் இறப்பும் அதிகமாகிறது.

நமக்கு மாரடைப்பு வந்து விடுமோ என்று பயப்பட்டு ஒன்றும் ஆகி விடப்போவதில்லை. வாழ்க்கை முறையில் சில மாற்றங்கள் செய்தால் 95சதவீதம் இதனை குறைத்து விடலாம். இதற்காகவே இந்த 10 யோசனைகள் வழங்கப்படுகின்றன.

முதலாவது வழி இரத்த அழுத்தத்தினை சரியான கட்டுப்பாட்டில் வைத்திருத்தலாகும். மாரடைப்பு ஏற்படுவதற்கு முதன்மையான காரணி உயர் இரத்த அழுத்தம் (High Blood Pressure) ஆகும். மாதமொருமுறை இந்த இரத்த அழுத்தத்தினை பரிசோதிப்பது நலம். ஒரு மனிதனுக்கு இருக்கவேண்டிய இரத்த அழுத்தத்தின் அளவு 120/80 ஆகும். இரத்த அழுத்தத்தின் அளவு 140/90 என்ற அளவை தாண்டக்கூடாது. அதேவேளை 90/60 என்ற அளவுக்கு கீழேயும் இறங்கி விடக்கூடாது. இரத்த அழுத்தம் உள்ளவர்கள் உணவில் உப்பைக் குறைப்பது, புகைப்பழக்கத்தை கைவிடுவது, ஊறுகாய், கருவாடு போன்ற உப்பு நிறைந்த உணவுகளை குறைத்துக் கொள்வது அவசியம்.



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative

Cell: 647-895-3466
Email: jdinesh@live.ca
Office: 416.298.3200
Fax: 416.298.3440
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# எலும்பு தேய்மானம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

## OSTEOPOROSIS

நமது உடலின் அமைப்பை நிர்ணயம் செய்பவை எலும்புகள்தான். எலும்புகள் உடலிலுள்ள பகுதிகளுக்கேற்ப தம்மை வடிவமைத்துக் கொண்டு உடலின் கட்டமைப்பை உருவாக்குகின்றன. எலும்பு மற்றும் பற்கள் உடலின் உறுதியான பகுதிகளாகும். மற்றைய உறுப்புகளைப் பாகாப்பதில் எலும்புகள் முக்கியபங்கு வகிக்கின்றது. அதாவது மூளை, இருதயம், சிறுநீரகம், சுவாசப்பைகள் எலும்புகளால் உருவான கூடுகளால் பாதுகாக்கப்படுகின்றன.


விபத்துகளின் போது எலும்பு உடைவதைத் தவிர எலும்புகளின் தேய்மானம்தான் பெரும்பாலான மக்களைப் பாதிக்கின்றது. இது ஒரு நோயல்ல. அதை ஒரு குறைபாடு என்றுதான் கருதலாம். அதாவது மனிதன் முதுமை அடையும்போது ஏற்படும் எலும்புகளின் தேய்மானம் இயற்கை யானதே. நாற்பது வயதைத் தாண்டும் போது எலும்புகள் வலுக்குன்றத் தொடங்கு கின்றன. இது பெரும்பாலும் பெண் களையே தாக்குகின்றது. பெரும்பாலும் பெண்களின் மெனோபாஸ் அதாவது மாத விலக்கு நிற்கும் காலகட்டத்தில் உடலில் ஏற்படும் ஹோர்மோன்களின் மாறுபாடுகளி னால் கல்சியம் என்னும் தாதுப்பொருளை சேமித்துக்கொள்ளும் திறனை உடலானது இழந்து இப்படியான குறைபாடுகள் ஏற்படுகிறது.

### இதனால் உண்டாகும் பக்க விளைவுகள்

மூட்டுவலி, மூட்டுவாதம், எலும்புமுறிவு கழுத்து எலும்பு தேய்மானம், முதுகுவலி, உடல்சோர்வு, அசதி, முதுகு எலும்பு வளைந்து கூன்விழுதல், நடையில் தளர்வு. இதுபோன்ற பக்க விளைவுகளை பெண்கள் எதிர்நோக்க நேரிடுகிறது. இவற்றைக் குணப்படுத்துவது சற்றுக் கடினம். ஆனால் வராமல் முற்கூட்டியே தடுக்க முடியும். பொதுவாக மனிதர்களுக்கு 30 வயதுவரை எலும்பு வளரும் அதன்பின் சிறிது சிறிதாக வளர்வது நின்று விடும்.

### தவிர்க்கும் வழிகள்

பெரும்பாலும் வயது ஏறஏற கல்சியம் குறைவடைந்து எலும்புகளின் தேய்மானம் அதிகமாகின்றது. எனவே வயதானவர் களின் எலும்புகளும் தசைகளும் வலுவான-தாக இருக்காது. இவர்கள் நடக்கும் போதோ, நிற்கும் போதோ சமநிலைத் தன்மை இல்லாது போகும். இந்த நிலைமையில் கீழே விழவேண்டி ஏற்பட்டால் முதலில் பாதிக்கப்படுவது



தண்டுவட எலும்புகள் மற்றும் இடுப்பு, கை, கால்களிலுள்ள எலும்புகள், மணிக்கட்டு எலும்புகள் என்பனவாகும்.

### சிகிச்சைகள் மற்றும் பயிற்சிகள்

(Osteoporosis) ஒஸ்ரியோபரோஸிஸ் போன்ற எலும்பு சம்பந்தமான நோய்கள் அனைத்துமே வருமுன் தடுக்கக்கூடியவை. ஆனால் வந்து விட்டால் அதிலிருந்து நிவாரணம் பெறுவதற்கு நவீன மருந்துகள் வந்துவிட்டன. அதாவது கூடிய விரைவில் குறிப்பிட்ட பலன் கிடைக்கும். ஆனால் அந்தப் பலனை நீண்ட நாட்கள் அனுபவிக்க முடியாது. எலும்புகள் உறுதி யாக்கக்கூடிய உடற்பயிசிகளையும், உணவுத் திட்டத்தையும் கடைப்பிடிப்பது அவசியம். உடலிலுள்ள 44 மூட்டுகளை யும், 263 எலும்புகளையும், 72,000 நரம்புகளையும் உறுதியாக்கவும், இளமையோடு வைத்திருக்கவும் பொருத்த மான யோகாசன முறைகள் எலும்புகளின் தேய்மானம் போன்றவற்றை முற்றிலுமாக சீர்செய்யக் கூடியதாக உள்ளன. அவற்றைக்கற்று நாள்தோறும் 20 நிமிடமாவது பயிற்சி செய்வது அவசியம்.

### உணவுகள்

ஊட்டச்சத்து மிகுந்த உணவு தேவை. பால் கண்டிப்பாக தினமும் அருந்த வேண்டும். தானியங்கள் மற்றும் கீரை, புரோக்கோலி போன்ற பச்சைநிற காய் கறிகளை அதிகமாக உணவில் சேர்க்க வேண்டும். மீன் வகைகளில் கல்சியம், மற்றும் விட்டமின் D அதிகம் உள்ளதால் அவற்றை உணவாக்க வேண்டும்.


கொழுப்பு சத்துள்ள டப்பாக்களில் அடைக்கப்பட்ட உணவுகள், செயற்கை யான சுவைகள் கலந்த உணவுகள் போன்றவற்றை முடிந்தவரை தவிர்க்க வேண்டும். நிலத்திற்கு கீழ் விளையும் கிழங்குவகைகளைத் தவிர்க்க வேண்டும்.

முருங்கைக்கீரையும் காயும் எலும்பு களுக்கு வலுவைக் கொடுக்கும். முட்டை, பாதாம் பருப்பு, பொட்டுக்கடலை என்பன எலும்பு களை உறுதியாக்குவதுடன் திரும்பவும் வளரச் செய்வதற்கும் உதவுகிறது.

### எலும்பு அடர்த்தி குறைவு

எலும்புகளுக்குக்கென்று அடர்த்திதன்மை உண்டு. அடர்த்தி குறையும்போது எலும்பு சார்ந்த பிரச்சினைகள் வரும். அனைவரும் தமது எலும்பின் அடர்த்தித் தன்மையைப் பரிசோதித்துக் கொள்வது நல்லது. அதன் அடர்த்தி குறையும்போது தேய்மானம் அதிகரிக்கும். அப்போது படி ஏறுதல், இறங்குதல், ஓடுதல், வேகமாக நடத்தல், இருந்து எழும்புதல் போன்றவற்றில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மலச்சிக்கல், அஜீரணம், ஓயாத உடலுழைப்பு, பகல் தூக்கம், மனஇறுக்கம் என்பன எலும்பின் தேய்வை அதிகரிக்கச் செய்யும்.




# ஞானம் வரட்டும்

### அப்பிள் நிறுவனர் ஸ்ரீவ் ஜொப்ஸ் இன் இறுதி வரிகளைப் படித்ததன் தாக்கம்



போதாது போதாதென்று
பொழுதெல்லாம் பாடுபட்டு
ஆதரவு அதுவே என்றெண்ணி
அனைத்தையும் புறந்தள்ளி
காதலுடன் பணத்தைக்
கணக்கின்றி சேர்த்து
ஈதலுக்கும் மனமின்றி
இன்பமாய் செலவுசெய்து
போதலுக்கும் மனமின்றி
புதையலென சேர்த்து
பூதமெனக்காத்து வாழ்ந்தால்,
புண்ணியமென்ன மானிடரே
சாதலுக்கு நாள் குறித்து
சத்தம் எதுவுமின்றி - எம
தூதர்கள் வந்து, தூக்கிச்செல்கையில்
துணிகூட உருவிவிட்டே,
பூதவுடல் எரிக்கின்றார் (அ)
பூமியில் புதைக்கின்றார்.
காதற்ற ஊசியும்
கடைவழிக்கு வாராதென்ற
போதனையை உமது
புத்தியில் நிறுத்திடுவீர்.

பெற்ற பிள்ளைகட்கும் பிற
சுற்றத்தாருக்கும் உதவி
உற்ற பசியில் வாடும்
மற்றவர்க்கும் உதவி
சற்றே நாம் வாழுகின்ற
சமூகத்திற்கும் உதவி
மற்றவர்கள் போற்ற
மனிதனாய் வாழ்ந்திடுவீர்.
இறந்த பின்னும் இருப்போரின்
இதயத்தில் வாழ்தலொன்றே
பிறந்த பயன் என்னும்
பேருண்மை உணர்ந்திடுவீர்.

- சிலேடைச் சித்தர் சேது சுப்ரமணியம் -

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# நேர்காணல் - 'தமிழக தேர்தல் மன்னன்' பத்மராஜன்

## "கின்னஸ்ல இடம்பெறனும்!"

வித்தியாசமான மனிதர் மேட்டூர் குஞ்சப்பன் நாயர் பத்மராஜன். தமிழ்நாடு உள்ளாட்சித் தேர்தல், சட்டசபைத் தேர்தல், இந்திய நாடாளுமன்றத் தேர்தல், இந்திய ஜனாதி பதி தேர்தல் என இந்தியாவில் நடைபெறும் தேர்தல்கள் அனைத்திலும் மனுத்தாக்கல் செய்து ஊடகங்களின் கவனத்தை ஈர்ப்பவர். இந்தியா முழுவதும் பிரபல அரசியல் தலைவர்களை எதிர்த்து சுயேச்சை வேட்பாளராக களம் கண்டவர். 2011 சட்டமன்றத் தேர்தலில் மு.க. ஸ்டாலினை எதிர்த்து கொளத்தூரிலும், சொந்தத் தொகுதியான மேட்டூரிலும் போட்டியிட்டார். 2014 நாடாளுமன்றத் தேர்தலில் பாமக அன்புமணி ராமதாஸை எதிர்த்து தர்மபுரி யிலும், இந்தியா முழுக்க நாடே எதிர் பார்த்துக் கொண்டிருந்த வடோதரா தொகுதி யில் பிரதமர் நரேந்திர மோடியை எதிர்த்தும் நின்றார். எல்லாவற்றிலும் படுதோல்வி. அந்தத் தோல்விகளால் பத்மராஜனை சோர் வடையச் செய்ய முடியவில்லை. சமீபத்தில் நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலிலும் மேட்டூர் தொகுதி மற்றும் விஜயகாந்தை எதிர்த்து உளுந்தூர்பேட்டை தொகுதி என இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டார். சொல்லித்தான் தெரிய வேண்டுமா என்ன? இரண்டிலும் படுபடு தோல்வி. ஆனால், மனிதர் சந்தோசமாக இருக்கிறார். தேர்தலில் தோல்வியடைந்த தற்காக ஒருவர் சந்தோசப்படுவாரா? என்ன மாதிரியான மனிதர் இவர்?

மேட்டூர் குஞ்சப்பன் நாயர் பத்மராஜனுடன் ஒரு 'காமெடி' பேட்டி.

தோல்வியடைவதற்காகவே தேர்தல்களில் நீங்கள் போட்டியிடுவது மாதிரி தெரிகிறதே. பிரபலமாக இதை ஒரு வழியாக நினைக்கிறீர்களா?

ஒவ்வொருவருக்கும் ஒரு ஆர்வம் இருக் கும்ங்க. எனக்கு எலெக்சனில் போட்டியிடுற ஆர்வம். அவ்வளவுதான். என்னோட சினேகி தங்க 1989இல் விளையாட்டா என்னிடம் கேட்கப் போயிதாங்க எனக்கு இந்த எலெக் சன்ல நிக்கிற ஐடியாவே வந்திச்சு. நாமளும் நின்னுதான் பார்ப்பமேன்னு மேட்டூர்ல எம்.எல்.ஏ.க்கு நின்னேன். 156 ஓட்டு வாங்கினேன்.

பணமில்லாத என்னைய மாதிரி ஏழை, இன்னிக்கு தேர்தல்ல ஜெயிக்கறதெல்லாம் முடியவே முடியாதுன்னு எனக்குத் தெரியும். ஆனாலும், சாகிற வரைக்கும் தேர்தல்ல போட்டி போட்டு தோத்துக்கிட்டே இருக்க ணும் அதுல உலக சாதனை படைக்க ணும்னு முடிவு பண்ணேன். அதிக முறை தேர்தல்ல நின்னு தோத்தவருன்னு லிம்கா புக்ல என் பேரு வந்திருக்கு. இனி கின்னஸ் ரிக்கார்ட்டிலும் இடம்பிடிக்க வேண்டும். அதுக்காகவே 'தேர்தல் மன்னன் தோல்விக் கட்சி'ன்னு ஒரு கட்சி ஆரம்பிச்சிருக்கேன். இந்தியத் தேர்தல் ஆணையத்துல பதிவுக்கு அனுப்பி இருக்கேன்.

இதுவரைக்கும் எத்தனை தேர்தல்களில் போட்டியிட்டிருக்கீங்க?

போன லோக்சபா எலக்சன்ல மோடியை எதுத்து, வடோதராவுல நின்னது 159ஆவது தடவை. இப்ப எங்க மேட்டூர் தொகுதில நின்னது 173. விஜயகாந்தை எதித்து உளுந்தூர்பேட்டை நின்னது 174ஆவது தடவை.

எப்பவாவது டெபாசிட் திரும்ப கிடைச்சிருக்கா?

இல்லீங்கய்யா.

டெபாசிட் கட்டினது, தேர்தல் செலவுகள்னு இதுவரைக்கும் மொத்தமா எவ்வளவு பணம் நட்டப்பட்டிருப்பீங்க?

அது ஒரு இருபது லட்சம் ரூபா வரைக்கும் இருக்கும்.

செலவு பற்றி கவலைப்படாம தொடர்ந்து நிக்கிறீங்க நிறைய பணம் வச்சிருக்கீங்களா?

அப்டிலல்லாம் இல்லீங்க. நான் ரொம்ப சாதாரண மனுசன். மேட்டூரில் டயர் வியாபாரம் பண்ணறேன். கஸ்டப்பட்டு, கடன் வாங்கித்தான் எல்லா எலெக்சன்லயும் டெபாசிட் பணம் கட்டுவேன்.

யார், யாரையெல்லாம் எதிர்த்து தேர்தலில் நின்னுருக்கீங்க?

எம்.பி. எலக்சன்ல முன்னாள் இந்தியப் பிர- தமர்கள் நரசிம்ம ராவ், வாஜ்பாய், மன் மோகன் சிங், இன்றைய பிரதமர் மோடி, தமிழக சட்டசபைத் தேர்தலில் இன்றைய முதல்வர் ஜெயலலிதா, முன்னாள் முதல்வர் கருணாநிதி, கேரளாவில் முன்னாள் முதல் வர்கள் கருணாகரன், ஏ.கே. ஆண்டனி, கர்நாடகாவில் முன்னாள் முதல்வர்கள் எடியூரப்பா, எஸ்.எம்.கிருஸ்ணா எல்லாரை யும் எதுத்து போட்டியிட்டிருக்கேன். ஜனாதிபதி தேர்தல்ல முன்னாள் இந்திய ஜனாதிபதிகள் கே.ஆர். நாராயணன், அப்துல் கலாம், பிரதிபா பாட்டில் உள்பட இன்றைய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வரை எல்லா பெரிய தலைகளையும் எதுத்து வேட்பு மனு தாக்கல் பண்ணி இருக்கேன். சில சமயத்துல வேட்புமனு பரிசீலனையிலயே என் மனுவை நிராகரிச் சிடுவாங்க. அதுபத்தி நான் கவலைப்பட மாட்டேன். மனுவை ஏத்துக்கிட்டா போட்டி போடுவேன். இல்லாட்டி விட்டுடுவேன். (விட்டுத்தானே ஆகணும்.)



வேட்புமனு தாக்கல் செய்ததோடு வேலை முடிந்தது என்று சும்மாயிருப்பீர்களா அல்லது பிரச்சாரமெல்லாம் செய்வீர்களா?

பெரிய மனுஸங்களை எதுத்து நின்னா, ஜெயிக்க முடியாதுன்னு எனக்கு நல்லாவே தெரியும். அப்புறம் எதுக்கு வீணா பணம் செலவழிக்கணும் பிரச்சாரம் பண்ணணும். வேட்புமனு தாக்கல் செய்வதோடு சரி. அதை அப்படியே மறந்துட்டு சொந்த வேலையைப் பாக்க ஆரம்பிச்சிடுவேன்.

நீங்க வாங்குன அதிக பட்ச ஓட்டு எவ்வளவு, குறைந்தபட்ச ஓட்டு எவ்வளவு?

அதிகபட்சமா, 2011ல மேட்டூர்ல எம்.எல்.ஏ.வுக்கு நின்னபோது 6,273 ஓட்டு வாங்குனேன். குறைந்தபட்சமா, மேட்டூர்லயே வார்டு கவுன்சிலருக்கு நின்னபோது ஒரு ஓட்டுகூட வாங்கலை!

ஏன், நீங்க கூட உங்களுக்கு ஓட்டு போடலையா?

அப்படி இல்லீங்கய்யா. நான் என் சொந்த வார்டுல நிக்கலை. அதனால என் ஓட்டை எனக்கே போட்டுக்க முடியாம போயிடுச்சு.

இப்படி தேர்தல்ல நின்னு தோத்துக்கிட்டே இருந்தா, எல்லாரும் உங்களை கேலி, கிண்டல் பண்ணுவாங்களே?

பண்ணத்தான் செய்வாங்க. நண்பர்கள், உறவினர்களே கிண்டல், கேலியெல்லாம் செய்வாங்க. அதெல்லாம் நமக்கு சகஜமா யிடுச்சி. தேர்தலில் வெற்றி பெறமாட்டேன்னு தெரிந்தும் ஏன் வீணாக வேட்புமனுத் தாக்கல் செய்கிறீங்கன்னு பலர் என்னிடம் சொல்வாங்க. அவங்க சொல்வது என்னவோ உண்மைதான். ஆனால், சாதனை படைக்க வேண்டும் என்பதுதான எனது எண்ணம். அதுக்காகப் போட்டியிடுகிறேன்.

உங்களோட சாதனைன்னு எதை நெனைக்கறீங்க?

1996இல் ஒரே சமயத்துல இந்திய பார்லி மெண்டுக்கும், அஞ்சு மாநில சட்டசபை களுக்கும் எலெக்சன் நடந்தது. அப்ப அஞ்சு ஸ்டேட்ல எட்டு தொகுதில நான் போட்டி போட்டேன். அதுல ஒண்ணு ஜெயலலிதாவை எதுத்து பருகூர்ல நின்னது. அதன்பிறகுதான் எலெக்சன் கமிஸன், ஒருத்தரு ரெண்டு இடத்துக்கு மேல நிக்க கூடாதுன்னு சட்டம் கொண்டாந்தாங்க. அதுபோல டிபாசிட் தொகையும் அதிகமாக் கினாங்க. இந்த சட்டம் வர நான்தான் காரணம்கிறது வரலாற்று சாதனை இல்லையா? ஏன் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதுன்னு, இனிமே எக்காலத்திலும் வரலாறு படிக்கும்போது என் பெயர குறிப்பிட்டுதானே ஆகோனும்.

இன்றைய காலகட்டத்தில் தேர்தலில் போட்டியிடுபவர்களுக்கு ஊடகங்கள் ஆதரவு மிக அவசியம். உங்களுக்கு ஊடகங்கள் ஆதரவு இருக்கா?

ஐயோ! அதை ஏன் கேட்கறீங்க? நாடு முழுக்க எல்லா மீடியாகாரங்களும் எனக்கு ரொம்ப சப்போர்ட் பண்ணறாங்க. என் பேட்டி ஏகப்பட்ட டி.வி. சேனல்கள்லயும் பேப்பர் கள்லயும் வந்திருக்கு. இப்பக்கூட யூ டியூப்ல 'எலக்சன் கிங் பத்மராஜன்' னு டைப் பண்ணி தேடிப் பாருங்க! ஏழெட்டு பேட்டி இருக்கும்.

சரி, உங்களைப் பற்றி சொல்லுங்க?

எனக்கு இப்ப வயசு 57 ஆகுதுங்கய்யா. கேரளாவின் கண்ணனூர்தான் எங்க பூர்வீகம். மூன்று தலைமுறையாக இங்க தமிழ்நாட்டில் மேட்டூரில்தான் வசித்து வருகிறோம். மேட்டூர்ல குஞ்சாண்டியூர் பகுதியில இருக்கோம்.


அடுத்து?

தமிழ்நாட்டில் உள்ளாட்சி தேர்தல் வரப் போது. அதுக்காக தயாராகிட்டு இருக்கேன். இந்தத் தேர்தல் எனக்கு கொஞ்சம் விசேச மானது. அதாவது இது நான் போட்டியிடும் 175ஆவது தேர்தல்.

இந்தத் தேர்தலிலும் தோல்வியடைய வாழ்த்துகள் என்றுகூறி விடைபெற்றோம்.

- சிவதாணு -

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

MATH & PHYSICS TUTION
By a well-qualified and an experienced teacher. For all grades from Gr. 4 to 1st year of university.
Special classes in advanced functions, calculus & vectors and data management. Classes available at Scarborough & Stouffville.

Contact: 647 340 9490/ 416 732 2228




# சட்ட ரீதியாக குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை வழங்கும் *"Lebara"*

"எமது Lebara தொலைக்காட்சி நிறுவனம் சட்ட ரீதியாக உலகெங்கும் குறைந்த கட்டணத்தில் நிறைவான சேவையினை வழங்கி வருகின்றது. இந்தியா, கனடா, TET சனல்கள் உட்பட மொத்தம் 32 தமிழ் "சனல்கள்" அத்துடன் மூவாயிரம் திரைப் படங்களையும் பார்வையிட முடியும். திரைப்படங்களை அனுமதி பெற்று சட்ட ரீதியாகவே காண்பித்து வருகின்றோம். ஏனைய சில நிறுவனத்தினர் அனுமதி பெறாமல் திருட்டுத்தனமாக திரைப் படங்களை ஒளிபரப்பி வருகின்றனர். நாம் பெருமளவு பொருட் செலவில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் முதலில் ஐரோப்பிய நாடுகளில் எமது சேவையினை ஆரம்பித்தோம். பின்னர் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும் விஸ்த் தரித்தோம். தற்போது கனடாவுக்கும் விஸ்த் தரித்துள்ளோம். இதுபற்றி கனடா மக்களுக்கு விளக்கும் வகையிலேயே இன்றைய தமிழ் ஊடகவியலாளர்களுக்கான இந்த மகாநாட்டினை நடத்துகின்றோம். எமது Channel Box ஐ வாங்கி பயன் படுத்துவதற்கான வருடாந்தக் கட்டணம் 149



டொலர்கள் மாத்திரமே. மற்றுமொரு சேவையும் உண்டு. அதற்கு Channel Box இலவசம். மூன்று மாதங்களின் பின் மாதாந்தம் 12.99 டொலர் கட்டணம். எமது சேவையினைப் பெற விரும்பும் பொது மக்கள் 647.714.8005 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம். எமது அலுவலகம் ஸ்காபுறோவில், இலக்கம் 4018 கெனடி வீதியில் உள்ளது." 23-06-2016 வியாழக்கிழமை ஸ்காபுறோவிலுள்ள Queen's Banquet Palace இல் நடை-பெற்ற ஊடகவியலாளர்களுக்கான கருத்த ரங்கில் உரையாற்றிய Lebara ஸ்தாபன நிறுவனத்தின் உரிமையாளர்களுள் ஒருவ ரான திரு. பாஸ்கரன் குறிப்பிட்டார்.

இவ்வைபத்தில் முதன் முறையாக கனடாவி லுள்ள பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி, சஞ்சிகைகள் ஆகியவற்றினைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் அதிகளவில் கலந்து கொண்டிருந்தனர். இந்தியாவில் இருந்து வருகை தந்து இங்கு தமிழ் படத்தயாரிப்பில் ஈடுபட்டுள்ள இயக்குநர் திருமதி விஜயபத்மா ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர். இவ்வைபவத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் Lebara Cable Box இலவசமாக வழங்கப்பட்டது. அத்துடன் இராப்போசன விருந்தும் வழங்கப்பட்டது.




IP GOLD HOUSE
22K Gold Jewellery - Antique & Stone Jewellery
Wedding Season Sale
REPAIR FREE
உங்களது பழைய நகைகளை எங்களிடம் கொடுத்து மிகவும் சிறந்த விலையில் புதிய நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
IP
BRING YOUR OLD JEWELLERY AND GET NEW JEWELLERY FOR BEST PRICE
STONE JEWELLERY $ 48.00 PER GRAM.
NEW COLLECTION OF WEDDING JEWELLERY.
40 New Delhi DR. Unit 56, Markham, ON. L3S 0B5
905-554-5890


CANADIAN COLLEGE
FOR HIGHER STUDIES
Our Testimonials Are Our
GRADUATES!
William
William got a job in 5 months from the program start date. Has been working in a major bank as a Senior Technical Lead for many years.
Earns a 6 figure income.
Rohith
Rohith joined as an international student and took non-vocational courses. He is currently a senior IT Consultant ready to apply for PR.
Paul
Paul got a job at the Globe & Mail after 5 months from the program start date. Then Google, eBay, Seagate, WSIB and TD Bank on major projects. Current earning potential is $200K+. Paul started as a beginner in 2012.
Emmanuel
Emmanuel worked on multiple projects with IBM and a major bank at the same time. Now, he is a technical lead at that bank.
Earns a 6 figure income.
Jerrin
Jerrin joined as an international student and is currently working as a Senior IT Support Consultant in a major community college.
Earns a 6 figure income.
PICTURE YOURSELF AS ONE OF THE ABOVE GRADS.
SCHOLARSHIPS for college students and adults!
DEADLINE IS APPROACHING.
If you are interested in taking part in the scholarship competition, apply NOW before it is too late!
*July 15th
www.thecanadiancollege.com
705 Progress Ave, #108 Toronto, ON M1H 2X1
(416) 850-1456, (416) 489-8946 learn@thecanadiancollege.ca

Parkway Mall Mobilicity **Canada Day weekend OFFER**

$50 OFF COUPON

IMPROVED Network Coverage

# $25/mo

UNLIMITED Local Calling & UNLIMITED Text Messaging

# $35/mo

Free Voice Mail

UNLIMITED Data, Internet, UNLIMITED Download

UNLIMITED Local Calling & UNLIMITED Text Messaging

All plans including Caller ID, Call waiting and more...



Iphone 6 16GB ~~$749.99~~ $599.99

Samsung Galaxy S6 32GB ~~$729.99~~ $449.99

Samsung Galaxy Mega Duo 5.8" ~~$499.99~~ $249.99

Samsung Galaxy Grand Prime ~~$399.99~~ $159.99

Samsung Galaxy Ace 2x ~~$249.99~~ $89.99

Blu Dash M2 ~~$199.99~~ $79.99

ZTE Salem 3G ~~$129.99~~ $0

No Contract !!
No Credit Check !!

All phones working to Mobilicity now !!!
Even Iphone 4, Bring in your own phone !!!

ONLY at

Mobilicity @ Parkway Mall (Kiosk beside Metro Supermarket)
Parkway Mall (Ellesmere Rd./ Victoria Park Ave)
85 Ellesmere Rd. Scarborough
M1R4B8, 416-999-9229

mobilicity
Now that's smart.™

Limited time offer and may only be available to new activations. Taxes are extra. Restrictions may apply on combining offers with other offers or promotions. All unlimited features included in each plan/add-on, including unlimited talk, text and data features, must originate from the Mobilicity Unlimited Zones. Premium and special numbers are excluded. Fair usage policy 2 GB allotment will be applied on the data in $35 plan & restriction will be applied. Additional terms and conditions apply. Subject to change without notice. ©2016 Mobilicity. 'Mobilicity', 'Now that's smart', the Mobilicity designs and the Mobilicity logo are trademarks of Mobilicity. Other trademarks shown may be held by their respective owners. All rights reserved. Parkway Mall Mobilicity additional terms and conditions: $50 coupon can only be applied on phones and have been already applied on above phones. Special is only available at Parkway Mall Mobilicity. Limited time offer. Third party handsets are sold by independent store owners to customers directly. These handsets are not originally from Mobilicity. Return, exchange and warranty for these handsets may vary. Please ensure that you enquire further details from stores before you make your purchase.

TBC Toronto Business College



JOB READY
DIPLOMA PROGRAMS

PERSONAL SUPPORT WORKER(PSW)
Immediate Job Opportunities
Work in Hospitals, Long Term Care, Senior Homes
28 Weeks

ACCOUNTING & PAYROLL ADMIN.
Jobs available in plenty
Earn good salary
35 Weeks

FOOD SERVICE WORKER (FSW)
Work in Hospitals, Schools
12 Weeks

SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ [illegible] ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்
Tuition Fees, Books, Living Expenses
Day care & Transportation up to $28000 or more
visit www.secondcareerontario.com

PART TIME COURSES
*Windows, Word, Excel, Power Point, Access, QuickBooks, Sage50 Accounting (Simply) & Sage 300 ERP2012 (Accpac)*
Workshops
Food Handler Certification
First Aid & CPR

- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Career Planning & Counselling
- Ample Free Parking
- Job Search Assistance
- TTC Accessible
- Instructors with over 15 years of Canadian Experience

416 500 5300 / 416- 451- 6680
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)


# கனடா தினம்




நாட்டுவோம் கோல் நாட்டுவோம் அதில்
ஏற்றுவோம் கொடிஏற்றுவோம் - எழுந்து நின்று
ஓகனடாக் கீதம் இசைத்து வானில் கொடி
ஓங்கிப்பறந்திட ஏற்றிடுவோம்

ஏற்றதொரு நாள் இன்று கனடா தேசத்தின்
149வது பிறந்த நாளைக் கொண்டாட
கூடுவோம் அனைவரும் கூடி நின்று
வாழ்த்துவோம் வணங்குவோம்

ஏதிலிகளாய் ஏங்கித் தவித்து ஓடிவருவோரை
ஏற்றுத் தஞ்சம் கொடுத்து உதவுவதில்
உலகத்தில் இரண்டாவது பெரிய நாடான
கனடாவைப் பணிவோடு வாழ்த்துவோம்

கல்வி கற்பதற்குக் கட்டுபாடற்ற வயதெல்லை வழங்கி
கல்லூரிகளில் பல்லினமக்களும் கல்வி கற்றுப்
முடிவை தீர்மானித்த சுயகோல் முன்னதாக பாரீஸ் நகரில் நடந்த மற்றொரு 2–வது சுற்று ஆட்டத்தில் வேல்ஸ் – வடக்கு அயர்லாந்து அணிகள் சந்தித்தன. முதல் பாதியில் யாரும் கோல் ஏதும் போடாத நிலையில் 75–வது நிமிடத்தில் வேல்ஸ் அணியின் முன்னணி வீரர் காரெத் பாலே, இடது பக்கத்தில் இருந்து கோல் கம்பத்தின் முன்பகுதிக்கு பந்தை அடித்தார். அதை கோலாக்க சக வீரர் ஹால் ராப்சன் கானு ஓடி வந்தார். அதற்குள் வடக்கு அயர்லாந்து வீரர் காரெத் மெக்யூலி குறுக்கே பாய்ந்து பந்தை தடுக்க முயற்சித்தார். ஆனால்



**எஸ். கணேஷ்**

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

**யாழ். இந்துக்கல்லூரிச் சங்கம் - கனடா**

**விளையாட்டுப்போட்டியும் ஒன்றுகூடலும் - 2016**

யாழ். இந்துக்கல்லூரிச் சங்கம் - கனடாவினால் ஒழுங்கு செய்யப்படும் விளையாட்டுப் போட்டியும் ஒன்றுகூடலும் ஜுலை முதலாம் திகதி (July 01, 2016) காலை 10:00 மணி முதல் Sunnybrook Park, 1102, Leslie Street, Toronto (Eglinton Ave. E. and Leslie) இல் நடைபெறும். அனைத்துப் பழைய மாணவர்களையும் ஆசிரியர்களையும் நலன் விரும்பிகளையும் தமது குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

*www.JaffnaHinduCanada.com* | *www.jhcacanada.com*

சிவம் 647-802-7482
கிருஷ் 416-930-9119
சந்திரமோகன் 416-856-6900
கதிர் 416-856-6900

# மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும்

படிப்பிற்காகவும், வாழ்க்கைக்காகவும் தேவையான பழக்கங்களைப் பெற மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்குச் செல்கின்றனர். பள்ளிக்கூடத்தில் தான் வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என அறிகிறோம். எனவே வாழ்க்கையில் இது ஒரு முக்கிய காலமாகும். இக்காலத்தில் தான் படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கலாம். இப்படி இருந்தாலும், இக்காலத்தில் சில பிரச்சினைகளும், சவால்களும் ஏற்படுகின்றன. உதாரணத்திற்கு பள்ளிக்கூட வேலையை செய்தல், அந்த வேலையுடன் வேறு விடயங்களையும் கலந்து செய்தல், பிறருடன் பழகுதல் எனப்பிரச்சினைகள் உருவாகும். இப்படிப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ளக்கூடியவர்கள் தான் வாழ்க்கையிலும் சிறந்தவர்களாக வரமுடியும்.

பள்ளிக்கூட வேலையை செய்வது சிறிய வயதில் ஒரு பெரும் பிரச்சினையாகத் தோன்றாது. ஆனால் இக்காலத்திலிருந்தே மாணவர்கள் ஒழுங்காக எல்லா வேலைகளும் செய்யப் பழக வேண்டும். இல்லாவிட்டால், உயர் வகுப்புகளில் வேலை அதிகமாகும் போது, வேலை செய்யும் பழக்கம் இல்லாதவர்களுக்கு இது மிகவும் கடினமாக இருக்கும். ஒழுங்காக வேலைகளைச் செய்து கொண்டிருந்தாலும், வகுப்பு உயரும்போது வீட்டுவேலைகளை ஒரேநாளில் செய்து முடிக்கக்கூடிய மாதிரி இருக்காது. எனவே



எந்த பள்ளிக்கூட வேலையை முதலில் செய்ய வேண்டும், அதில் எவ்வளவு செய்து முடிக்க வேண்டும், எப்பொழுது அடுத்த வேலையைத்தொடங்க வேண்டும் எனத் தீர்மானிப்பது ஒரு சவாலாகும். ஆனால் இதைத் தீர்மானித்தவுடன் அதன்படி நடப்பதும் இன்னுமொரு சவால் ஆகும். இதனிடையே பள்ளிக்கூடத்து வேலைகளை விட வேறு வேலைகளும் செய்ய வேண்டியிருக்கும்.

மாணவர்களைப் பல்வேறு கலைகளிலும், விளையாட்டுகளிலும் சேர்ப்பதில் பெற்றோர்கள் ஆர்வம் காட்டுவார்கள். ஆரம்ப வகுப்புகளில் இது இலகுவானது. மேல்வகுப்பிற்குச் செல்லும் போது இவற்றையும், பள்ளிக்கூட வேலையையும் சேர்த்துசெய்வது பிரச்சினையாகும். எனவே விரும்பிய ஒரு கலையும் ஒரு விளையாட்டையும் மட்டும் மாணவர்கள் தேர்ந்து செய்வதே சிறந்தது. இதனால் களைப்பாறுவதற்கும் ஒரு விடயம் இருக்கும். ஆனால் அதிக வேலை இருக்காது. எந்த வேலைகளை செய்வது, இதை பெற்றோரிடம் எவ்வாறு கூறுவது என்பதும் ஒரு சவாலாகும்.

இவ்வாறு பள்ளிக்கூட வேலைகளையும், வேறு வேலைகளையும் சமாளிப்பது ஒரு சவாலாக இருக்கும். இதைச் சமாளிக்கத் தெரிந்த மாணவர்களுக்குப் படிக்கும் காலத்தில் வரும் மிகப் பெரும் பிரச்சினைகளை தவிர்ப்பது இலகுவாக இருக்கும். உதாரணத்திற்கு நேரத்திற்கு வேலை செய்யாமல் பள்ளிக்கூடத்தில் பிரச்சினை வருவது, மன அழுத்தம் வருவது போன்ற பிரச்சினைகளைத் தவிர்க்க முடியும். இதற்கு மாணவரின் முயற்சியும், திட்டமிடலும் பெற்றோரின் உதவியும் அவசியம்.



ஞா. ஆரணி
அகவை 17

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.


CUSTOM BUILD HOME

Build Your Personalized Dream Home

Starting From $139 / sq ft

Quality ! Price !! Peace of Mind !!!



உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு அனுபவம் நிறைந்த, நாணயமான, தரமான கட்டிட நிபுணர்கள்

Industrial Buildings from $75 / sq ft

TAMB CANADA (647) 877-8262 (TAMB)

**HELP WANTED**

***Ideal square*** இல் வேலை செய்வதற்கு

***Stair Installer (தச்சுவேலை)***

***(GENERAL HELP WANTED)*** அனுபவம் உள்ளவர்கள் தேவை. Full time or Part time. With Benefit.

தொடர்புகளுக்கு: ***416.830.3932***

கனடா வாழ் துன்னாலை – கரவை மக்கள் மன்றம் நடத்தும்

19வது ஆண்டு கோடை கால ஒன்று கூடல் 2016

இடம்: ***Morningside Park Area 5, (Ellesmere & Morningside)***

காலம்: July 09, 2016 நேரம்: காலை 9:30 – மாலை 6:30 வரை

தொடர்புகட்கு: வேல் விவேகானந்தன் 416-418-0477

வெ. சின்னராசா 416-724-4032

வே. சத்தியராஜா 416-291-5853

மானிட சேவையே மகேசன் சேவை

உலக ஒழுக்க நெறிக் கழகம்

**"புதுவாழ்வு"**

சேற்றில் இருந்து செந்தாமரை மலர்வதுபோல்

உங்கள் வாழ்க்கை துன்பத்திலிருந்து 'புதுவாழ்வு' மலர்வதற்கு...

பல்வேறு கலாச்சாரங்கசை சேர்ந்த விசேட திறன்மிகு மகளிரால் நடத்தப்பெறும்

**"மாறும் கலை நிகழ்வு"**

***July 02, 2016 @ 5pm, 1148 Bellamy Road North, Toronto***

**(பெரிய சிவன் ஆலய மண்டபம்**

**அனுமதி $25 (ஒரு குடும்பத்திற்கு)**

***647.763.2323 / soumyp@gmail.com***

# விளையாட்டு...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

துரதிஷ்டவசமாக பந்து சரியாக அவரது காலில் பட்டு கோலுக்குள் ஓடியது. இதனால் செய்வதறியாது அதிர்ச்சியில் உறைந்து நிற்க, மறுபுறம் வேல்ஸ் வீரர்கள் மகிழ்ச்சியில் திளைத்தனர். அவரது சுயகோல் தான் வடக்கு அயர்லாந்தின் வெளியேற்றத்துக்கு 'வேட்டு' வைத்து விட்டது.

ஐரோப்பிய கால்பந்து போட்டியில் போலந்து அணி பெனால்டி ஷூட்-அவுட்டில் சுவிட்சர் லாந்தை வெளியேற்றி முதல் அணியாக கால்இறுதிக்குள் நுழைந்தது.

வியக்க வைத்த கோல் - செயின்ட் எடினேவில் அரங்கேறிய ஒரு ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தும், போலந்தும் சந்தித்தன. விறுவிறுப்பான இந்த ஆட்டத் தில் 39-வது நிமிடத்தில் போலந்து வீரர் பிளாஸ்சிகவ்ஸ்கி கோல் அடித்தார். 82-வது நிமிடத்தில் சுவிட்சர்லாந்து பதில் கோல் திருப்பியது. சக வீரர் தட்டிக் கொடுத்த பந்தை அந்த அணி வீரர் ஷெர்டான் ஷகிரி அந்தரத்தில் பல்டி அடித்தபடி, இடது காலால் தலைக்கு மேல்வாக்கில் பந்தை உதைத்து பிரமாதமாக வலைக்குள் அனுப்பினார். 'பை-சைக்கிள் கிக்' எனப்படும் இந்த வகை ஷாட்டை பார்த்த அனைவரும் ஒரு கணம் மெய் சிலிர்த்து போனார்கள். இது 54 அடி தூரத்தில் இருந்து அடிக்கப்பட்ட கோலாகும். வழக்கமான நேர முடிவில் ஆட்டம் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது. இதையடுத்து தலா 15 நிமிடங்கள் வீதம் கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டது. கூடுதல் நேரத்தில் கோல் விழவில்லை.

போலந்து வெற்றி -இதனால் வெற்றி-தோல்வியை நிர்ணயிக்க பெனால்டி ஷூட்-அவுட் முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் போலந்து தனது 5 வாய்ப்புகளையும் கோலாக மாற்றி அசத்தியது. ஆனால் சுவிட்சர்லாந்து அணியில் 5 வாய்ப்பில் 4 மட்டுமே கோலாக்கப்பட்டது. கிரானிட் ஷகா பந்தை வெளியே அடித்து வீணடித்தார்.

பரபரப்பான பெனால்டி ஷூட் - அவுட் முடிவில் போலந்து அணி 5-4 என்ற கணக்கில் சுவிட்சர்லாந்தை தோற்கடித்து முதல் முறையாக கால்இறுதிக்குள் நுழைந்தது. ஐரோப்பிய கால்பந்து தொடரில் 'நடப்பு சாம்பியன்' ஸ்பெயினை வீழ்த்தி இத்தாலி அணி காலிறுதிக்கு முன்னேறியது. இந்த 'நாக்-அவுட்'சுற்றுப் போட்டியில் நடப்பு சாம்பியனான ஸ்பெயின், இத்தாலியை சந்தித்தது. போட்டியின் 33வது நிமிடத்தில் இத்தாலி வீரர் சியலினி 'பிரீ-கிக்' வாய்ப்பில் முதல் கோல் அடித்தார். அதேசமயம் ஸ்பெயின் வீரர்களால் கோல் அடிக்க முடியவில்லை. இதனால் முதல் பாதியில் 1-0 என முன்னிலை பெற்றது இத்தாலி. பின்னர் இரண்டாவது பாதியில் 'ஸ்டாப்பேஜ்' நேரத்தில் (90 1) இத்தாலி வீரர் பெல்லே மேலும் ஒரு கோல் அடித்தார். ஸ்பெயின் வீரர்களால் பதில் கோல் ஏதும் போட முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் 2-0 என்ற கோல் கணக்கில் இத்தாலி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. தோல்வியடைந்த 'நடப்பு சாம்பியன்' ஸ்பெயின் தொடரை விட்டு வெளியேறியது.



Tutorial325

Answers to Tutorial 324

1)Correction(ship travelling north at 12m/s)

The speed of the sailor relative to the ocean $s^2 = (0.5)^2+12^2+3^2$, s=12.4m/s

2)The number of integers is the number of sequences of length5 formed from 9 symbols using each at most once. There are $P(9,5)=\frac{9!}{4!}=15120$ integers.

3)Let the initial population be $P_0$, then $16P_0 = P_0(2)^{t/5}$, $16=2^{t/5}$, $2^4=2^{t/5}$, $4=t/5$, t=20 in 20 years

4)$y=2(x-29)(x+1)=2x^2-56x-58$

dy/dx=4x-56 =0 when tangent is horizontal

x=14 and y=-450

5)Correction: Solve $\log_5(2x+2) - \log_5(x-1)=\log_5(x+1)$

Solution: $\log_5(\frac{2x+2)}{x-1} = \log_5(x+1)$, x not equal to 1, $\frac{2x+2}{x-1}=x+1$,

$X^2-2x-3=0$, $(x-3)(x+1)=0$, x=3

Questions Tutorial 325

1)Calculate the area of the triangle given the vertices (7,3,4),(1,0,6) and (4,5,-2)

2)If a 10-N force acting in the direction of the vector(1,1) moves an object from P(-2,1) to Q(5,6) ,calculate the work done, distance in metres

3)Write a vector eqation of the line –x=y+2 =z

4)Find the distance from the poit(1,-2,-2) to the plane having an x-intercept of -1,y intercept 2,and z intercept of 3

5)Fully factor each of the folloing

a) $1+8x^{-1}+15x^{-2}$ ( b) $x^{1/2}-x^{5/2}$

By Mr S.FXAVIER (Teacher)

Tel 6473409490/4167322228

# மெட்ரோ - திரை விமர்சனம்

மாநகரங்களில் அன்றாடம் நடக்கும் குற்றங்கள், அந்தக் குற்றங்களைப் பின்னால் இருந்து இயக்கும் உலகம்தான் களம். சென்னையில் நகை பறிப்பில் ஈடுபடும் இளைஞர்களின் கதை. சென்னை யின் பயங்கரமான இன்னொரு முகத்தை காட்டியிருக்கும் இந்தப் படம் குற்றவாளிகள் தானாக உருவாகுகிறார்களா அல்லது உருவாக்கப்படுகிறார்களா என்ற கேள்விக் கும் விடை தேடுகிறது.

ஓர் இளைஞனை கொடூரமாக சித்திரவதை செய்யும் காட்சியுடன் துவங்கும் படம் அடுத்தடுத்து பரபரப்பான காட்சிகளுடன் வேகம் எடுக்கிறது. காவல்துறையில் ஏட்டாக பணிபுரிந்து ஓய்வுபெற்றவர் ராஜா. அவரது மனைவி துளசி. இவர்களின் மூத்த மகன் அறிவழகன். இளைய மகன் மதியழகன். வெளியே எங்கும் போகாமல் வீட்டிலேயே இருக்கும் ராஜா வீட்டிலேயே மது அருந்துகிறார், சிகரெட் குடிக்கிறார். ஒரு பத்திரிகை அலுவலகத்தில் ரிப்போர்ட்ட ராக வேலை செய்கிறார் அறிவழகன். குடும்பத்தினர் மீது மிகுந்த பாசம் வைத்திருப்பவர். தம்பி மதியழகன் கல்லூரி மாணவர். அப்பாவும் மகனும் சிகரெட்டை பகிர்ந்துகொள்ளும் அளவுக்கு நெருக்கமாக இருக்கிறார்கள். இந்த அன்பான மகிழ்ச்சி யான குடும்பத்தில் மதியழகன் காதல் வழியாக சிக்கல் நுழைகிறது.

மதியழகன் கல்லூரி, காதலி, பைக், லேப்டாப், செல்போன் என்று எல்லா வற்றிலும் விலையுயர்ந்த பொருட்களுடன் மற்றவர்கள் மெச்சும் வகையில் இருக்க வேண்டும் என விரும்புகிறார். காதலியின் விருப்பத்தை நிறைவேற்ற தன் லை.'.ப் ஸ்டைலை மாற்ற நினைக்கிறார் மதியழகன். ஆனால், அவர் வாங்க நினைக்கும் பைக் விலையோ ஒன்றரை லட்சம் ரூபாயாக இருக்கிறது. அது அவரது தகுதிக்கு அதிகமானது. வீட்டில் அவ்வளவு பணமில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அறிவழகன் தம்பிக்காக வங்கிக் கடனுக்கு முயல்கிறார். ஆனால் கிடைக்கவில்லை.

இந்நிலையில் பணத்துக்காக வகுப்புத் தோழன் கணேஷ் மூலமாக நகைப்பறிப்பு திருடர்கள் உலகத்துக்குள் நுழைகிறான் மதியழகன். சென்னையின் நகைப்பறிப்பு குழுத்தலைவன் தாதா குணா அறிமுகம் மதியழகனுக்கு கிடைக்கிறது. மதியழகன் கைகளில் பணம் புரள்கிறது, அவன் விரும்பியதெல்லாம் கிடைக்கிறது.

ஒருகட்டத்தில் மதியழகனின் நகைப்பறிப்புத் தொழில் அவனது அம்மாவுக்குத் தெரிய வருகிறது. அம்மா அவனைக் கண்டிகி றாள். ஆத்திரத்தில் அம்மாவை கொலை செய்துவிடுகிறான் மதியழகன். ஆனால் தான் கொலை செய்ததை மறைத்து விடுகிறான். அம்மாவைக் கொன்றது யார்? என்று தேட ஆரம்பிக்கிறான் மூத்த மகன். இறுதியில் கொலையாளி யாரென்று கண்டு பிடித்து அதிர்ச்சியடையும் அறிவழகன், சொந்த தம்பிக்கு கொடுக்கும் தண்டனை யோடு படம் முடிகிறது. ஒரு சில லாஜிக் குறைகள் தவிர விறுவிறுப்பான திரைக் கதை, அந்நியப்பட்டு நிற்காத பாத்திரங் களுக்கேற்ற நடிகர்கள் நடிப்பு, பின்னணி இசை, ஒளிப்பதிவு, படத்தொகுப்பு என எல்லாமே படத்தின் பலமாக இருக்கிறது.

படத்தின் கதாநாயன் இவர்தானோ என்று நினைக்கும் அளவுக்கு படம் முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார் மதியழக னாக வரும் சத்யா. ஒரு அப்பாவித் தம்பி யாகத் தோன்றி, தடுமாற்ற மனநிலை கொண்ட பாத்திரமாக, மெல்ல மெல்ல குரூர முகம் காட்டும் சத்யாவின் நடிப்பு சிறப்பு. "எனக்கு இதாம்மா பிடிச்சிருக்கு. தப்பில்லம்மா. என்னை புரிஞ்சுக்கம்மா" என்று அம்மாவிடம் கெஞ்சும்போதும், கடை-சியாக தன் அண்ணனிடமும் இதையே சொல்லும் போதும் தன் செயலை நியாயப் படுத்துவதில் வெற்றி பெற்றிருக்கிறார். நகைப்பறிப்பு குழுத் தலைவன் குணாவுக்கு தண்ணி காட்டி அவரது இடத்தைப் பிடிக்கும் காட்சிகளில் பிரமாதப்படுத்தியிருக்கிறார்.

குடும்பத்தின் மூத்த மகன் அறிவழகனாக நடித்திருக்கிறார் புதுமுகம் சிரிஷ். உண்மை யில் இவர்தான் படத்தின் கதாநாயகன். நன்றாக நடித்திருக்கிறார். ஆனால் சத்யா நடிப்புடன் ஒப்பிடும்போது சிரிஷ் நடிப்பில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும். சிரிஷுக்கு ஜோடி மாயா. இலை ஓர ஊறு காய் போல வந்து செல்கிறார். சிரிஷுட னான காதல் காட்சிகளுக்காகவும் சஸ்பென்ஸ் படத்தில் ஒரு ரிலாக்ஸுக்கா



- சிவதானு -

வும் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

அப்பா ராஜாவும் அம்மா துளசியுமே மனதை ஆக்கிரமிக்கிறார்கள். நண்பராக நடித்திருக் கிறார் செண்ட்ராயன். இவரது அறிமுகக் காட்சியே பாட்ஷா ஸ்டைலில் இருக்கிறது. நண்பனுக்காக எந்த அளவுக்கு இறங்க முடியுமோ அந்த அளவுக்கு இறங்கும் பாத்திரம். திருடர்கள் இப்படித்தான் இருப் பார்கள் என நாம் புரிந்து வைத்திருப்பது போன்ற முகம். ஆனால், திருட்டுக்கும் அநீதிக்கும் எதிராக விரல் சொடுக்குபவராக வருகிறார்.

நகைப்பறிப்பு கும்பல் தலைவன் குணாவாக வருகிறார் பாபி சிம்ஹா. நடிப்பில் மிரட்டி யிருக்கிறார். பயங்காட்டும் தாதாவாக வந்து கடைசியில் போதை மருந்தினால் பைத்தி யக்காரனாக பரிதாபமாக முடிகிறது இவரது கதை.

இசை: ஜோஹன். பாடல்கள் கவனம் பெறும்படியாக அமையவில்லை. ஆனால் பின்னணி இசை கதையுடன் ஒன்றி அழைத்துச் செல்கிறது. ஒளிப்பதிவு: என். எஸ். உதயகுமார். டைட்டில் காட்சி, மற்றும் இறுதிக் காட்சியில் காட்டப்படும் கழுகுப் பார்வையே இவரது திறமையைக் காட்டு கிறது. குழந்தையுடன் பைக்கில் வரும் ஒரு தம்பதியிடம் திருடர்கள் கைவரிசையை காட்டும் காட்சியில் அந்தக் குழந்தை அப்படியே அந்தரத்தில் பறந்து வரும்போது நமது உயிர் தவிக்க ஆரம்பித்துவிடுகிறது. பயங்கரம். இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, படம் முழுக்க திருட்டு உலகத்தின் இருட்டுப் பக்கத்தில் தன் ஒளிப்பதிவால் வெளிச்சம் பாய்ச்சுகிறார். ரமேஷ் பாதியின் படத் தொகுப்பும் படத்துக்கு பலம் சேர்க்கிறது.

திரைக்கதை, இயக்கம்: அனந்த கிருஷ்ணன். ஏற்கெனவே விதார்த் நடிப்பில் 'ஆள்' என்னும் திரில்லர் படத்தை தந்தவர். இந்தப் படத்தில் நகைப்பறிப்பு திருடர்களின் உலகத்தை நுட்பமாக நம் கண் முன் காட்டுகிறார். இதற்காக கடுமையான ஆராய்ச்சிகள் செய்திருக்க வேண்டும். அவ்வளவு துல்லியமான தகவல்கள். தலையை விரித்துப் போடாமல் கொண்டை போட்டிருக்கும் பெண்கள், ஜடை போட்டிருப்பவர்கள், சேலை அணிந்திருக் கும் பெண்கள், துப்பட்டா இல்லாத பெண்கள், பேசிக்கொண்டே கவனமில்லா மல் இருக்கும் பெண்கள், குழந்தையுடன் செல்லும் பெண்கள் - இவர்களைத்தான் குறி வைக்கவேண்டும் கழுத்தில் ஒரு நகக் கீறல்கூட விழுகக் கூடாது போன்ற நகைப் பறிப்பு உலகத்தின் எழுதப்படாத விதிகளை குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார். எப்படி பறிக்கிறார்கள் என்பதையும் பல காட்சிகளில் விளக்கியிருக்கிறார். பறித்த நகையை உருக்கி, தங்கக் கட்டியாக வகுத்தெடுத்து, அதனை விற்கும் இந்த ஏரியாக்களையும் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான் கதையாக திருடர்கள் சிக்கியும் கொள்கிறார்கள். இதிலும் அந்த வயதான செக்யூரிட்டி தனது சைக்கிளை தூக்கி செயின் திருடர்களை அடித்து வீழ்த்துமிடம் அபாரம்.

காதலிக்காகத்தானே நகைப் பறிப்பில் ஈடுபட ஆரம்பித்தான் மதியழகன். ஆனால், அப்புறம் அந்தக் காதல் என்னாச்சு என்று காட்டவில்லை. இது பெரிய குறை.

அனைவரையும் அரவணைத்து வாழ்வளிக் கும் ஒரு மாநகரின் பயங்கரமான இன் னொரு முகத்தை உரித்துக் காட்டியிருக்கும் படம். தாய், தந்தை, குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் நல்லவர்களாக இருந்தும் ஒருவர் மட்டும் தடம் மாறும்போது ஏன் என்ற கேள்வி எல்லாருக்குள்ளும் எழுமே. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் இன்றை பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையும்தான் ஒரு மனிதனை குற்றவாளி யாக்குகிறது என்று அதற்கு பதில் சொல்கிறது இந்தப் படம்.

இந்தப் படம் பார்க்கும் பெண்கள் அதன் பின்னர் சில நாட்களாவது நிச்சயம் கழுத்து வரை இழுத்து போர்த்திக்கொண்டுதான் நட மாடுவார்கள். அந்தளவில் வெற்றி பெற்றிருக்கிறது 'மெட்ரோ'.


**NALLUR DEVELOPMENT SOCIETY - CANADA**

**வருடாந்த ஒன்றுகூடல் - 2016**

Date : July 03.2016
Place : Thomson Memorial Park Picnic Area Shelter (C)

| | |
|---|---|
| Yogeswary Rajaratnam | - 416.438.8444 |
| Kala Asokan | - 416.830.2366 |
| Jeyalingam Dharmalingam | - 416.724.7759 |
| Thiru Satkulendran | - 416.759.2049 |
| Varatha Vivekanandhan | - 416.492.2481 |
| Nages Shan (Sports) | - 416.995.4900 |

**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்






மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்





**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# EDUCATION

## Review Questions16-13

### PHYSICS 11

(i)Explain " whiplash" in automobile accident.

(ii) What is terminal velocity?

(iii) Discuss the factors which are likely to affect the terminal velocity of an object falling in the earth's atmosphere.

### PHYSICS 12

A pitcher throws a 160 g baseball with a speed of 90miles/ h (144 km/h). The ball was in contact for 0.8s before releasing it.

The ball travels at a constant speed ( ignore air resistance) in a horizontal flight and struck by a batter. After leaving the bat, the ball travels in the opposite direction (horizontally) with the speed of 52m/s.

(i)Determine the average force exerted by the pitcher on the ball?

(ii)What is the impulse acts on the ball while it is contact with the bat?

(iii)If the impact time for the base ball-bat collision is 1.3m.s, calculate the average force acts on the base ball.

### BIOLOGY Gr 12

Explain, why the use of genetically modified herbicide-resistant crop plants in an agricultural ecosystem is a problem?

### CALCULUS & VECTORS 14 8

Differentiate the following,

(i) $\sqrt{\frac{1+x^3}{1-x^3}}$ (ii) $\sqrt{1+x^2}.\,sin^3\sqrt{x}$

### FUNCTIONS 11

(A)For what value (s) of K , the following function has no real roots.

$f_{(x)} = k\,x^2 - 6x + k$

(B) Determine the inverse of each linear function

(i) $f(x) = \frac{x-7}{5}$ (ii) $g(x) = -\frac{2x}{3} + 2$

## Answer Key : 16-12

### BIOLOGY 12

- Cancer cells rapidly dividing and abnormally reproducing.
- Cell division occurs followed by DNA replication.
- Chemical analogues that mimic the structure of nucleotides will prevent DNA polymerase and therefore the DNA replication will be prevented.
- Thus cancer cells won't be able to reproduce/ further division.

.... Chemotherapy destroy large numbers of cancer cells.

- Sperm production and red blood cells are from rapidly dividing cells. Chemotherapy will stop the sperm production and red blood cell numbers.
- Certain chemotherapy drugs can damage bone marrow — the spongy material found in your bones.
- Losing of hair is another symptom

### CALCULUS 12

(A) Find the limits , $\lim_{x\to 0} \frac{\sin 2x + 3x}{2x + \sin 3x}$

Answer: 1

Differentiate the following,

(I) $y = \cos^2\frac{1}{x}$

Answer: $\frac{2}{x^2}\cos\frac{1}{x}\sin\frac{1}{x}$

(II) $y = \cos^{-1}\left(\frac{3+5\cos x}{5+3\cos x}\right)$

Answer: $\frac{4}{(5+3\cos x)^2}$

(III) $y = 3 - \beta^2 cos\beta$

Answer: $\beta\,(sin\,\beta - 2\,cos\,\beta)$

(IV) $y = \beta^2 sin\beta + 2\beta\,cos\beta \;\; -2\;sin\beta$

Answer: $\beta^2 cos\beta$

Answer key
16-13 - next issue
647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE


# இதயம்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

மாரடைப்புக்கு நீரிழிவும் ஒரு காரணமாகும். எனவே இரத்தத்தில் சீனி அளவு கட்டுப்பாட்டில் இருப்பது மிகவும் நல மாகும். வெறும் வயிற்றில் சீனி அளவை கணித்தால் 80-100 மி.கி அளவும் சாப்பிட்டு விட்டு 2 மணித்தியாலத்தின் பின்பு 120-140 மி.கி அளவும் இருக்க வேண்டும். சீனிச் சத்து மிகுந்தால் நீரிழிவு கட்டிப்பாட்டில் இல்லை என்பதே பொருள். சாதாரண-மானவர்களை விட நீரிழிவு உள்ளவர் களுக்கு 2 மடங்கு ஆபத்து இதய நோய் களில் இருக்கும். குடும்பத்தில் எவருக்கா வது நீரிழிவு இருந்தால் அக்குடும்பத்தில் பிறந்தவர்கள் அனைவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

மூன்றாவது வழி கொழுப்பை கட்டுப்பாட் டில் வைத்திருக்க வேண்டும். ஒருவருக்கு மொத்த கொழுப்பு (Total Cholesterol) 200 மி.கி க்கு குறைவாகவிருக்க வேண்டும். MDL எனப்படும் கெட்ட கொழுப்பு 100 மி.கி க்கு குறைவாகவும் நல்ல கொழுப்பு(HDL) 40 மி.கி க்கு அதிகமாகவும் இருக்க வேண்டும். ஆரோக்கியமான உணவுப் பழக்கத்தை கைக்கொண்டால் இரத்த கொழுப்பு சரியாகவே இருக்கும்.

நாலாவது வழி எமது உடல் எடையை சரியாக வைத்திருப்பதாகும். இதனை (Body Mass Index - BMI) என்பர். இடுப்பளவு 19-24 இருந்தால் உடல் எடை சரி. உடல் இடுப்பளவு 30-35 இருந்தால் உடல் பருமன் அதிகமாகி விட்டதனை குறிக்கும். இது 40 ஐ கடந்து விட்டால் ஆபத்தான உடற்பருமனாகும். இப்படியான எடை கூடியவர்கள் உடற்பயிற்சி செய்து உடல் எடையை குறைக்காது விட்டால் மாரடைப்பு நெருங்குகின்றது என்பதே அர்த்தமாகும்.



ஐந்தாவது வழி தினசரி உடற்பயிற்சி செய்வதுதான். இன்று எவரைப் பார்த்தா லும் நேரம் இல்லை என்று கூறுவதுடன் அவசரமாக ஓடிக்கொண்டிருப்பார்கள். ஒரு நாளில் உள்ள 24 மணி நேரத்தில் இதயத் துக்காக 45 நிமிடங்களை ஒதுக்குவது மிக அவசியம். நடைப்பயிற்சி மெல்லோட்டம், நீச்சல் பயிற்சி, சைக்கிள் ஓட்டுதல் போன்ற பல பயிற்சிகளை செய்தால் இதயத்துக்கு நல்ல பாதுகாப்பை தரும்.

அடுத்த ஆறாவது வழி எண்ணெய் பாவனை பற்றியதாகும். தேங்காய் எண்ணெய், முட்டை மஞ்சள்கரு, ஆட்டிறைச்சி, வெண்ணெய், எண்ணெயில் பொரித்த உணவுகள், செயற்கை உணவுகள் என்பவற்றினை தவிர்க்க வேண்டும். பிள்ளைகள் மக்டொனால்ட் போன்ற துரித உணவகத்தில் உண்ணும் அனைத்துமே உடலுக்கு கெடுதியானது தான். சிலர் சூடாக்கிய எண்ணையை திரும்பத் திரும்ப பாவிப்பர். இதுவும் நலமற்றது. 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் உப்பு, இனிப்பு, கொழுப்பு ஆகிய மூன்றையும் குறைத்துக் கொள்வது நலம்.

ஏழாவது வழி உணவுப் பழக்கமாகும். அரிசி, கோதுமை, தானிய வகை கள், நார்ச்சத்து மிகுந்த பயறு வகைகள், ஓட்ஸ், அவித்த கொண்டைக் கடலை, பச்சைக் காய்கறி கள் மற்றும் பழங்கள் என்பன இதயம் காக்கின்ற உணவுகள். அசைவ உணவு சாப்பிடுபவர்கள் தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சி, மீன் வகைகளை சாப்பிட லாம். ஒமேகா-3 கொழுப்பு அமிலம் இதயத்துக்கு பாதுகாப்புத் தரும் சத்து உணவாகும். பழவகைகளில் தோடம்பழம், திராட்சை, அப்பிள், கொய்யா, மாதுளை, அன்னாசி என்பன சிறந்தவை. இப்படியான உணவுகளில் கொழுப்பு குறைவாகும். இதயத்திற்கு இதம் தரும் உணவுகள் இவை.

எட்டாவது வழி சில கெட்ட பழக்கங் களுக்கு 'நோ' சொல்வதாகும். புகைப் பிடித்தலை நிறுத்துவது முக்கியமாகும். புகையிலையில் உள்ள நிக்கொட்டின் என்னும் நச்சு இரத்த குழாய்களை சுருங்கி இரத்த அழுத்தத்தினை அதிகரித்து இதயத்துக்கு கூடுதலான சுமை தருகிறது. புகைபிடிப்பதால் இதயம் மட்டுமல்ல நுரையீரல் கூட பாதிப்படையலாம்.

ஒன்பதாவது வழி நல்ல உறக்கமாகும். உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் தினமும் 8 மணி நேரம் உறங்க வேண்டும். தூக்க பற்றாக் குறையால் மன அழுத்தம் ஏற்படுவதோடு இரத்த அழுத்தத்தினையும் கூட்டுகிறது. தற்போதைய வாழ்க்கை முறையில் நிம்மதியாக தூங்குவது குறைவாகின்றது. நித்திரை குறைபாடுள்ளவர்களை பார்க்க வே தெரியும். இவர்கள் நடைப்பிணம் போலவே வாழ்வர். நல்ல உறக்கமும் இதயத்தை பாதுகாக்கும்.

பத்தாவது வழி சிறந்த தியான பயிற்சி செய்தலாகும். இன்று பலர் யோகாப் பயிற்சிகளை மேற்கொள்ளுகின்றனர். மனதையும் உடலையும் ஒரே நேரத்தில் நல்ல நிலைக்கு கொண்டு வருவது தியானமும், மூச்சுப் பயிற்சியும் உட்பட்ட யோகப் பயிற்சிகளாகும்.

தொடர்ச்சி 38ஆம் பக்கம்

# கற்பனை கலந்த உண்மைக்கதை

## சூழலும் ஊழலும்

கிருஷாந்தன் கூறுகிறான்...

நான் கனடா வந்து இரு மாதங்கள் ஆகிவிட்டன. ஸ்காபரோவிலிருந்த போது நான் போட்ட கடிதத்துக்கு அம்மா மிகவும் நீண்ட ஒரு கடிதம் எழுதியிருந்தார். யாவும் எனது எதிர்காலம் பற்றியும் குடும்பத்தின் எதிர்காலம் பற்றியுமே இருந்தது. புதிய நாடு, புதிய பாசை, புதிய சூழல் யாவற்றையும் சமாளித்து வெற்றி பெற்றால் வாழ்க்கையில் வரும் சங்கடங்களையும் சஞ்சலங்களையும் சமாளிக்கும் பக்குவம் ஏற்படுமென்றும் எதையும் கண்டு பயப்படாமல் இருக்கும் படியும் எழுதியிருந்தார். வாசிக்கும் போது ஆத்திரமும் அதேநேரம் ஆறுதலாகவும் இருந்தது. இதுவரை காலமும் சிறு சிறு துன்பங்களையும் துயரங்களையும் சிறு வயதிலேயே சந்தித்துப் பழக்கப்பட்ட எனக்கு அம்மாவின் எழுத்து ஆறுதலைத் தந்தது. ஆனால் உறைபனிக்குளிரில் காலை நான்கு மணிக்கு எழுந்து பேப்பர் போடப்போன போது எற்பட்ட வேதனையும் வெறுப்பும் ஆத்திரமூட்டின. இதற்காகவா இங்கு வந்தோம். பேசாமல் திரும்பி விடுவோமா எனப் பலமுறை யோசித்தது உண்டு. ஆனால் அப்போது வன்னியில் இருந்த போர்க்காலச் சூழலை நினைத்து அதைக் காட்டிலும் இது என்ன வேதனை என எண்ணி ஆறுதலைடைந்தேன்.

**- துறையூரான் -**

அன்று சனிக்கிழமை. எனவே சுவிசிலுள்ள சித்திக்கு தொலைபேசி எடுக்க முடிவு செய்தேன். ஜுலியாவிடம் விடயத்தைக் கூறினேன். என்னிடம் வெளிநாட்டுத் தொலைபேசிக்கான அட்டை இருந்தது. எனவே ஜுலியா அதைப் பாவித்து எனக்கு தொடர்பை எடுத்துத் தந்துவிட்டுப் போய் விட்டா. சித்திதான் என்னோடு பேசினா. அவவுக்கு நான் இப்போது வேறு ஓரிடத்தில் இருப்பதைக் கேட்டு ஒரே ஆச்சரியமாகவும் அதிசயமாகவும் இருந்தது. முன்பு நானிருந்த வீட்டுக்காரர் என்னைத் திட்டியதாகவும், தன்னோடு அநாகரிகமாகப் பேசினதாகவும் சொன்னா. இதைக்கேட்டு நானும் ஆத்திரப்பட்டேன். என்னை இம்சித்ததாகவும் நன்கு பராமரிக்கவில்லை எனவும் குற்றஞ்சாட்டி சிறுவர் உதவிச் சங்கம் தங்கள் மீது வழக்குப் போட்டிருப்பதாகவும் சித்தி சொன்னா. நடந்த விடயங்களை நான் விபரமாகச் சொன்னேன். பாடசாலையே இந்த நடவடிக்கையை எடுத்தது பற்றியும் நான் தற்போது ஒரு சிறுவர் காப்பகத்தில் இருப்பது பற்றியும் சொன்னேன். அதைக் கேட்ட பின் சித்தி ஆறுதலடைந்தா. புதிய தொலைபேசி நம்பரையும் விலாசத்தையும் கேட்டு எழுதிக் கொண்டா. தேவையென்றால் பணம் அனுப்புவதாகவும் சொன்னா. அம்மாவுக்கு எனது நிலை பற்றிக் கூறச் சொன்னேன். நானும் கடிதம் எழுதுவதாகக் கூறினேன். ஏறக்குறைய 15 நிமிடங்களுக்குக் கதைத்தேன். மனம் ஆறுதலடைந்தது.

வார இறுதி நாட்களில் நேரம் போக்குவது கஷ்டமாக இருந்தது. எவ்வளவு நேரத்துக்குத்தான் படிப்பது. சிலவேளைகளில் பின்னேரத்தில் சிறு தூரத்திலுள்ள பூங்காவுக்குப் போவேன். சிலவேளைகளில் அங்கு எமது மக்களும் பிள்ளைகளும் வந்து காலங்கழிப்பார்கள். ஜுலியா என்னை அதிக தூரம் போகவேண்டமென எச்சரிக்கை செய்திருந்தார். சாமலீ பெரும்பாலும் வார நாட்களில் வீட்டில் பகலில் இருப்பதில்லை. ஏதாவது காரணங்காட்டி அவன் நண்பர்களோடு ஊர் சுற்றப் போய் விடுவான். அவனைக் கட்டுப்படுத்துவதில் ஜுலியாவுக்கும் பிரச்சினையாக இருந்தது. ஓரிரு தடவை எனக்கும் அவனைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி கூறினா. நான் மேசையில் வைக்கும் சில்லறைக் காசுகள் பெரும்பாலும் காணாமல் போய் விடும். ஆரம்பத்தில் நான் அதிகம் கவனிக்கவில்லை. பின்னர்தான் அவன் காசைத் திருடுகிறான் என்பதை உணர்ந்தேன். சிறு தொகை ஆனபடியால் இனிக் கவனமாக இருக்க வேண்டுமென, மிஞ்சும் பணத்தை மேசை லாச்சிக்குள் வைத்துப் பூட்டினேன். இரண்டொரு தடவை என்னிடம் பணங் கேட்டான். நான் கொடுத்தேன். வாங்கிய பணத்தைத் திருப்பித் தராதபடியால் நான் கொடுப்பதை நிறுத்திக் கொண்டேன். அவன் கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகியிருப்பதை உணர்ந்து அவனோடு பழகுவதில் கவனமாகவே இருந்தேன். பாடசாலையிலும் அவன் பெரும்பாலும் பையன்களுடனும், பெட்டைகளுடனும் கூடித் திரிவதை அவதானித்தேன். என்னை அவர்களுக்குக் காட்டி நையாண்டிக் கதைகள் கதைத்துச் சிரிப்பதையும் பலமுறை கண்டிருக்கிறேன். மேலும் எனது நண்பன் மோகனும் சாமலீயைப் பற்றிக் கவனமாக இருக்க வேண்டுமென எனக்கு எச்சரித்திருந்தான். மோகன் பலமுறை என்னைத் தங்கள் வீட்டுக்கு வரும்படி கேட்டபோதும் எனது நிலைமையை எடுத்துக் கூறினேன். ஜுலியாவின் எச்சரிக்கை பற்றி அவனும் நன்கு உணர்ந்து கொண்டான். சிலவேளைகளில் வீட்டிலிருந்து எங்கள் சாப்பாடுகளைக் கொண்டு வந்து தந்தான். அத்துடன்

## அலசல் அரங்கம் - 8

பாடங்கள் படிப்பதிலும் உதவிகள் செய்தான். அவன் கனடாவிலேயே பிறந்ததால் ஆங்கிலத்திலும் பிறபாடங்களிலும் கெட்டிக்காரனாயிருந்தான். ஸ்காபரோப் பள்ளிக்கூடத்தில் எவ்வாறு முகுந்தன் எனக்கு உதவிகள் செய்தானோ அவ்வாறே மோகனும் எனக்கு உதவிகள் செய்யதான். முகுந்தனின் தொலைபேசி எண் எதனையும் கேட்டு வைக்காமல் போனதையிட்டு மிகவும் வருந்தினேன். இனி அவனை எப்போது காண்பது என மனம் அங்கலாய்த்தது. திக்கற்ற எனக்கு இவ்வாறு ஒவ்வொருவராக உதவிக்கு வருவதைக்கண்டு கடவுளுக்கு நன்றி செலுத்தினேன். வீட்டிலிருந்து கிளம்பும் போது அம்மா எனக்குப் பிள்ளையார் படமொன்று தந்து விட்டு ஒவ்வொரு நாளும் கும்பிடு என்று சொல்லியது ஞாபகத்துக்கு வந்தது. அதை இன்றுதேடி எடுத்து மேசையில் வைத்தேன்.

அன்று இரவு ஒன்பது மணியளவில் சாமலீ அறைக்குள் வந்தான். வழக்கமான புகை வாசனைக்கு பதிலாக அன்று மிகவும் மோசமான வாசனை வந்தது. எனக்குத் தலையிடிப்பது போன்றிருந்தது. நான் ஒன்றும் பேசாமல் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு வரவேற்பறைக்குச் சென்றேன். ஜுலியா சிறிது நேரத்தின் பின் எங்கள் அறைவாசலில் வந்து நின்று சாமலீயிடம் ஏதோ கோபத்தோடு பேசினா. எனக்கு அரைகுறையாக விளங்கியது. அவனுக்குக் கடுமையான எச்சரிக்கை விடுவதையும் வீட்டை விட்டுக் கலைக்க வேண்டியிருக்குமென்பதையும் எடுத்துச் சொன்னா. அவனும் சில வார்த்தைகளை எதிர்த்துக் கூறிவிட்டு கதவைத் திடீரென அடித்துச் சாத்தினான். அவ கோபத்தோடு என்னிடம் வந்து அவன் ஏதோ வித்தியாசமாகப் பாவித்திருக்கிறான் போல் தெரிகிறது. நீ கவனமாக இரு, திங்கட்கிழமை நான் காரியாலயத்துக்கு அறிவிக்க வேண்டுமெனச் சொல்லிவிட்டு மேலே போய்விட்டா. எனக்கும் ஓரளவு பயமாக இருந்தது.

பத்து மணியளவில் அறைக்குள் போனேன். சாமலீ கட்டிலின் மேல்படுத்துக் கொண்டு ஏதோ தன் பாட்டுக்கு அலட்டிக் கொண்டிருந்தான். இடைகிடை தூஷண வார்த்தைகளும் வந்து கொண்டிருந்தது. எனது மேசை விளக்கை அணைத்துவிட்டு நான் படுத்து விட்டேன். அவனது மேசைவிளக்கு எரிந்து கொண்டிருந்தது. நான் எப்போது நித்திரை கொண்டேன் எனத் தெரியாது. நல்ல உறக்கத்திலிருக்கும் போது எனது தொடைப்பகுதியில் ஏதோ ஊர்வது போன்றிருந்தது. நான் அரை நித்திரையில் கையால் தட்டினேன். ஏதோ தட்டுப்பட்டது. திடீரென விழித்து எழும்பினேன். கட்டிலுக்குப் பக்கத்தில் சாமலீ சிரித்துக் கொண்டு நின்றான். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இதற்கிடையில் எனக்குப் பக்கத்திலிருந்து தோள்மேல் கைபோட்டான். மெதுவாகப்பயப்படாதே என்றான். நான் பயந்து எழுந்து அவனைத் தள்ளி விட்டேன். அவன் என்கையைப் பிடித்தான். நான் கையை உதறித் தள்ளிவிட்டு அறைக்கு வெளியே வந்தேன். அவன் ஏதோ சமாதானமாகப் பேசினான். அவன் குடிபோதையில் இருப்பதை உணர்ந்து நான் எதுவும் எதிர்த்துப் பேசவில்லை. எல்லோரும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார்கள். நடுச்சாமம் என்பதை உணர்ந்து அவனை 'நிறுத்தடா உன் சேட்டையை' என்று மட்டும் சொல்லி விட்டு வெளியே வந்தேன். அவன் ஏதோ சமாதானங் கூறுவது போல என்னை கட்டிப் பிடித்தான். வாயிலிருந்து கெட்ட நாற்றம் வீசியது. நான் அவனைத் தள்ளிவிட்டு வரவேற்பறைக்கு வந்தேன். ஒரே இருட்டு என்றாலும் எங்கள் அறையில் மேசை விளக்கு எரிந்து கொண்டிருந்ததால், நான் வரவேற்பறை விளக்கைப் போட அந்த வெளிச்சம் போதுமாக இருந்தது. வெளிச்சத்தைக் கண்டதும் அவன் பேசாமல் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான்.


இனி அறைக்குள் சென்றுபடுக்க முடியாது எனத் தீர்மானித்தது வரவேற்பறையிலிருந்த சோபாவில் படுத்தேன். நித்திரை வரவில்லை. பயம் ஒருபுறம். இவனோடு ஒரே அறையில் இனி இருக்கலாமா? இவனது நோக்கம் எனக்கு ஒருவாறு விளங்கியது. இதை நினைந்து இன்னும் பயம் கூடியது. விடிந்ததும் ஜுலியாவுக்கு விடயத்தைக் கூறி வேறு இடத்துக்கு அல்லது வேறு அறைக்கு மாற வேண்டுமெனத் தீர்மானித்தேன். விளக்கை அணைத்தால் இவன் வரக்கூடுமென அதை அணைக்காமலே படுத்திருந்தேன். பல்வேறு எண்ணங்கள் மனதில் தோன்ற ஆரம்பித்தன. ஊரிலிருந்தால் இயக்கத்தில் சேர்ந்திருப்பேன். அங்கும் பலகஷ்டங்கள் உயிராபத்துக்குள் ஏற்படுமென எண்ணிப் பல ஆயிரம் மைல்களுக்குப்பால் ஓடி வந்ததும் பிரச்சினைகள் என்னோடு ஒட்டிக் கொண்டிருப்பது போன்ற எண்ணம் ஏற்பட்டது. தொடரும்...


மொறட்டுவ பல்கலைக்கழக பழைய தமிழ் மாணவர் ஒன்றியம் - கனடா

**கோடைகால ஒன்றுகூடல் - 2016**

மொறட்டுவைப் பல்கலைக்கழக பழைய தமிழ் மாணவர் ஒன்றியம் - கனடாவினால் ஒழுங்கு செய்யப்படும் கோடைகால ஒன்றுகூடல் ஞாயிற்றுக்கிழமை, யூலை 3 ஆம் திகதி (July 3, 2016) காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை Neilson Park Scarborough (Neilson & Finch), Toronto இல் நடைபெறும். அனைத்து மொறட்டுவைப் பல்கலைக்கழக பழைய தமிழ் மாணவர்களையும் நலன் விரும்பிகளையும் தமது குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இரவீந்திரன் 416-817-8479 சிவபாலன் 416-856-9565 சேதுமாதவன் - 416-858-4259


**சந்திரமௌலீஸ்வர சிவாலயம்**

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

நகைச்சுவைத் தொடர் 336

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்






## Happy canada day

இந்த வாரம் புனித ரமலான் பெருநாள்.



149 ஆவது கனடாவின் பிறந்த தினம். நாடளாவிய ரீதியில் இன மத மொழி வேறுபாடின்றி கொண்டாடப்படுகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்..." கவிஞர் பூங்குன்றனார் எத்தனை வருடங்களுக்கு முன் சொல்லி வைத்தார்.

'பெற்ற தாயும் பிறந்தநன் நாடும் நற்றவவானிலும் நனி சிறந்ததுவே'. வாழ வந்தோம் வாழ வைத்தது என அடிக்கடி உலகர் சொல்லிக்கொள்வார். கனடாவில் பிறந்த எத்தனையோ தமிழ் பிள்ளைகள் எத்தனை சாதனைகளைப் புரிந்துள்ளனர், புரிகின்றனர்.

கனேடிய கீதத்தில் சில வரிகள் நீக்கப்படுவதற்கான முயற்சியும் நடக்கிறது. (நித்தம் நித்தம் மாறுகின்ற தெத்தனையோ... நெஞ்சில் நினைப்பதிலே நடப்பதுதான் எத்தனையோ)



ரூபன் சிறிய பாக்கினுள் வெங்காயம் வாங்கிக்கொண்டு வர ரூபி அதனை பத்திரமாக வாங்கிக்கொண்டு போக... ரூபி வெங்காயத்தைக் கொண்டுபோய் லொக்கரிலை வையுங்கோ என சொல்லி சிரிச்சா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி. வெங்காயம் விக்கிற விலை... 5 டொலர்.. சில இடங்களில் அதைவிடக்கூட என்று சொல்லி முடிப்பதற்குள்... இப்ப எங்கடை எப்பாட்மென்ரிலை பொரியல் கரியல் மணமில்லை என அனுங்கினா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

கலிபோர்னியாவில் தீ, வெள்ளம், காட்டுத்தீ, பயங்கரவாதத்தாக்குதல்... மனித பேரழிவிற்கு மேலாக இயற்கை அழிவு போட்டி போடுகிறது.



உலகில் முக்கால் பங்கு நீர். கால் பங்கு நிலத்தில் வளமுள்ள விவசாய நிலம் எவ்வளவு? அதற்குள்ளும் சண்டை நடக்கும் இடம், அங்கு விமானத்திலிருந்து வீசப்படும் குண்டுகள், எறிகணைகள் வெடித்து அழிவை ஏற்படுத்துகின்றன. அப்போது வெளிப்படும் கந்தகம் ஏனைய நச்சுத்தன்மையுள்ள இரசாயன பொருட்கள் மண்ணில் கலந்து விடுகின்றன. நச்சுக்கலவை கொண்ட மண்ணில் பல வருடங்களுக்கு விவசாயம் செய்யமுடியாது. அதனையும் மீறி அம்மண்ணில் விவசாயம் செய்து பெறப்படும் மரக்கறிவகைகள், பழவகைகள் உண்ணக்கூடியதா? இல்லையா? என பலருக்க தெரியும்? ஆனால் அதுபற்றி கதைக்கமாட்டார்கள். 2ம் உலகமகா யுத்தத்தின்போது ஜப்பானில் வீசப்பட்ட அணுகுண்டின் தாக்கம் அந்தப்பகுதியில் இப்பொழுதும் இருக்கிறதாம்.



நாம் அன்றாடம் உண்ணும் உணவில், பருகும் குடிவகைகளில் எத்தனை ரசாயனப் பொருட்கள், நச்சுக்கொல்லிகள் உள்ளதென்பதை கடந்தவாரம் கனடா வந்திருந்த டாக்டர் சிவராமன் அவர்கள் புள்ளி விபரத்துடன் கூறியதைக் கேட்டதிலிருந்து உலகர் குழாம் மிகவும் அவதானமாகவே இருக்கிறது.



தினமும் நாம் அருந்தும் தேநீரில் (தேயிலையில்) எத்தனை வகை நச்சுக்கொல்லிகள்... மரக்கறி பழவகைகள் பாதுகாக்கப்படுவதற்காக அதன்மேல் பாவிக்கப்படும் உடல் நலத்தைப்பாதிக்கும் பயங்கர ரசாயனப் பொருட்கள் எமக்குத் தெரியாமலே தினமும் அவற்றை உட்கொள்கிறோம்.

எமக்குத் தெரிந்து பாவிக்கும் சிகரெட், மதுபானம், கஞ்சா, போதை வஸ்துக்கள் ஒருபுறம். தெரிந்திருந்தும் பாவிக்காமல் இருக்கிறோமா.?

யாழ்ப்பாணத்தில் போர்க்காலத்தில் இடம் பெயர்ந்தோர் எத்தனை... இருப்போர் எத்தனை... இறந்தோர் எத்தனை என்ற புள்ளி விபரத்தைவிட யாழ். மக்கள் அதிகம் மது பாவிக்கிறார்கள் என்ற செய்தி முன்னணி வகிக்கிறது.

கனடாவில் கூட கஞ்சாவை அனுமதிப்பதும் அதிக மதுபான விற்பனை நிலையங்களை திறக்கவும் அரசு முயற்சிக்கிறது.

'விளையாட்டும் வினையும்'

உலக மகா யுத்தம் முடிந்து பல வருடம் ஆகிவிட்டது. போரும் அதன் வலியும் நன்கு உணர்ந்தவர்கள் ஐரோப்பிய மக்கள். அதனால்தான் ஆரம்பகாலங்களில் ஈழத்தமிழர் பலர் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டனர். ஆனால் இன்று விளையாட்டுப் போட்டியின் வெற்றி தோல்வியில் பார்வையாளர்கள் முட்டிமோதி பொலிசாரின் கண்ணீர்ப்புகை குண்டாந்தடி பிரயோகத்தில் போய் முடிந்திருக்கிறது.



ஓடி விளையாடு பாப்பா ஒருவரையும் அடியாதே பாப்பா. அன்னம்மாக்கா நியூஸ் வாசிச்சனீங்களே? மட்டக்களப்பில் காத்தான்குடியில் உணவகம் ஒன்றில் வாங்கிய சாப்பாட்டு பொட்டலத்தில் பல்லி இருந்ததை கண்டுபிடித்ததைத் தொடர்ந்து சுகாதாரப்பகுதியினரிடம் முறைப்பாடு செய்ததால் உணவகத்திற்கு சீல் வைச்சிட்டினமாம் என்றா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

எல்லோருக்கும் பலன் சொல்லுற பல்லிக்கும் உணவக முதலாளிக்கும் உணவு வாங்கியவருக்கும் 'பாட் லக்' என்றா ஐ பொட் அகிலாண்டேஸ்வரி.

அமெரிக்கா உலகநாட்டின் பிரச்சினையை உளவாளிகளை வைத்துக் கண்காணித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அமெரிக்காவில் அங்கிங்கெண்ணாதபடி எங்கும் துப்பாக்கிச்சூடு... போன்ற சம்பவங்கள் தினம் தினம் நடக்கின்றன. பெற்றோர் எவ்வளவு கவனமாக இருந்தாலும்.. பிள்ளைகளை கவனத்துடன் கண்காணித்தாலும் பலவித அசம்பாவிதங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றது.

மிருகக்காட்சிச்சாலையில் ஒரு சிறுவன் கொரில்லா (மனிதக்குரங்கு) அடைக்கப்பட்ட கூட்டினுள் விழுந்ததால் பையனின் பாதுகாப்பிற்காக அந்தக் கொரில்லாவை சுட்டுக்கொன்றனர். வேறொரு சம்பவத்தில் முதலை ஒரு சிறுவனை பிடித்திருக்கிறது.

யாரைக்குறை சொல்வது? இந்த வாரம்கூட வீட்டிலே இருந்த சிறுவனை அவர்களது வளர்ப்பு நாய் தாக்கி பையன் இறந்துவிட்டான். யாரைக் குறை சொல்வது?

ஞாபகம் இருக்கிறதா யூலை 1...15




1. கனடா டே. 1867 (149 வது ஆண்டு)

1. வெள்ளி பத்திரிகை வரதர் பிறந்தநாள். (1924…2006)

2. சர்வதேச குழந்தைகள் தினம்.


3. 1842இல் யாழ்ப்பாணக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.




4. வட அமெரிக்கத் தமிழ்ச்சங்க பேரவையின் முதலாவது தமிழ் மகாநாடு பென்சில்வேனியாவில் நடைபெற்றது.

4. சுவாமி விவேகானந்தர் நினைவுதினம். (1863..1902)

4. ஐக்கிய அமெரிக்க விடுதலை நாள். 1776



5. கரும்புலிகள் தினம். 1987 யூலை 5. (நெல்லியடியில் இராணுவமுகாம்மீது மில்லர் முதலாவது தற்கொலைத் தாக்குதல்)

6. தவில் மேதை இணுவில் என். ஆர்.சின்னராசா நினைவுதினம். (1934-1991)

8. அரிச்சந்திரா புகழ் நடிகமணி வி.வி.வைரமுத்து நினைவுதினம். (1924-1989)



11. 1977இல் உலகத்தின் 7 வது அதிசயமாக தாஜ்மகால் அறிவிக்கப்பட்டது.

14. எம்.எஸ்.விஸ்வநாதன் நினைவு தினம். (24 யூன் 1928 - 14 யூலை 2015)



15. ஈழத்து நாதஸ்வரக் கலைஞர் என்.கே பத்மநாதன் நினைவுதினம் (1933-2003)

உங்களைச் சுற்றியுள்ள பல கோவில்களில் கொடியேற்றம் திருவிழா தேர் தீர்த்தம் பூங்காவனம் ஆலய தரிசனம் செய்யலாமே?

16. ஆடிப்பிறப்பு (ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே - நவாலியூர் சோமசுந்தரப்புலவர்)

# இதயம்...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

இன்று எத்தனையோ வகையான யோகப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ராஜ யோகா முதல் குண்டலினியோகா வரை மிகவும் கடுமையான யோகப் பயிற்சிகள் நடைமுறையில் உள்ளன. எல்லாம் செய்ய வேண்டுமென்பதல்ல. வயதுக்கு ஏற்ற, செய்யக்கூடிய பயிற்சிகளை செய்துவருவது மிக நல்லதாகும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக தொடர் மருத்துவப் பரிசோதனைகள் அவசியம். மருத்துவர் பரிந்துரைக்கும் சிகிச்சை முறைகளை தொடரவேண்டியதும் முக்கியம். குறிப்பாக உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, ரத்தக் கொழுப்பு போன்ற பாதகமான சூழ்நிலைகளை அறிதல் வேண்டும். சிலவேளைகளில் விசேட நிபுணரிடம் செல்ல நேரிடலாம். இவ்வாறான நடைமுறைகளை ஒழுங்காக செய்பவர்கள் இதயக் கோளாறுகளை தவிர்த்து கொள்ளலாம்.

# காதலிக்க வேண்டிய படங்கள்

### *Breathe In (USA)*

ரொரண்ரோவில் பல வீடுகளில் சர்வதேச மாணவர்கள் வந்து தங்கிப்போவார்கள். (foreign exchange student) இதற்கு தங்கும் வீடுகளின் சொந்தக்காரருக்கு சிறிய அளவு உபரிப் பணம் வழங்கப்படும். பலர் சிறுவர்களையே விரும்புவார்கள். உயர் பாடசாலைக்கு போகும் மாணவர்களை பலர் விரும்புவதில்லை. நியுயோர்க் நகரத்தின் புறநகர் பகுதிக்கு லண்டன்-இங்கிலாந்தில் இருந்து வரும் சர்வதேச மாணவியால் குடும்பத்தில் பல மாற்றங்களே நடக்கின்றது. சிதறிப்போகும் நிலைக்குச் செல்லும் குடும்பம் மீண்டும் இணைகின்றதா? இயக்குனர் Drake Doremus அழகிய கவிதை போல் காட்சிகளை நகர்த்துகின்றார். நடுத்தர வயதில் ஏற்படும் பாலியல் அவலங்களையும், இளம் வயது மன அழுத்தங்களையும் பார்வையாளர்கள் மத்தியில் ஒரு பதட்டம் ஏற்படும் வகையில் படமாக்கியுள்ளார். பரதன் இயக்கிய ஊஞ்சலாடும் உறவுகள் என்ற படத்தில் ஜேம்ஸ் பொண்ட் ஜெய்சங்கர் ஒரு பேராசிரியர். இவரும் நடுத்தர வயதில் ஒரு மாணவியால் ஈர்க்கப்படுகின்றார். இரு படங்களிலும் மாணவிகளே ஆசிரியரை அணுகுகின்றனர். ஆசிரியர்களின் நடுத்தர வயது பாலியல் நெருக்கடிகள் மாணவிகளின் பக்கம் சாய்ந்து விடுகின்றது.

சேளா என்ற பிக்குணியின் பாடல் இது
“உலகில் உள்ளவரை தப்பித்தல் ஏது?
தனிமையால் காணும் பலன்தான் என்ன?
இருக்கும் வரை இன்பம் அனுபவி
கழிவிரக்கம் கடைசியில் வந்தேறும்.”
இதற்கு பதில் கூறுவது போல் கடுவெளிச் சித்திரின் பாடல்
“செப்பரும் பலவித மோகம்-எல்லாம்
சீயென் றொறுத்துத் திடங்கொள் விவேகம்”.

### *Don’t fool with love*

காதல் பற்றிய ஆய்வின் 48 வது வாசகம்

பிறிதொரு உடலை எதிர்கொள்வதை நாங்கள் தவிர்த்து வந்தோம் - பொருண்மையின் முழு பரிமாணங்களோடு ஒன்றின் வெளிப்பாடு நிகழுமெனில் - அது சூழலின் மற்ற இருப்பு நிலைகளுக்கு அச்சுறுத்தலாய் ஆனது. இரண்டு உடல்களின் ஒன்றிணைத்த இயக்கம் என்றோ தடைப் பட்டுப் போனது – எனினும் சுமத்தப்பட்ட கட்டளைகளை மீற இணைவுறுதல் அடிக்கடி நிகழ்ந்தன. இரண்டு உடலுறுப்புக்களின் ஒன்றின் மரணம் தவிர்க்க முடியத தாய் இருந்தது. எனவே மண்டலத்தில் ஆங்காங்கே அநாமதேய பிணங்கள் கிடந்தன. சுக உடல்களை தவிர்ப்பதை விட பிணங்களை தவிர்த்து உலவுவது கடினமானதாய் இருந்தது.



“முன்பு ஒரு காலத்தில் நூற்றியெட்டு கிளிகள் இருந்தன” – ரமேஷ் - பிரேம் - என்ற நூலில் இருந்து ஆண் மொழியின் ஒவ்வொரு அசைவும் அதிகாரத்தையும் கைப்பற்றுதலையுமே இயக்கமாகக் கொண்டு இயங்குகின்றன. இது காதலுக்கும் வேறுபட்டதல்ல. காதல் என்பதும் பற்றுதல், ஆக்கிரமிப்புச் செய்தல் என்றே கருதலாம். காதலினுள் சுய நலம் உள்ளது.

நோபல் பரிசு வென்ற Gabriel Garcia Marquez சிறு கதைகள் மூன்றை Don't fool with love என்ற பெயரில் படமாக்கி உள்ளனர். கொலம்பியாவில் பிறந்து வளர்ந்து பின்னர் மெக்சிக்கோ நகரில் வாழ்ந்தார் காசியா. இவரது பிரபல நாவலான Love in the Time of Cholera என்ற நாவலில் குறிப்பிட்ட சில விடயங்கள் “ஒரு திருமணத்தில் எழும் பிரச்சனைகள் உடலுறவின் பின் தீர்ந்து, காலையில் மீண்டும் ஆரம்பமாகி விடும்”, “ஒரு மனிதனுக்கு இரண்டு மனைவிகள் தேவை, ஒன்று காதலிப்பதற்கு, மற்றையது சட்டை பொத்தான் தைப்பதற்கு” இப்பொழுது காசியாவிற்கும் காதலுக்குமான உறவு புரிந்திருக்கும். இப்படத்தின் முதலாவது கதை 27 நிமிடங்கள் கொண்ட “இரு பக்க கண்ணாடி” (The Two Way mirror) .

சுசனா இளம் பெண். இன்னும் மூன்று கிழமைக்குள் திருமணம் நடைபெறவுள்ளது. பழைய பொருட்கள் விற்கும் கடை ஒன்றில் இருந்து 1800 களில் செய்யப்பட்ட கண்ணாடியிலான அலுமாரியை வாங்கி வந்து தனது அறையில் வைத்திருக்கின்றாள். திருமணத்திற்கு 21 நாட்கள்

## தூறல்

**- வானரன் -**

உள்ளன. அன்றிரவு அவளது கண்ணாடிக்குள் இருந்து 1863ல் வாழ்ந்த போர் வீரன் நிக்கலஸ் வருகின்றான். முதலில் அவனை வெறுத்தாலும் பின்னர் இரவில் அவனுக்காக விசேடமாக சமைத்து கண்ணாடி முன் மேசையிட்டு இருவரும் சாப்பிடுகின்றனர். இதன் பின்னர் இவர்களது சந்திப்பு ஒவ்வொரு நாளும் தொடர்கின்றது. காதலை நவீன காலத்து மணமகன் தெரிந்ததை விட, அந்தக் காலத்து போர் வீரன் புரிந்தது அதிகம். காதலின் ஒரு குறுக்கு வெட்டை இப்படம் பிரதிபலிக்கின்றது. ஒரு சுய விசாரணை எனக் கூறலாம். இங்கு கண்ணாடி ஒரு முக்கிய பாத்திரம். பிரதி-பலிப்பை மாத்திரம் இக்கண்ணாடி வெளிப்படுத்தவில்லை. மனித உணர்வுகளின் உருமாற்றங்களையும், அகத்தின் சுயத்தையும் வெளிப்படுத்துகின்றது. சில வருடங்களின் முன்னர் மலையாள எழுத்தாளர் முகுந்தனின் ஒரு சிறுகதை காதலைப் பற்றிய ஒரு சுய விசாரணையை வெளிப்படுத்தியது. அது போன்று இப்படமும் காதலை கேள்விக் குறியாக்கியுள்ளது. இப்படத்தை பார்த்து முடித்த பொழுது மறைந்த ஆத்மநாமின் கவிதை ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.

“வேறு யாருமில்லை
நான் தான்
எனக்கும் உங்களுக்கும் இடையில்
பல்லாயிரம் வருடம் வேறுபாடு…”







Experienced And New Sales Reps.
Are Welcome To Join Our Team...
கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது
Free...
Real Estate
Classes
HOMELIFE
HIGHER STANDARDS
416.321.6969
HomeLife GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. East Toronto ON. M1S 0C2
* Independently Owned & Operated


இப்பொழுது கிடைக்கிறது
கோடை கால தாகத்துக்கோர் இளநீர்..!
Niru BRAND®
Natural Ingredients!
Coconut Water
Made with
Real pieces of Coconut
COCONUT WATER
JUS DE COCO
MADE WITH REAL PIECES OF COCONUT
PLEASE CHILL BEFORE SERVING
40 Minuk Acres, Scarborough ON M1E 4Y6
Tel: 416 750 1976 | Fax: 416 750 8779 | info@niru.com | www.niru.com
AVAILABLE AT YOUR LOCAL COMMUNITY GROCERY STORE.


JRS AUTO TECH
OPEN 24 HOURS
7 DAYS A WEEK
MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS
VISA
Free Inspection & Diagnostics
Complete Car & Truck Care
Licensed Mechanics
Insurance Work Done
All Fluid Top Ups & A/C Repairs
Fuel Injection Service & Muffler/ Turbos
Courtesy Drop Off & Pick Up Available
Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash
SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors
TIRE SPECIALS
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35
FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV
BRAKE JOB
STARTING FROM
$159
WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans
Castrol
REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95
TRANSMISSION FLUSH
Starting From...
Imports
$74.95
Radiator Flush
$79.95
Domestic
$149.95
ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection
2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech
*Prices subject to change. Valid with flyer.
Cannot be combined with any other offers.
designed by panchaldesigns.com 647.294.2963


NAVA LAW
PROFESSIONAL CORPORATION
Your trusted partner for decisions that matter
10 Milner Business Court,
Unit 210, Scarborough, ON M1B 3C6
416.321.1100
416 321 1107
info@nava.law
clientservice@nava.law




















**Free Real Estate Class - Call: 416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**www.vlambaram.com**
**www.tamilvanakkam.com**

